வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

# உதயன்

சுடர் 30 | கதிர் 148 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 10, வியாழக்கிழமை 23.04.2015



# பஸில் கைது

## மே 5 வரை விளக்கமறியல்

கொழும்பு, ஏப்ரல் 23
'திவிநெகும' திணைக்களத்தில் இடம்பெற்ற 70 மில்லியன் ரூபா நிதி மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் 6 மணிநேர விசாரணையின் பின்னர் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ உட்பட மூவர் நிதி மோசடி பொலிஸ் விசாரணைப் பிரிவினரால் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டனர். பக்.02

## இன்றுடன் முடிகிறது 100 நாள்

கொழும்பு, ஏப். 23
புதிய அரசின் நூறு நாள் வேலைத் திட்டம் இன்று டன் முடிவடைகின்றது. ஆயினும் நூறு நாள் வேலைத் திட்டத்தினுள் நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட பல விடயங்கள் செய்து முடிக் கப்படவில்லை. நூறு நாள்கள் முடிவில், நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தபோதும் அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, 'மாற்றத்துக்கு ஒன்றுபடுவோம் – மைத்திரி நிர்வாகத்தின் கீழ் 100 நாள்களில் புதிய நாடு' எனும் கருப்பொருளில் 100 நாள் வேலைத் திட்டம் ஜனவரி பக்.02



## ஜனாதிபதி இன்று முக்கிய உரை

யாழ்ப்பாணம், ஏப். 23
புதிய அரசின் நூறு நாள் வேலைத் திட்டம் இன்றுடன் முடிவுக்கு வரும் நிலையில் இன்று இரவு 9 மணிக்கு, நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முக்கிய உரையாற்றவுள்ளார். அனைத்து இலத்திரனி யல் ஊடகங்களிலும் ஜனாதிபதியின் இந்த உரை நேரடியாக ஒளிபரப்பப்படவுள்ளது.
புதிய அரசின் 100 நாள் செயற் பக்.02

## அரசமைப்புத் திருத்தங்கள் நிறைவேறியதுமே தேர்தல்

### மேற்கு நாட்டுத் தூதுவர்களிடம் கூறினார் மைத்திரி

கொழும்பு, ஏப்.23
அரசமைப்புத் திருத்தங்கள் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. பக்.02

**பதவி ஆசையில் உழலும் மஹிந்த**

பக்கம் 17

## மீன்பிடிக்க சென்றவர் சடலமாக மீட்பு

முள்ளியவளை, ஏப்.23
கேப்பாபிலவு, நந்திக் கடல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மூன்று பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் பக்.03

## மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்தவர் சாவு

வலி.வடக்கு, ஏப்.23
மோட்டார் சைக்கிளின் பின்புறம் இருந்து பயணித்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கீழே விழுந்ததில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் புன்னாலைக் கட்டுவன், ஈவினை வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்துள்ளது.
வீதியின் மேடு பள்ளம் கார பக்.02

## மின்னல் தாக்கி இளைஞர் உயிரிழப்பு

மன்னார், ஏப்.23
குளம் ஒன்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பக்.02

## வடக்கு காணி விடுவிப்பால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### இப்படிக் கூறுகின்றது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, ஏப். 23
வடக்கில் புதிய அரசு, காணிகளை விடுவிப்பதால் தேசிய பாது காப்புக்கு அச்சுறுத்தலான நிலைமை ஏற்படுகின்றது. பலாலி விமான நிலையத்தை சிவில் விமான நிலையமாக மாற்றுவதன் ஊடாக, இராணுவத்தினர் வடக்கில் முக்கிய கேந்திர நிலையத்தை இழக்கும் நிலை தோன்றியுள்ளது. – இவ்வாறு எச்சரித்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் பக்.02

## வடமாகாண கல்வி அமைச்சரையே அறியாத ஆசிரியர், மாணவர்கள்


### நேரில் சென்ற அவரை யாருமே கண்டுகொள்ளவில்லையாம்

யாழ்ப்பாணம், ஏப். 23
வடக்கு மாகாண கல்வி அமைச்சரை தெரியாத நிலையிலேயே இன்னமும் சில பாட சாலைகளின் ஆசிரியர்களும் – மாணவர்களும் உள்ளனர். கல்வி அமைச்சரை பக்.02

## மன்றை கலைத்து தேர்தல் நடத்துக

### மனோ , அசாத் சாலி, விக்கிரமபாகு அரசிடம் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு, ஏப்.23
19ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதைத் தடுக்கும் தற்போதைய நாடாளுமன்றைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்துவதன் மூலம் புதிய நாடாளுமன்றத்தை உருவாக்க வேண்டும். அதன்மூலம் ஜனாதிபதித் தேர்தலில் நாம் பெற்ற மக்கள் ஆணையை நிறைவேற்ற வேண்டும். – இவ்வாறு அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஏற்பாட்டாளர்களான மனோ கணேசன், அசாத் சாலி, விக்கிரமபாகு கருணா ரத்ன ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளனர்.
அந்த இயக்கத்தின் ஊடக சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், தேசிய நிறைவேற்றுச் சபை உறுப்பினருமான மனோ கணேசன் பக்.02



## கோத்தாவிடம் இன்று விசாரணை

கொழும்பு, ஏப்.23
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இன்று ஊழல் மோசடி திணைக்களத்தில் முன்னிலையாகவுள்ளார்.
இந்த நிலையில், நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற வளவுக்குள் உயர்பாதுகாப்பு வலயத்தில் மஹிந் தவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் இன்றும் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர் என அறிவித்திருந்த போதும், ஆர்ப்பாட்டம் மேற்கொள்வதற்கு கொழும்பு உயர் நீதிமன்றம் தடையுத் தரவு பிறப்பித்துள்ளது என்று தெரிய வருகின்றது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு மோசடி குற்றச்சாட்டின்பேரில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அழைப்பாணை விடுத்திருந்தது. பக்.02

## ரவிராஜ் கொலை சந்தேக நபர்களின் இரத்தமாதிரிகள் டிஎன்ஏ சோதனைக்கு

கொழும்பு, ஏப். 23
நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள கடற்படையைச் சேர்ந்த சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகள், மரபணுப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில், ரவிராஜ் பக்.02

# பஸில் கைது

முன்னாள் அமைச்சர் பஸிலுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் நிஹால் ஜயதிலக மற்றும் 'திவிநெகும' திணைக்கள நிறைவேற்று அதிகாரி ஆர். ஏ. ஜே. ரணவக்க ஆகிய மூவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியைத் தொடர்ந்து ஜனவரி 11ஆம் திகதி நாட்டைவிட்டுவெளியேறிஅமெரிக்கா சென்ற முன்னாள் அமைச்சர் பஸில், 100 நாள்களின் பின்னர் நேற்று முன்தினம் இலங்கை திரும்பினார்.
தனக்கு எதிராக முன்னெடுக்கவுள்ள விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளதுடன், 1931 முதல் அரசியலில் ஈடுபடும் ராஜபக்ஷ குடும்பம் திருடர்கள் அல்ல என்றும் விமான நிலையத்தில் வைத்து அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.
இந்தநிலையில், நேற்று முற்பகல் 10.50 மணியளவில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணியகத்தில் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் அவர் முன்னிலையாகியிருந்தார். அவரிடமும் அவரது அமைச்சின் முன்னாள் செயலாளர் நிஹால் ஜயதிலக மற்றும் 'திவிநெகும' திணைக்கள நிறைவேற்று அதிகாரி ஆர். ஏ. ஜே. ரணவக்க ஆகியோரிடம் நிதி மோசடி பொலிஸ் பிரிவினர் விசாரணை மேற்கொண்டனர்.
அதையடுத்து நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் முன்பாக, வீதித் தடைகள் போடப்பட்டு, கலகத்தடுப்பு பிரிவு காவல்துறையினரும், குற்றப்புலனாய்வுத் துறை அதி காரிகளும் குவிக்கப்பட்டிருந்தனர்.
முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை மேற்கொள்ளப்பட்ட 6 மணி நேர விசாரணையின் பின்னர் பஸில் உட்பட மூவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.
மூவரும் கடுவெல நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற–சி)

## மன்றை கலைத்து தேர்தல் நடத்துக

கருத்துத் தெரிவிக்கையில்,
"சுடுநீரில் விழுந்த நண்டுகளைபோல் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் நடந்துக்கொண்டுள்ளார்கள். பானை நீரில் நண்டுகளை போட்டு அடியில் தீயை பற்ற வைத்தால், ஆரம்பத்தில் மிதமான நீரில் நண்டுகள் குதூகலமாக நடனமாடும். ஆனால், நீரின் உஷ்ணம் அதிகரித்தவுடன், இந்த நடனம் நின்று, ஒப்பாரி ஓலம் கேட்க தொடங்கும். இதுதான் அன்று மஹிந்த ஆட்சியில் நடனமாடிய நண்டுகளுக்கு இன்று நடக்கின்றது."– என்று அவர் குறிப்பிட்டார்.
"எமது நல்லாட்சியின் பொருளாதார குற்றவியல் விசாரணை பிரிவு, இலஞ்சஊழல் விசாரணை ஆணைக் குழு ஆகியவற்றின் விசாரணைகள் இன்று, எட்டு முன்னாள் அமைச்சர்கள் தொடர்பில் முடிவுக்கு வந்துள்ளன. இவர்களில் சிலர் அடுத்த சில வாரங்களில் கைதாவார்கள். இந்த உண்மை இவர்களுக்கு தெரியும். இவர்களால் இன்று நாட்டை விட்டு தப்பி ஓடவும் முடியாது. அப்படியே ஓடினாலும், இன்று உலகில் இவர்கள் ஓடி ஒளியவும் முடியாது. இன்டர்போல் மூலம் மீண்டும் இங்கேயே கொண்டு வரப்படுவார்கள் என்பதும் இவர்களுக்கு தெரியும்."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
நாட்டை பணயக்கைதியாக பிடித்து வைத்திருக்கும், இந்த பழைய நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்குச் சென்று புதிய நாடா[illegible] மன்றத்தை அமைப்போம் என நாம் ஜனாதிபதி அவர்களிடம் கோரியுள்ளோம்."– என்றும் அவர் கூறினார். (ற)

## ரவிராஜ் கொலை சந்தேக நபர்களின் இரத்தமாதிரிகள் டிஎன்ஏ சோதனைக்கு

படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் படுகொலை தொடர்பாக, இரண்டு அதிகாரிகள் உட்பட நான்கு கடற்படையினர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் இரத்த மாதிரிகளே, மரபணுப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இந்தப் படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி தொடர்பான அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (ற–5)

## ஜனாதிபதி இன்று முக்கிய உரை

றிட்டம் இன்றுடன் முடிவடையும் நிலையிலேயே ஜனாதிபதியின் உரையும் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
முன்னதாக, ஏப்ரல் 23 ஆம் திகதி (இன்று) நாடாளுமன்றத்தைக்கலைத்து தேர்தல் அறிவிப்பு வெளியிடுவதாக, அரசு வாக்குறுதி வழங்கியிருந்தது. எனினும், 19 ஆவது திருத்தச்சட்டம் இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையில் – முக்கிய வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றுவதில் சிக்கல் எழுந்துள்ள நிலையில் – ஜனாதிபதியின் உரை இடம்பெறவுள்ளது.
ஜனாதிபதி தனது உரையில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அறிவிப்பை வெளியிடுவாரா அல்லது 100 நாள் செயற்றிட்டத்தின் சாதனைகள் குறித்தும், இயலாமை குறித்தும் நாட்டு மக்களுக்கு விளக்கமளிப்பாரா? என்ற எதிர்பார்ப்பு கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ளது. (ற–5)

## அரசமைப்புத் திருத்தங்கள் நிறைவேறியதுமே தேர்தல்

நேற்றுப் பிற்பகல் மேற்கு நாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அமெரிக்க பதில் தூதுவர் அன்ட்ரூ மான், பிரிட்டன் பிரதித் தூதுவர் லாறா டேவிஸ், ஜேர்மனி தூதுவர் ஜேர்ஜன் மோர்ஹாட் ஆகியோரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.
அந்தச் சந்திப்பின்போது, ஜனநாயகத்தை வலுப்படுத்தும், ஊழல் மோசடிகளை ஒழிக்கும் மைத்திரிபால சிறிசேனவின் கொள்கைகளுக்கு தமது நாடுகள் முழு ஆதரவளிக்கும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## வடக்கு காணி விடுவிப்பால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

வசந்த பண்டார.
"2002–2004ஆம் ஆண்டு காலப்பகுதியில், சர்ச்சைக்குரிய போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம், ரணில் விக்கிரமசிங்க அரசு தேசிய பாதுகாப்புக்குத் துரோகம் இழைத்தது. அதே போன்று, தற்போதைய அரசினாலும், வடக்கிலும் – கிழக்கிலும் உள்ள இராணுவத் தளங்கள் கைவிடப்படுகின்றன.
நிலங்களை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதற்காக, சம்பூரில் உள்ள கடற்படைத் தளத்தை அரசு ஏற்கனவே அகற்றியுள்ளது. எமக்கு கிடைத்துள்ள தகவல்களின் படி, சம்பூரில் நிலை கொண்டிருந்த சுமார் 400 கடற்படையினர், அங்கிருந்து விலக்கப்பட்டு, பூசாவுக்கு ஆனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்பாட்டின் கீழும் மேற்கொள்ளப்பட்டது. பின்னர், மூதூரில் விடுதலைப் புலிகளுடன் நடந்த சண்டையில் ஆயிரக்கணக்கான படையினர் கொல்லப்பட்டனர். தற்போதுள்ள தளம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கின்ற போதிலும், வேறு பொருத்தமான இடத்தில் தளம் அமைக்க இடம் ஒதுக்கப்படும் என்று மீள்குடியமர்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.
பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 400 ஏக்கர் காணிகளை அரசு ஏற்கனவே உரிமையாளர்களிடம் வழங்கி விட்டது. போரின் போது, வடக்கு – கிழக்கில் 33 ஆயிரம் ஏக்கர் தனியார் காணிகள் உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனம் செய்யப்பட்டிருந்தன.
போர் முடிந்த பின்னர், மஹிந்த ராஜபக்ஷ அரசால், 26 ஆயிரம் ஏக்கர் காணிகள் உரிமையாள[illegible] களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால் தான், ஏனைய காணிகளை முன்னைய அரசு ஒப்படைக்கவில்லை.
பலாலி விமான நிலையம், சிவில் விமான நிலைய மாக மாற்றப்பட்டால், இராணுவம் மற்றொரு கேந்திர நிலையை இழக்க நேரிடும்."– என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற–5)

## மின்னல் தாக்கி இளைஞர் உயிரிழப்பு

மாலை சிலாபத்துறை, பாலைக்குழி கிராமத்தில் நடந்துள்ளது. முஹமட் சாபாயுள்ளா ஜெசிம் (வயது–27) என்பவரே உயிரிழந்தவராவார்.
குறித்த இளைஞரும் அவரது சகோதரரும் குளமொன்றில் படகிலிருந்து மீன் பிடித்துள்ளனர். அப்போது கடும் மழை பொழிந்துள்ளது. அதன்போது ஏற்பட்ட மின்னல் தாக்கி குறித்த இளைஞர் குளத்துக்குள் விழுந்துள்ளார். தெய்வாதீனமாக சகோதரருக்கு பாதிப்பு எதுவும் நேரவில்லை.
சகோதரர் உடனடியாக இது குறித்து உறவினர்களிடம் கூறியுள்ளார். அவர்கள் குளத்துக்குள் தேடுதல் நடத்தியபோதும் உள்ளே விழுந்தவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நேற்றுமுன்தினம் மீண்டும் தேடுதல் நடத்தியபோது குறித்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–56)

## இன்றுடன் முடிகிறது 100 நாள்

மாதம் 10 ஆம் திகதியிலிருந்து ஜனாதிபதி பதவியேற்புடன் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
ஆனால் ஒரு நாள் முன்னதாகவே, ஜனவரி மாதம் 9 ஆம் திகதி பதவியேற்பு இடம்பெற்றது. நூறு நாள் திட்டத்தின் முடிவில் – அதாவது இன்று – நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று தேர்தலின்போது தெரிவிக்கப்பட்டிருந்தது.
ஆனாலும், 19 ஆவது மற்றும் 20 ஆவது திருத்தச் சட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகிய முக்கிய சட்டமூலங்கள் இன்னமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. நூறு நாள்களுள் இவற்றை நிறைவேற்றி, நாடாளுமன்றத்தைக் கலைப்போம் என்று புதிதாகப் பதவியேற்ற அரசு கூறி வந்தபோதும், நூறு நாள் தற்போது முடிவடைகின்ற நிலையில் அரசால் அவற்றை நிறைவேற்ற முடியவில்லை. (ற–5)

## மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்தவர் சாவு

ணமாகவே (பம்மிங்) கீழே விழுந்தார் என்று கூறப்படுகின்றது. ஒரு பிள்ளையின் தந்தையான கெங்காதரன் தவக்குமார் (மஜித், வயது–29) என்பவரே உயிரிழந்தவராவார். கீழே விழுந்து காயங்களுக்குள்ளான கெங்காதரன் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சுன்னாகத்தில் இருந்து புத்தூர் செல்லும் குறித்த வீதியானது வாகனங்கள் பயணிக்க முடியாத அளவு 'பம்மிங்' நிறைந்த வீதியாகக் காணப்படுகின்றது என்று பொது மக்கள் விசனம் தெரிவித்தனர். இதன் காரணமாக அடிக்கடி இந்தகைய விபத்துக்கள் குறித்த வீதியில் ஏற்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற–86)

## வடமாகாண கல்வி அமைச்சரையே அறியாத ஆசிரியர், மாணவர்கள்

யாரென்று தெரியாமல் – மூன்றாம் நபர் போல், ஆசிரியர்களும் – மாணவர்களும் நோக்கியுள் ளனர். மல்லாகம் மற்றும் ஏழாலைப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கு, நேரில் சென்ற கல்வி அமைச்சருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.
கடந்த செவ்வாய்க்கிழமை வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பா.கஜதீபன், அ.பரஞ்சோதி ஆகியோர் சென்றிருந்தனர்.
மல்லாகம் மற்றும் ஏழாலைப் பிரதேசங்களிலுள்ள இரண்டு பாடசாலைகளுக்குச் சென்றனர். அங்கு சென்ற அமைச்சருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. பாடசாலை வளாகத்தினுள் வாகனத்தில் சென்று அமைச்சரும், உறுப்பினர்களும் இறங்கினர். அமைச்சர்கள் வந்திறங்கியதையோ அல்லது பாடசாலை வளாகத்தினுள் வாகனம் வந்ததையோ எவரும்கண்டுகொள்வதாக இல்லை.
நேரடியாக பாடசாலை அதிபரின் அறைக்கு அமைச்சர் சென்றார். அங்கு அதிபர் இல்லாமல் அறை வெறுமனே இருந்துள்ளது. அருகிலுள்ள வகுப்பறைகளுக்குள் சென்றபோது, ஆசிரியர்கள் அரட்டையடித்துக் கொண்டிருந்துள்ளன[illegible] மாணவர்கள் அவரவர் இஷ்டப்படி பாடசாலை வளாகத்தினுள் திரிந்து கொண்டிருந்துள்ளனர்.
அங்கு திரிந்த மாணவர்களோ அல்லது ஆசிரியர்களோ, கல்வி அமைச்சர் வந்திருக்கின்றார் என்பதை அறியாமல், யாரோ மூன்றாம் நபர் பாடசாலைக்குள் உலாவுகின்றார் என்ற நினைப்பில் தமது செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளனர்.
பாடசாலை மாணவர் ஒருவரிடம், கல்வி அமைச்சர் வந்திருக்கின்றார் என்று ஆசிரியர்களிடம் தெரிவிக்குமாறு, மாகாண சபை உறுப்பினர் தெரிவித்துள்ளார். அதற்கிடையில் பாடசாலை அதிபர் அங்கு வந்துள்ளார். அவரிடம் கல்வி அமைச்சர், பாடசாலையின் நிலைமை தொடர்பில் தனது கவலையைத் தெரிவித்துள்ளார்.
பாடசாலைக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட கணினி ஆய்வுகூடம் 60 கணினிகளுடன் மூடப்பட்டிருந்தமையையும் அவதானித்த கல்வி அமைச்சர், இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபருக்கு பணிப்பு விடுத்துள்ளார். (ற–5,86)

## கோத்தாவிடம் இன்று விசாரணை

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு பணம், பதவி வழங்கி கட்சி மாற்றப்பட்ட குற்றச்சாட்டுக்காக மஹிந்தவிடமும், எவன் கார்ட், ரத்னா லங்கா ஆயுத களஞ்சியம் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவிடமும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஊழல் மோசடி ஆணைக்குழு இருவருக்கும் அழைப்பாணை விடுத்திருந்தது.
அதன்பின்னர் மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய போராட்டம் காரணமாக, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் மஹிந்த முன்னிலையாக வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஆணைக்குழு அதிகாரிகள் அவரது வீட்டுக்கே சென்று விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்றும் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.
இந்நிலையில், ஆணைக்குழு விடுத்துள்ள அழைப்பாணை பிரகாரம் இன்று கோத்தபாயவிடம் விசாரணைகள் மேற் கொள்ளப்படவுள்ளன. (ற–சி)

# 25 ஆண்டுகளின் பின்னர் வளலாய் அ.மி.த.க.



வலி வடக்கு, ஏப். 22
கடந்த இருபத்தைந்து வருட கால போர் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக இயங்காதிருந்த வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வட மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு அலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசாவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் கே.ரவீந்திரன் தலைமை யில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான அ.பரம்சோதி, பா.கஜதீபன், கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பணிப்பாளர் செ .உதயகுமார், யாழ்ப்பாணம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் எஸ்.தெய்வேந்திரராசா, கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எ.சற்குணராசா உட்படப்பலர்மங்களவிளக்கேற்றினார்கள். அதனைத் தொடர்ந்து தற்காலிக பாடசாலை கட்டடத்தை கல்வி அமைச்சர் நாடா வெட்டித் திறந்து வைத்தார். (ற-86)

# சட்டவிரோத மதுபானமே தற்போதுள்ள பிரச்சினை

## கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.23
கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுமக்கள் கலந்து கொள்ளும் சகல கூட்டங்களிலும் முன்வைக்கப்படுகின்ற ஒரே ஒரு பிரச்சினையாக சட்டவிரோத மதுபானம் ஒழிக்கப்படவில்லை என்னும் பிரச்சினையே காணப்படுகின்றது.– இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திர தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸாரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயந்த டி சில்வாவின் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பெண்கள் பிரிவில் அரச உத்தியோகத்தர்கள், பொலிஸாருக்கிடையே நேற்று நடத்தப்பட்ட கலந்து ரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறுகின்ற பொதுக் கூட்டங்களில் பொது மக்கள் குறிப்பாக குடும்பப் பெண்கள் முன்வைக்கும் முக்கிய பிரச்சினையாக இந்த சட்டவிரோத மதுபானம் ஒழிக்கப்படவில்லை என்பதே காணப்படுகின்றது. அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கிளி நொச்சிக்கு வருகை தந்திருந்த போதும் மக்களால் இந்தப் பிரச்சினை சுட்டிக்காட்டப்பட்டது. அது போன்று நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலும் இந்தப் பிரச்சினை பற்றி பேசப்பட்டது. இது போல் பல இடங்களில் தற்போது சட்டவிரோத மது உற்பத்தியே பேசப்படும் ஒரு முக்கிய விடயமாக மாறியுள்ளது.

இந்த சட்டவிரோத மது உற்பத்தியை இல்லாது ஒழிப்பதற்காக மது வரித்திணைக்களத்திலும் பார்க்க கிளிநொச்சி மாவட்ட பொலிஸார் 100வீதம் செயற்படுகின்றனர். அத்தோடு பொலிஸார் பிடித்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் பட்சத்தில் அவர்கள் தண்டப்பணம் செலுத்தி விட்டு வந்து மறுநாளே மீண்டும் அதே தொழிலை செய்கின்றனர். நீதிவானுடனும் இது தொடர்பில் நாங்கள் பேசியுள்ளோம். இந்த குற்றங்களுக்கு அதிக பட்ச தண்டனைகள் தற்போது விதிக்கப்பட்டு வருகின்றன. இந்த சட்டவிரோத மது உற்பத்திகளை பிடிக்காது விட்டால், ஒழிக்காமல் விட்டால் மக்களுடைய உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாப்பது கடினமானதாக அமையும்”– என்றும் அவர் தெரிவித்தார். (ற-21)

# 15 வயதுச் சிறுமியை மணம்புரிய கடத்திய 15 வயது சிறுவன்

பளை, ஏப். 23
15 வயது 6 மாதம் வயதுடைய சிறுவன் ஒருவன், அதே வயதுடைய சிறுமி ஒருவரைத் திருமணம் செய்யும் நோக்கத்தில் காதலித்துக் கடத்திச் சென்றுள்ளான். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. தமது மகளை கடத்திச் சென்றுள்ளதாக பெண்ணின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அதையடுத்து நடவடிக்கை எடுத்த பொலிஸார் இருவரையும் வன்னிப் பகுதியில் உறவினரின் வீடொன்றில் வைத்து மறுநாள் கைது செய்துள்ளனர்.

அன்றையதினம் இரவு பொலிஸார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது சிறுவனை அச்சுவேலி சிறுவர் பராமரிப்பு நிலையத்திலும் சிறுமியை பெற்றோரிடமும் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ற-9)

# குருதிக்கொடை பலர் உயிரை காப்பாற்றும்

## குறுதிக் கொடை நிகழ்வில் தாதிய விரிவுரையாளர் சி.ஜெயக்குமார் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.23
இரத்ததானம் செய்வதால் எமது மக்கள் பலரது உயிர்களைக் காப்பாற்றுகிறோம் என்பது குருதிவழங்குநர்களுக்கு பெரும் மகிழ்வையும் கௌரவத்தையும் கொடுக்கும். சமூகத்தில் இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் இரத்ததானம் ஒழுங்கு செய்யப்படுமாக இருந்தால் ஒரு போதும் குருதித் தட்டுப்பாடு ஏற்படாது. – இவ்வாறு தாதியர் பயிற்சிக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ஜெயக்குமார் தெரிவித்தார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ்.தாதியர் கல்லூரியில் இரத்ததான நிகழ்வு நேற்று இடம் பெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்திய சாலைத் தாதியரும் தாதியர் கல்லூரி மாணவரும் இணைந்து இரத்த தானம் செய்து வருகின்றனர். 2013 இல் 89 பேரும் 2014 இல் 139 பேரும் இரத்த தானம் வழங்கியதோடு இம்முறை 100 இற்கும் மேற்பட்டோர் இரத்த தானம் வழங்குகின்றனர்.

கடந்த காலங்களில் பிற மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று பெறவேண்டிய சிகிச்சைகள் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் பெறமுடிகிறது. அதனால் யாழ். போதனா வைத்தியசாலையில் குருதிக்கான தட்டுப்பாடு தொடர்ந்து காணப்படுகிறது. இந்த மாதம் பிற பகுதிகளிலுள்ள இரத்த வங்கிகளில் இரத்தத்தைப் பெற்றே பயன்படுத்த வேண்டியுள்ளது. முன்னரைவிட இங்கு சிகிச்சைகள் அதிகமாக இடம் பெறுவதனால் அதற்கான இரத்தத்தின் தேவை – இங்குள்ள மக்களுக்கான இரத்த தேவை அதிகரித்துள்ளது. அதனால் பிற ரத்த வங்கிகளில் யாழ்.போதனா வைத்தியசாலை தங்கியிருக்க வேண்டியுள்ளது.”– என்றும் அவர் குறிப்பிட்டார்.

“தாதியர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து நோயாளர் மீதுள்ள அதீத அன்பால் தமது குருதி யைத் தானமாக வழங்கி சமூகம் மீதான தமது அக்கறையை வெளிப்படுத்தி வருகின்றனர். இன்றைய சமூகத்தில் உள்ள பிரச்சினை குருதி வழங்குவதால் ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என்பதே. அதனைப் புறந் தள்ளுமுகமாக தாதியர்கள் இரத்ததானம் செய்கின்றனர்.”– என்றும் அவர் கூறினார். (ற-4)

# மீன்பிடிக்க சென்றவர் சடலமாக மீட்பு

சௌந்தரராஜன் (வயது–37) என்பரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் மீன்பிடிக்கச் சென்ற சௌந்தரராஜன் காலையில் வீடு திரும்பாததை அடுத்து கிராம மக்களும் இராணுவத்தினரும் தேடுதலில் ஈடுபட்டனர். அப்போது கரையில் இருந்து 300 மீற்றர் தொலைவில் வலையில் கால் சிக்கிய நிலையில் சௌந்தரராஜன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து முள்ளியவளைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். மாவட்ட நீதிவான் முகமட் சம்சுதீன் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டதுடன், உடலை உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் சேர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். உடல்மாஞ்சோலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ற-433)

# அபிவிருத்தியில் புறக்கணிப்பு என வட.கிழக்கு மக்கள் போராட்டம்

நெல்லியடி, ஏப்.23
அபிவிருத்தி செயற்பாடுகளில் தமது பிரதேசம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் தமது அடிப்படை தேவைகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் உள்ளது என்றும் குற்றஞ்சாட்டிய வடமராட்சி கிழக்கு மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக முற்பகல் 11 மணியளவில் ஆரம்பித்த இந்தக் கவன வீர்ப்புப் போராட்டம் சுமார் அரை மணித்தியாலம் நடத்தப்பட்டது.

வடமராட்சி கிழக்கு மக்கள் அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் அமைதியான முறையில் பதாகைகளைக் கையில் ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர். அனைத்துத் தரப்பினராலும் தமது பகுதி புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

வடமராட்சி கிழக்குக்கு தனியான பிரதேச சபையை உருவாக்கி தர கோருதல் நகரங்களை இணைக்கும் உள்ளக வீதிகளை அமைத்து தர கோருதல் வீட்டுத் திட்டங்கள் வழங்க கோருதல், வடமராட்சி கிழக்கில் வளங்கள் சுரண்டப்படுவதை தடுத்து வளப்பாதுகாப்பை மேற்கொள்ளல், இந்திய தென்பகுதி மீனவர்களின் அத்து மீறலைத் தடுத்தல் விவசாயிகளுக்கு மானியங்கள் சலுகைகளை வழங்க வலியுறுத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தல், தமது மருத்துவ தேவைகளுக்காக வைத்தியர் பிரச்சினை மற்றும் பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை உட்பட பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் முன் வைத்தனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட கட்சிகளின் பிரதி நிதிகள் சிலரும் கலந்து கொண்டனர். போராட்டத்துக்கு வந்திருந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் இந்தப் பிரச்சினைகள் குறித்து வடக்கு முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக உறுதியளித்ததை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். (ற-109)



# வெளிக்கொணரப்படும் உளப்பிரச்சினைகள் 5 வீதமானவையே

## கிளிநொச்சி மாவட்ட உதவி வைத்திய அத்தியட்சகர் ஜெயராஜ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.23

கடந்த நான்கு வருடங்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் 5 வீதத்திலும் குறைவான உளப்பிரச்சினைகளே வைத்தியசாலைகளுக்கு, அலுவலகங்களுக்கு கொண்டு வரப்படுகின்றன. மிகுதி 95 வீதமான உள சமூக பிரச்சினைகள் சமூகத்திலே புதைந்து கிடக்கின்றன. – இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட உதவி வைத்திய அத்தியட்சகர் ஜெயராஜ் தெரிவித்தார்.



சமூகத்திலே புதைந்து காணப்படுகின்ற 95வீதமான உள சமூக பிரச்சினைகள் நீண்ட நாள்களாக சமூகத்தில் இருந்து அவை மெருகூட்டப்பட்டு, முறுக்கேறி ஒருபோதும் எவராலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளாக உருவெடுக்கின்றன. அவை காலப்போக்கிலே பல்வேறு பிரச்சினைகளாக உருமாறி எங்களுடைய கண்காணிப்பில் வராது சிக்கல்களை உருவாக்கி விடுகின்றன. அவற்றைக் கையாள்வதற்கு மிகவும் கடினமான நிலையிலேயே அவை மேற்பரப்புக்கு கொண்டு வரப்படுகின்றன.– என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸாரின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பெண்கள் பிரிவில் நடைபெற்ற அரச உத்தியோகத்தர்கள், பொலிஸாருக்கிடையிலான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மிகவும் விருத்தி செய்யப்பட்ட உளப்பிரச்சினைகளை கையாள்வதற்கு பெரிய படையணி தேவைப்படுகின்றது. அந்த வகையில் ஏற்கனவே எங்களிடம் உள்ள படையணி இந்தப் பிரச்சினைகளை கையாள்வதற்கு, விகிதாசாரத்தின் அடிப்படையில் போதுமானதாக இல்லை. ஆகவே நாங்கள் மிகப்பெரிய சவால்களை எதிர்நோக்கியவர்களாக இருக்கின்றோம். முடிந்தளவுக்கு இந்தப் பிரச்சினைகள் விருத்திசெய்யப்படாமல் இருக்கின்றபோது அல்லது பெரிய நிலையில் சிக்கல்களுக்கு உள்ளாக முன்னரே நாங்கள் இந்த பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றை கையாள்வது தான் எதிர் காலத்திலே இந்தப் பிரச்சினைகளை இலகுவாக குறைந்த மனித வளத்தோடு சிறப்பாக கையாள்வதற்கு பொருத்தமானதாக இருக்கும். ஆகவே எங்களுடைய வேலை செய்கின்ற முறைமையில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும். அதற்காக சமூகத்திலே இந்தப் பிரச்சினைகளை ஆரம்பத்தில் இனம் காணக்கூடியவாறு எங்களுடைய வேலைத்திட்டங்களை மாற்றி அமைக்கவேண்டும். – என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

வைத்தியத்துறையிலே நடமாடும் சேவைக்கு செல்லும் போது உளப்பிரச்சினை உள்ளோர் கிராம சேவகர்களோடு பக்கத்திலே இருக்கின்றார்கள். அதனால்தான் இந்த சமூக பிரச்சி னைகள் பற்றிக் கேட்கின்றபோது அவர்களுக்கு இது பற்றிய தெளிவான அறிவு ஆற்றல் இல்லாமல் இருக்கின் றது. இது சுகாதாரம் மற்றும் ஏனைய நடமாடும் சேவை களிலும் இருக்கின்றது. ஆகவே இந்த இடத்தில் எங்க ளுடைய வேலைத்திட்டங்களை மாற்றாது போனால் தொடர்ந்து இனி வரப்போகின்ற காலங்களிலும் சமூக உளப்பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே போகும். – என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ற-21)

## சித்திரை திங்களிலும் திரண்டனர் பக்தர்கள்

தென்மராட்சி, ஏப்.23

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தின் சித்திரைத் திங்கள் பொங்கல் நேர்த்தியில் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களில் பங்குனித் திங்கள் உற்சவத்திலேயே அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களை மேற்கொள்வது வழமை. ஆயினும் முதன்முறையாகக் கடந்த திங்கட்கிழமை பெரும் எண்ணிக்கையான அடியார்கள் ஆலயத்தில் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினார்கள்.

பங்குனித் திங்கள் உற்சவத்தைப் போன்று பெரும் எண்ணிக்கையான அடியார்கள் ஆலயத்துக்கு வந்ததால் பொலிஸார் அழைக்கப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ற-9)

## பூட்டிய வீட்டுக்குள் புகுந்தவர்கள் கண்காணிப்பு கமராவால் சிக்கினர்



யாழ்ப்பாணம்,ஏப்.23

வீட்டுஉரிமையாளர் கொழும்புக்குச் சென்றிருந்த வேளை வீட்டுக்குள் புகுந்து திருட முயன்றவர்கள் கண்காணிப்பு கமராவின் உதவியுடன் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த மாதம் ஆறாம் திகதி கொக்குவில் கிழக்குப் பகுதியில் வித்தியாலய வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து வீட்டு உரிமையாளர் பூட்டியிருந்த அவரது பக்கத்து வீட்டின் கூரையின் மீது மாலை 7 மணியளவில் இருவர் ஏறிச் சென்றதை கண்டுள்ளார்.

குறித்த வீட்டின் உரிமையாளர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் கொழும்பில் இருந்துள்ளனர். இதுபற்றி அயல் வீட்டுக்காரர் தொலைபேசி மூலமாக வீட்டு உரிமையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து கொழும்பிலிருந்த வீட்டு உரிமையாளர் பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119இற்கு இதுபற்றி முறையிட்டுள்ளார்.

அவரது முறைப்பாட்டைத்தொடர்ந்து கொக்குவிலில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு பொலிஸார் சென்றபோது அவ்விடத்திலிருந்து திருடர்கள் தப்பியோடி விட்டனர். பின்னர் உரிமையாளர் கொழும்பிலிருந்து வந்து வீட்டில் பூட்டியிருந்த கண்காணிப்பு கமராப் பதிவுகளை பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

அதன்மூலம் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணப் பொலிஸார் இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கொக்குவில், அரியாலை மற்றும் சிலாபம் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-103).

## கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் அமர்வைப் புறக்கணித்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.23

கரைச்சி பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான மாரியப்பன் சுகந்தன் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நேற்று கரைச்சி பிரதேச சபையின் முன்னே நிலத்தில் இருந்தவாறு கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டார்.

இது வரைகாலமும் கரைச்சி பிரதேச சபையால் செய்யப்படாத வேலைத்திட்டங்களை கூறி அவற்றைச் செய்து தருவதாக உறுதி மொழி கூற வேண்டும் என்று கூறியே அவர் இந்தப் போராட்டத்தை அவர் முன்னெடுத்தார்.

கடந்த 10 நாள்களுக்கு முன்னர் மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட இரணைமடு சந்தை இன்னமும் திருத்தப்படவில்லை, மின்னிணைப்பு வழங்கப்படவில்லை, பொது மலசல கூடம் அமைப்பதாக கூறி மூன்றரைவருடம் ஆகியும் இன்னும் மலசலகூடம் கட்டப்படவில்லை, பொன்நகர், ஆனந்தபுரம், மலையாளபுரம், போன்ற கிராமங்களுக்கு எந்த அபிவிருத்தியும் பிரதேச சபையால் செய்யப்படவில்லை, சந்தைக்கு பெயர்ப் பலகைகள் இடப்படவில்லை எனவும், கரைச்சி பிரதேச சபை செயலாளர் இதற்கு இடைஞ்சலாக உள்ளார். எனவே அவரை மாற்ற வேண்டும் என்றும் அவர் கோரிக்கைகள் முன்வைத் தார்.

சிறிதுநேரத்தின் பின்னர் உபதவிசாளர் வழங்கிய உறுதி மொழியை அடுத்து போராட்டத்தை கைவிட்டு அமர்வில் கலந்து கொண்டார். (ற-21)

## மனநோயாளி ஒருவரின் சகோதரி அடைக்கப்பட்டார் என்பது தவறு

### வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரன் விளக்கம்

வவுனியா, ஏப்.23

வவுனியா பொது வைத்தியசாலையில் மனநோயாளியான தனது சகோதரனை சேர்ப்பிக்க வந்தவரின் பாதுகாப்புக் கருதியே அவர் அறையொன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டார். எந்தக் காரணம் கொண்டும் நாம் அவரை அடைத்து வைக்க வேண்டிய தேவை இல்லை. இந்தச் சம்பவம் திரிபுபடுத்தப்பட்டு சிலர் தவறாக விளங்கிக் கொண்டுள்ளனர்.– இவ்வாறு வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் மனநோயாளி ஒருவருக்கு 13 நாள்கள் சிகிச்சை வழங்கப்பட்டு, அவர் குணமடைந்ததாகக் கருதி அவரது சகோதரியிடம் ஒப்படைக்கப்பட்டார். ஆயினும் அன்றைய தினம் இரவே அவர் மீண்டும் சுகவீனமடைந்தார். அதையடுத்து நோயாளியின் சகோதரி கடந்த 17ஆம் திகதி நோயாளியை சேர்ப்பதற்கு வவுனியா பொது வைத்திய சாலைக்குக் கூட்டிச் சென்றுள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த சகோதரி மனநோயாளிகள் தங்க வைக்கப்படும் விடுதி அறையொன்றில் வைத்துப் பூட்டப்பட்டார் என்று அவரது மகன் வவுனியா பொலிஸாரிடமும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடமும், வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரனிடமும் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்துக் கேட்டபோதே வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இது தொடர்பில் எனக்குக் கடந்த சனிக்கிழமை முறைப்பாடு கிடைத்தது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு குறித்த மனநோயாளி மனநோயாளர் விடுதிக்குள் சேர்க்கப்பட்டமை உண்மையே."– என்று அவர் குறிப்பிட்டார்.

"செட்டிகுளம் வைத்தியசாலையில் மனநோயாளி ஒருவர் தூக்கிட்டு உயிரிழந்த சம்பவத்துக்குப் பின்னரும், எமது வைத்தியசாலையில் இருந்து மனநோயாளர்கள் மதில் பாய்ந்து ஓடும் சம்பவங்களை அடுத்தும் நாம் இறுக்கமான பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றோம்.

அடுத்து மனநோயாளிகளிடம் இருந்து அவர்களை அழைத்து வருபவர்களையும் பாதுகாக்கவேண்டிய தேவை உள்ளது. அதன்படியே நோயாளியின் சகோதரி பாதுகாப்பாக வைத்தியசாலையில் தங்கவைக்கப்பட்டார். எந்தக் காரணத்துக்காகவும் அவரை அடைத்து வைக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. இந்தச் சம்பவம் திரிபுபடுத்தப்பட்டுச் சிலர் தவறாக விளங்கிக் கொண்டுள்ளனர். நடந்த உண்மைச் சம்பவம் இங்குள்ளவர்களுக்குத் தெரியும்."– என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-402)

## தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிக்கும் முயற்சி தோல்வி

### சிங்கள மக்களின் வீடமைப்புத் திட்டத்துக்காக

யாழ்ப்பாணம், ஏப். 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்தில், தமிழ் மக்களின் 12 ஏக்கர் உறுதிக் காணியை சுவீகரித்து, சிங்கள மக்களுக்கு வீடமைப்புத் திட்டம் அமைத்துக் கொடுப்பதற்கு நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவுமாவட்ட உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் காணி உரிமையாளர்கள் இணைந்து, காணியை சுவீகரிப்பதற்காக அளவீடு மேற்கொள்ள எடுத்த நடவடிக்கையை எதிர்த்தன் காரணமாக, நிலஅளவைத் திணைக்களத்தினர் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கொக்கிளாய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட முகத்துவாரம் பகுதியில் 12 ஏக்கர் காணி உள்ளது. இந்தக் காணி ஆறு தமிழ் குடும்பங்களுக்குச் சொந்தமான காணியாகும். போரின் பின்னர், இந்தக் காணிகளில் சிங்கள மக்கள் தற்காலிகமாக வந்து குடியேறியுள்ளனர். மீன்பிடித் தொழிலுக்கு கொக்கிளாய் பிரதேசத்துக்கு வரும், சிங்கள மீனவர்களே இவ்வாறு தற்காலிகமாக குடியேறியுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் குறித்த 12 ஏக்கர் காணியை சுவீகரித்து, அதில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீடமைத்து சிங்கள மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான முதல் கட்டமாக, குறித்த் காணியை அளவீடு செய்வதற்கு நில அளவைத் திணைக்களத்தினரும், தேசிய வீடமைப்பு அதிகார சபையினரும் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அந்தச் சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் காணி உரிமையாளர்கள், தமது ஆவணங்களை நிலஅளவையாளர் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினருக்கு காண்பித்தனர். தமது உறுதிக் காணிகளை, வேறு யாருக்கும் வழங்க முடியாது என்று உறுதியாகத் தெரிவித்துள்ளனர். அப்போது அங்கு சிங்கள மக்களும் வந்து குவிந்தனர்.

அங்கு வந்த சிங்கள மக்கள், இது தங்களுடைய மூதாதையரின் காணிகள் என்று தெரிவித்துள்ளனர். இதன் போது, தமிழ் மக்களுக்கும் – சிங்கள மக்களுக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டு முறுகல் நிலை வரை சென்றுள்ளது.

காணி அளவீட்டு நடவடிக்கையைக் கைவிட்டால் மாத்திரமே அங்கிருந்து வெளியேறுவோம் என்று காணி உரிமையாளர்கள் உறுதியாக இருந்ததை அடுத்து தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மற்றும் நில அளவைத் திணைக் களத்தினர் அங்கிருந்து திரும்பிச் சென்றனர். (ற-5)



# உக்ரைன் தூதுவருடன் மங்கள சமரவீர சந்திப்பு

கொழும்பு, ஏப். 23

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை, புதுடில்லியில் உள்ள உக்ரைன் தூதுவர் ஒலெக்சான்டர் செவ்சென்கோ கொழும்பில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரான உதயங்க வீரதுங்க, உக்ரேனிய போராளிகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ததாக உக்ரைன் அரசு குற்றம் சாட்டியுள்ள நிலையிலேயே, இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.


உதயங்க வீரதுங்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை செய்வதற்காக அடுத்த மாதம், இலங்கையின் உயர்மட்ட விசாரணைக் குழுவொன்றை உக்ரைனுக்கு அனுப்புவது தொடர்பாக, இந்தப் பேச்சுக்களின்போது, ஆராயப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்கே, புதுடில்லியில் உள்ள உக்ரைன் தூதுவரை வெளிவிவகார அமைச்சு கொழும்புக்கு அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# இந்தோனேசியாவில் 2 இலங்கையர் கைது

ஜகார்த்தா, ஏப் 23

இந்தோனேசியாவில் போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டு இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களில் மூன்று இந்தோனேசியர்களுடன் இந்த இரண்டு இலங்கையர்களும் வெவ்வேறு தேடுதல் வேட்டைகளின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

விக்னேஸ்வரன் சுதர்சன் மற்றும் ஹனீபா மொஹமட் ரியாஸ் ஆகிய இலங்கையர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# பத்து ஆண்டுகளாக தலைவிரித்தாடியது அரச பயங்கரவாதம்

## அக்காலத்திலேயே தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டார்கள் கொல்லப்பட்டார்கள் என்கிறார் பொன்.செல்வராசா எம்.பி

எருவில்,ஏப் 23

கடந்த 10 ஆண்டுகள் காலமாக 2009 மே மாதத்திற்குப் பின்னர் கொடூரமான அரச பயங்கரவாதம் இந்த நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் தலை விரித்தாடியதை எவராலும் மறக்கமுடியாது. அவ்வாறான காலகட்டத்தில் எமது தமிழ் இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டும், காணாமல்போயும், கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்தார்.

எருவில் கண்ணகி விளையாட்டுக் கழகம், இளைஞர் கழகம், உதய நிலா கலைக்கழகம் ஆகிய மூன்று கழகங்களும் இணைந்து நடத்திய சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா கழகத்தலைவர் பு.உதயகரன் தலைமையில் கண்ணகி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

65 வருட காலமாக இந்த நாட்டிலே புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். இந்த நாட்டிலே தமிழர்களுக்குப் பிரச்சினை ஒன்று உள்ளது என்பதை தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

இந்த நாட்டில் உள்ள அனைத்துப் பாகங்களிலும் உள்ள மக்களால் மிகவும் விரும்பித் தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி தமிழர்களின் பிரச்சினையைத் தேசிய அரசின் மூலம் தீர்த்து வைக்கலாம் என எதிர்பார்த்து தனது செயற்பாட்டை முன்னகர்த்திக்கொண்டு வருகின்றார்.

ஆனால் தற்போது ஆளும் அரசில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை விட எதிர்க்கட்சி வரிசையிலே அதிகமானவர்கள் இருந்து கொண்டிருப்பதால் எதுவும் செய்ய முடியாமல் இருப்பதை உணர முடிகின்றது.

எதிர்வரும் காலம் தேர்தல் காலமாக அமைவதால் எமது மக்களும் இந்த விடயத்தில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். பல தசாப்த காலமாகப் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு என்ன வகையான உத்திகளைக் கையாளவேண்டும் என்பதை நாம் அனைவரும் ஒன்றிணைந்து சிந்தித்துச் செயற்பட வேண்டும்.



ஜனாதிபதி அண்மையில் லண்டனுக்குப் புறப்படுகின்றவேளை ஒரு அறிக்கையை விட்டிருந்தார். அந்த அறிக்கையில் கூறப்பட்ட முக்கியமான விடயம் என்னவென்றால், தமிழர்களுக்கு இந்த நாட்டில் பிரச்சினை உள்ளது. அதனைத் தீர்த்து வைக்கவேண்டிய கடமை எனக்கு உண்டு. காரணம் நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகியதில் அவர்களுக்கும் பங்குண்டு எனக் கூறியிருந்தார்.

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர்தான் வடக்கு-கிழக்கில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் அதிதிகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும் பங்கேற்கும் நிலை உருவாகியிருக்கின்றது. இந்த ஆட்சி மாற்றத்தின்மூலம் நாட்டின் பல பாகங்களிலும் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

கடந்த 10 ஆண்டுகள் காலமாக 2009 மே மாதத்திற்குப்பின்னர் கொடூரமான அரச பயங்கரவாதம் அனைத்துப் பாகங்களிலும் தலைவிரித்தாடியதை எவராலும் மறக்கமுடியாது. அவ்வாறான காலகட்டத்தில் எமது தமிழ் இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டும், காணாமல்போயும், கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள்.

அந்த வடுக்களில் இருந்து இதுவரை தமிழ் மக்கள் மீளமுடியாமல் அலைந்து திரிகின்ற வாழ்வு தற்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அதன் ஒரு கட்டமாக அண்மையில் அம்பாறை மாவட்டத்திலே காணாமல்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சென்று வாக்குமூலம் அளிக்காமல் வெளியில் இருந்து போராட்டங்களை நடத்திய வரலாறு தற்போதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

கடந்த 15 ஆண்டுகளாக பூஸா, வெலிக்கடை போன்ற சிறைச்சாலைகளில் பல இளைஞர், யுவதிகள் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்கள். இதனால் இவர்களது உறவுகள் சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். இதற்கான தீர்வு எப்போது கிடைக்கும் என தினமும் ஏங்கித் தவித்துக் கொண்டு இருக்கின்றார்கள்-என்றார். (த)

# நகர சபை தலைவரின் கொடும்பாவி எரிப்பு

திருமலை, ஏப் 23

திருகோணமலை நகரசபைத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு எதிரான ஆர்ப்பாட்ட பேரணியும் கொடும்பாவிஎரிப்பும் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக நேற்றுப் புதன்கிழமை இடம் பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற தொழிலாளர் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டு, நேற்றுக்காலை 10 மணியளவில் திருகோணமலை மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள நகரசபை வேலைப்பகுதியின் அலுவலகத்தின்முன்னால்இருந்துஇந்த எதிர்ப்புப் பேரணி ஆரம்பமானது.

இப் பேரணி, திருஞானசம்பந்தர் வீதி வழியாக சிவன் கோயிலடி ஊடாகஉட்துறைமுகவீதியில்உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தை அடைந்து, அங்கு வைத்து நகரசபைத் தலைவர் க.செல்வராஜாவின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த தொழிற்சங்கத் தலைவர் எஸ்.கண்ணன், திருகோணமலை நகரம் பெரியது. இங்கு சேகரிக்கப்படும் கழிவுகளை அகற்ற ஆளணிப் பற்றாக்குறை எனக் கோரி, மாகாண சபையில் பெற்ற தொழிலாளர் நியமனத்தை தனது உறவினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் வழங்கிய திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா, பின்னர் அவர்களை அலுவலகம் மற்றும் நூலகத்துக்கு அலுவலகப்பணியாளர்களாகக் கடமை புரிய வைத்திருந்தார்.

இதன் மூலம் தற்போது கடமையாற்றி வரும் தொழிலாளர்களுக்கு மேலும் பணிச்சுமை அதிகரித்துள்ளது.



மேலும் 25 வருடங்களுக்கு மேல் தொழிலாளர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு வழங்க வேண்டிய மேற்பார்வையாளர் பதவி உயர்வைத் தமது ஆதரவாளர்களுக்குத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி வழங்கியுள்ளார். இவருடைய சகல விடயங்களுக்கும் துணைபோகிறார் நகர சபை செயலாளர் ஏ.எல்.எம்.நபீல். எனவே இவரையும் இடமாற்றம் செய்ய வேண்டும்.

மேலும், தொழிலாளர் நலன் சார்ந்த விடயங்களில் பாரபட்சம் காட்டப்படுகின்றமை போன்ற பல குற்றச்சாட்டுகளை வைத்து தமக்கு நியாயமான தீர்வு வேண்டும் எனக் கோரி ஆளுநர் அலுவலகத்தின் முன்னால் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நீண்டகாலமாகத் தொழிலாளர் நலன் தொடர்பான பல பிரச்சினைகளை நகர சபை மற்றும் கிழக்கு மாகாணசபை மற்றும் ஏனைய உயர்மட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எமக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில், வடக்கு, கிழக்கு மாகாண சபை உத்தியோகத்தர்களின் சங்கமும் இணைந்திருந்தது. (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எல்லாக்காரியங்களும் அனுகூலமாகும். முக்கிய நபர்களின் சந்திப்பும் அவர்களால் உதவியும் கிடைக்கும். சுய நம்பிக்கை உண்டாகும். எடுத்த காரியங்களை செய்து முடிப்பதில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும்.

**இடபம்:** தொழில் வியாபாரத்தில் முன்னேற்ற வாய்ப்புகள் எதிரில் வந்து தோன்றும். வியாபாரம் தொடர்பான செலவு கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முக்கிய பொறுப்பு கிடைக்கலாம். செயற்றிறன் அதிகரிக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். பிரிந்து சென்ற குடும்ப உறுப்பினர் மீண்டும் வந்து சேரலாம். குடும்பத்தில் நிலவிய மனஸ்தாபங்கள் நீங்கும். உறவினர் மத்தியில் மரியாதை கூடும்.

**கடகம்:** முக்கிய பொறுப்புகள் கிடைக்கக்கூடும். பக்குவமான அணுகுமுறையினால் எந்தச் செயலிலும் வெற்றி பெறுவீர்கள். நினைத்த காரியத்தை செய்து முடிக்கும் சூழ்நிலை உருவாகும்.

**சிங்கம்:** வாழ்க்கையில் இருந்த அதிருப்தி நீங்கி பிடிப்பு உண்டாகும். எதிர்பார்த்த தகவல் வரும். இடமாற்றம் உண்டாகலாம். எதிர்பாராத திடீர் செலவு ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் அடுத்தவர்களால் திடீர் பிரச்சினை தலை தூக்கலாம். உங்களது கருத்துக்கு மாற்று கருத்து உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசுவது நன்மை தரும்.

**துலாம்:** மனதில் இருந்த சோர்வு நீங்கி, உற்சாகம் உண்டாகும். எதிர்பார்த்த தகவல் சாதகமாக வரும். எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நல்லது. பேச்சின் இனிமை, சாதுர்யம் இவற்றால் எடுத்த காரியங்கள் சாதகமாக முடிய உதவும்.

**விருச்சிகம்:** காரியங்களில் தாமதம் உண்டாகலாம். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையிலும் முழுக் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது.

**தனுசு:** குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. எந்தக் காரியத்திலும் ஈடுபடும் முன்பு திட்டமிட்டு செயற்படுவது நல்லது. பணவரத்து தாமதப்படும்.

**மகரம்:** தடைகள் நீங்கும். எதிர்ப்புகள் விலகும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கலாம். இடைநடுவில் நின்ற காரியங்களை தொடர்ந்து செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்:** திடீர் குழப்பம் ஏற்படலாம். தீ, இயந்திரம் ஆகியவற்றை கையாளும்போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைத்தாலும் அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் கவனத்துடன் செயலாற்றுவது நல்லது. குடும்பத்தில் சிறு சண்டைகள் உண்டாகலாம். பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது நன்மையைத் தரும்



## ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள்

அமெரிக்காவில் ஒரேசமயத்தில் 5 பெண் குழந்தைகளை கருத்தரித்து பிரசவித்த தாய் என்ற பெயரை டானியல்லி என்ற பெண் பெற்றுள்ளார்.

கடந்த வாரம் பிரசவமான இந்தக் குழந்தைகள் குறித்து சர்வதேச ஊடகங்கள் புதன்கிழமை செய்திகளை வெளியிட்டுள்ளன.

பிறந்த குழந்தைகளுக்கு ஒலிவா மேரி, அவா லேன், ஹஸெல் கிரேஸ், பார்க்கர் கேட், றிலே பெய்ஜி என பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. டானியல்லிக்கும் அவரது கணவர் அடம் பஸ்பிக்கும் ஏற்கனவே பி.ளேக் என்ற 3 வயது மகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிதாக பிறந்த 5 குழந்தைகளும் 4 நிமிட நேரத்தில் மருத்துவமனை சத்திரசிகிச்சைப் பிரிவில் பிரசவமாகியுள்ளன. மேற்படி குழந்தைப் பிரசவத்தில் 12 மருத்துவர்களைக் கொண்ட குழு பங்கேற்றிருந்தது.

கர்ப்பம் தரித்து 7 மாத காலத்தில் குறைப் பிரசவத்தில் பிறந்த அந்தக் குழந்தைகள் மருத்துவமனையில் விசேட பராமரிப்பு உபகரணத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

உலகில் தாயொருவருக்கு ஒரே சமயத்தில் 5 பெண் குழந்தைகள் கருத்தரித்து பிரசவமாவது 1969 ஆம் ஆண்டுக்குப் பின் இதுவே முதல் தடவையாகும்.

சில இரகசியங்கள்
ஒரு உறவு
முறிந்ததும்
வெளியாகின்றன...
சில உறவுகள் ஒரு
இரகசியம்
வெளியானதும்
முறிந்து விடுகின்றன...

I like

## ரிலாக்ஸா வாசியுங்க...

ஒரு காட்டுக்கு இரண்டு மரவெட்டுனர்கள் சென்றார்கள். மாலை மீண்டும் இருவரும் கூடும் போது ஒருவரிடம் அதிக விறகும் மேலும் அவர், அதிக களைப்படையாமலும் இருந்தார். மற்றொருவருக்கோ பயங்கர ஆச்சரியம். நம்மை போல தானே அவனும், அவனால் மட்டும் இப்படி இது சாத்தியமானது. ஆர்வம் தாங்காமல் அவனிடமே கேட்டு விட்டான்.

நண்பன் அவனிடம் கேட்டான், இந்த விறகுகளுக்காக நீ என்ன செய்தாய் என்று அவன் சொன்னான், இடைவிடாமல் வெட்டி கொண்டே இருந்தேன் என்று, சிறிதும் ஓய்வு இல்லாமலா என்று கேட்டான் நண்பன். ஆம்! அதிக விறகுகள் பெற வேண்டுமே. ஆனால் நீ கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி என்று கேட்டான்.

நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வேன் என்று சொன்னான் நண்பன் மறுநாள் அவனும் அதேபோல் ஓய்வு எடுத்து மரம் வெட்டினான், இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்ட முடியவில்லை. மறுநாள் மரம் வெட்டும் போது ஒளிந்திருந்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான்.

மறுநாள் மரம் வெட்டப் பிரிந்து சென்ற பின், அவன் நண்பனை பின் தொடர்ந்து சென்றான். நண்பனும் அரைமணி நேரம் மரம் வெட்டி விட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால் அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாரியை தீட்டிக் கொண்டிருந்தான்.




## 80 கோடியைத் தொட்டது வட்ஸ் அப்

வட்ஸ்அப் என்பது இன்றைய உலகில் இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்ட நிலையில் இதனைப் பயன்படுத்தி செயற்பாட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை 800 மில்லியனைத் தொட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 60 கோடியை எட்டிய வட்ஸ்அப் ஜனவரி மாதம் 70 கோடியை தாண்டியது. தற்போது 80 கோடியை தொட்டுள்ளது. மற்ற சமூக வலைத்தளங்களான ருவிட்டர் (28.8 கோடி), பேஸ்புக் (138 கோடி), இன்ஸ்டா கிராம் (30 கோடி) செயற்பாட்டு பாவனையாளர்களைத் தக்கவைத்துள்ளது.

தற்போது வட்ஸ்அப்பில் தொலைபேசி அழைப்பையும் மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.





## புதுக் கூட்டணி

சமந்தாவை பொறுத்தவரை கொஞ்சம் போல்டாக கருத்துக்களை சொல்பவர். இதனால் அவரிடம் நெருக்கமாக பழகுபவர்கள் குறைவுதான். தற்போது அவருடன் எமி கூட்டுச்சேர்ந்திருக்கின்றார்.

தனுஷ் நடித்துவரும் புதிய படத்தில் அவருக்கு ஜோடியாக சமந்தா நடித்து வருகிறார். இதில் மற்றொரு கதாநாயகியாக எமி ஜக்ஸனும் நடிக்கிறார். தனுஷ் – சமந்தா கெமிஸ்ட்ரியை விட சமந்தா – எமிக்கு இடையே கெமிஸ்ட்ரி நன்றாக செட் ஆனதால் இருவரும் தோழிகளாகிவிட்டனர்.

அடுத்து அட்லி இயக்கத்தில் விஜய் நடிக்கிறார். இந்தப் படத்துக்கான கதாநாயகி தெரிவுக்கு தலையை பிய்த்துக் கொண்டிருந்த அட்லிக்கு புது தோழிகள் சமந்தா–எமி ஜாக்ஸன் நினைவுக்கு வந்தனர். அவர்களை தனது படத்துக்கும் தேர்வு செய்துவிட்டார்.

இரண்டு படங்களிலுமே ராதிகா முக்கிய வேடத்தில் நடிக்கிறார். தற்போது சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் நடித்து வருகிறார். மே மாதம் மத்தியில் இதன் படப்பிடிப்பு முடிய உள்ளது. இதையடுத்து ஓகஸ்ட் மாதம் முதல் அட்லி இயக்கத்தில் விஜய் படப்பிடிப்பு தொடங்க உள்ளது.

# எதிர்வரும் சில தினங்களில் கடும் மழை பெய்யலாம்

கொழும்பு, ஏப்.23
நாட்டின் அனைத்துக் கடலோ ரங்களிலும் எதிர் வரும் சில தினங்களில் மாலை நேரங்களில் அல்லது இரவு வேளை யில் கடும் மழை பெய் யலாம் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. அத்துடன், மேற்கு, தென் மேற்கு கடலோரங்களில் காலையில் மழைக் கான சாத்தியம் நிலவும் எனவும் வானிலை அவதான நிலை யம் தெரிவித்துள்ளது.
இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் காற்று வீசுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படலாம் என்றும் அதன் வேகம் மணிக்கு 20 – 30 கிலோமீற்றர் வேகத்தில் வீசலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், நாட்டைச் சூழவுள்ள கடலோ ரங்கள் கடின மாகக் காணப்படாது என்றும் மிதமான கால நிலை யுடனேயே காணப்படும் என்றும், எதிர்வு கூறப்பட்டுள்ளது.
எனவே, கடலோரங்களில் மக்கள இரவு நேரங்களில் சற்று அவதானத்துடன் செயற்படு மாறு வானிலை அவதான நிலையம் தெரி வித்துள்ளது. (வ)

## நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த திட்டமிட்டு நடத்தும் நாடகம்

### கோத்தபாய குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.23
தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கு எதிரான செயற் பாடுகளால் நானும் எனது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்தவும் பெற்ற நற் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த புதிய அரசு திட்டமிட்டு நடத்தும் நாடகமே இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணை.
– இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செய லரான கோத்தபாய ராஜபக்ஷ.
முன்னைய ஆட்சிக் காலத்தில் தான் ஓர் அரச ஊழியராகவே இருந்தார் என்று தெரிவித்தி ருக்கும் அவர் சம்பளத்துக்கு மேலாக சில ரூபாக்களையேனும் தான் சேர்க்கவில்லை என்றும் கூறியுள்ளார்.
வெளிநாட்டு வங்கிகளில் தான் வங்கிக் கணக்கு களையோ அல்லது இரக சிய கணக்குகளையோ வைத்திருக்கவில்லை என்றும் அவர் தெரிவித் துள்ளார்.
மேலும் ஹுனுப்பிட்டிய வங்கியில்மட்டுமேதமக்கு கணக்கு இருக்கிறது என்றும், அந்தக் கணக்கு 30 வருடங்களின் முன் னர் சம்பளம் மற்றும் ஓய் வூதியத் தைப் பெறுவ தற் காகத் தொடங்கப்பட்டது என்றும்கோத்தபாயமேலும் கூறியுள்ளார். (வ)




யாழ். வடமராட்சி
கீழ் கரவை கிழவி தோட்ட விநாயகர் ஆலய
ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ
**மஹாகும்பாபிஷேகம்**
நாளை (24.04.2015) வெள்ளிக்கிழமை நடைபெறும்
**எம்பெருமானுக்கு எண்ணெய்க்காப்புச் சாத்தும்**
**வைபவம் இன்று (23.04.2015) வியாழக்கிழமை**
**காலை 8.00 மணி தொடக்கம் நடைபெறும்.**
விநாயகப் பெருமானுடன் முருகன், மகாலட்சுமி, லட்சுமி, நாராயணன், நவக்கிரக மூர்த்திகள், நாகதம்பிரான் சிலைகள்
பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன.
பக்தர்கள் அனைவரும் பங்குகொண்டு அருள் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.
இக் கும்பாபிஷேக பிரதம பிரதிஷ்டா குரு **சிவப்பிரம்ம ஸ்ரீ ராம் கெங்காதரக் குருக்கள்** (மயிலையா - லண்டன்) உடன் ஆலய பிரதம குரு **சிவஸ்ரீ யோகீஸ்வர கேதீஸ்வர சர்மா** இவர்களுடன் ஏனைய குருமார்களும் இணைந்து கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துவார்கள்.
கிழவி தோட்டம்,
கரவெட்டி.
ஆலய பரிபாலன சபையினர்.
(58476)(45.3.7)

**NDB**




**NDB**
மாபெரும் வாகன விற்பனை

வாகனங்களுக்கான சிறப்பு சலுகைக் கட்டணங்கள்

**ஏப்ரல் 24 வெள்ளிக்கிழமை மற்றும் ஏப்ரல் 25 சனிக்கிழமை**
**யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில்**

- இலங்கையின் அநேக முன்னணி வாகன இறக்குமதியாளர்களில் - அனைவரும் ஒரே இடத்தில்
- பரந்தளவிலான பதிவுசெய்யப்படாத வாகனங்கள்
- காப்புறுதி, வாகன மதிப்பீடு உள்ளிட்ட மேலதிக சேவை ஆலோசனைகள்
- தடைகளற்ற விசேட லீசிங் வசதிகள்

NDB யாழ்ப்பாணம்
அனோஜன் : 077 541 2595
ஜெரோம் : 077 309 9702

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

NDB வங்கி

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



கலாநிதி **தியாககெங்காதர குருக்கள்** (J.P)
கோவியோபதி வைத்திய கலாநிதியும் குமரன் சோதிட ஆய்வக ஸ்தாபகரும் கற்பகவிநாயகர் ஆலய பிரதம குருவும் ஆகிய இவருக்கு 18.04.2015 சனிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற விருதுவழங்கும் விழாவில்
**சாமஸ்ரீ தேசமானிய விருது**
வழங்கப்பெற்றமையையிட்டுப் பெருமையடைவதோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மருதடிப் பிள்ளையார் கோயில்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

**ஐடியல் கேட்டின் டெகோர்**
**(IDEAL CURTAIN DECOR)**
கற்பகப் பிள்ளையார் கோயில் வீதி
உரும்பிராய்
- 077 301 3239,
077 994 7466
யாழ்நகரில்





யாழ்நகரில் 80% கேட்டின் எங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
காரணம்: தராதரமான துணிகள், மலிவான வேலைப்பாடுகள், வெளிநாட்டுக் கேள்விகள் (Foreign orders) உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**சிறுநீரகம் தேவை**
**சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு உதவி செய்யுங்கள்**
சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மன்னார் உப்புக்குளத்தை வசிப்பிட மாகவும் கொண்ட 47 வயதுடைய பசுபதி வேல்முருகு ஆகிய இவருக்கு இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து உள்ளன. A.B Positive சிறு நீரகம் உடனடியாகத் தேவைப்படுகின்றது. தரவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
குறிப்பு: இந்த சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு மட்டும் 1500,000 (15 லட்சம்) தேவைப்படுகின்றது. இவ்வளவு பணத்தொகையை எம்மால் கொடுக்க வசதியில்லை. எனவே எனது கணவரைக் காப்பாற்ற உதவி செய்யும்படி தாழ்மையுடன்கேட்கின்றேன்.
திருமதி றஞ்சிதகுமாரி வேல்முருகு
ஹற்றன் நஷனல் வங்கி (HNB)
கணக்கு இல. 020020142272
(59045)(4.3.7)
தொடர்பு: 077 905 7821, 023 225 1287

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு பணிப்பாளர் நாயகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்

## எதிர்க்கட்சி எம்.பிக்கள் 116 பேர் கையொப்பமிட்ட பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஏப்.23

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்கவின் தன் னிச்சையான செயற்பாடுகள் தொடர்பாக விசாரணை நடத் தப்படவேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 116 பேர் கையொப்பமிட்ட பிரேரணை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை முன்னாள் அமைச்சரும், எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பி னருமான பந்துல குணவர்தன, சபாநாயகர் அனுமதி யுடன் விசேட கூற்றொன்றை முன் வைத்த பின்னரே இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு எதிரான மேற்படி பிரேரணையை சபா நாய கரிடம் கையளித்தார்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன் சபையில் கருத்துத் தெரி விக்கையில்;

"இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க தன்னிச்சை யாகச் செயற்ப டுகின்றார். ஆணைக் குழுவின் தலைவருக்குக்கூட தெரியாத நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளார்.

பிரதமர் ரணிலின் நெருங்கிய நண்பர் என்பதற்காக சிங்கப்பூர் பிரஜையான அர்ஜுன் மகேந் திரனுக்கு மத்திய வங்கி ஆளுநர் பதவி வழங்கப்பட்டது. அது போலவே பிரதமர் ரணிலின் மனைவியின் நெருங்கிய தோழி என்பதற்காகவே தில் ருக்ஷி டயஸ் விக்கிரம சிங்க வுக்கு இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசா ரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த தில்ருக்ஷி டயஸ் விக்கி ரமசிங்கவுக்கு எதிராக ஏற்கனவே பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. தற் போதைய அமைச்சர் மஹிந்த அமரவீர கூட இரு நிறுவனங்களில் சம்பளம் பெற்றதாக இவர் மீது குற்றஞ்சாட்டி முறைப் பாடு செய்துள்ளார்.

அதுமட்டுமன்றி, நக்கில்ஸ் மலைத்தொடர் பகுதி யில் பெறுமதிமிக்க காணி யைக்கூட சட்டவிரோதமாகப் பெற்றுக்கொண்டமை, சிசிடிவி கமரா பெற்றுக்கொண்டதில் செய்த மோசடி, பெறுமதிமிக்க கைத்தொலைபேசி மோசடி என அவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத் தப்பட் டுள்ளன.

இவ்வாறான குற்றச்சாட்டுக் குள்ளான ஒருவர் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக் குழுவின் பணிப் பாளர் நாயகம் பதவிக்குப் பொருத்தமற்றவர் என இந்த 116 எம்.பிக்களும் கருதுகின்றோம். அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு அழைப்பாணை அனுப்பிய விடயத் திலும் எவருடையதோ தூண்டுதலிலும், இவர் தன்னிச்சையாகச் செயற்பட்டிருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இவர் மீது எமக்கு நம்பிக்கை இல்லை.

எனவே, இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான தில் ருக்ஷி டயஸ் விக்கிரம சிங்க வின் செயற் பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இந்தப் பிரே ரணையில் கையொப்பமிட் டுள்ள நாடாளுமன்ற உறுப்பி னர்கள் 116 பேரும் சபாநாயக ராகிய உங் களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின் றோம்" என்றார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா இது பற்றிக் கூறுகை யில், "இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக் குழுவின் பணிப்பாளர் தன்னிச்சையாக செயற் பட்டிருப்பது உறுதிப் படுத்தப்பட்டிருப்பதனால் அவரை பதவியிலிருந்து விலக்க வேண்டும்" என்றார். (வ)

## சாயிபாபாவின் 4 ஆம் ஆண்டு நினைவுமுன்னிட்டு மக்களுக்கு சேவைகள்

வவுனியா, ஏப்.23

சத்தியசாயிபாபா சமாதியடைந்து நான் காம் ஆண்டு நிறைவடைவதையொட்டி, வவுனியா சத்தியசேவாநிலையத்தினால் பொது மக்களுக்கான பல்வேறு சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா வடக்கு, பட்டியிருப்பு அ.த.க. பாடசாலை மாணவர் களுக்குகடந்த 13 ஆம் திகதி புத்தகப்பைகள் வழங்கப்பட்டன. கடந்த 10 ஆம் திகதி முதல் வவுனியா நிலை யத்திற்கு அருகில் ரயில் நிலைய வீதியில் தாக சாந்தி நிலையமொன்று நடத்தப்பட்டு வருகின்றது.

பட்டியிருப்பு கிராமத்தில் உள்ள சகல மாண வர்களுக்கும் மருத்துவ முகாம் நடத்தப் பட்டதுடன் வறுமையான மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் உடுதுணிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (வ-402)


**2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 1942.02.04

மறைவு 2013.05.14

**வேலாயுதம்**

திதி: சித்திரை மாத பூர்வபக்க பஞ்சமி

ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்

குடும்பத்தினர்.

அளவெட்டி மத்தி. (59102) (4.3.7)


## ஐ.ம.சு.மு. உறுப்பினர்கள் நால்வர் மஹிந்தவுக்கு ஆதரவாக போராட்டம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அழைக்கக் கூடாது என்று வலியுறுத்தி போபே பொத்தல பிரதேச சபையைச் சேர்ந்த ஐக் கிய மக்கள் சுதந்திர முன் னணி உறுப் பினர்கள் நால்வர், மேசையின் மீதேறி நின்று நேற்று எதிர்ப்பு நடவடிக்கை யில் ஈடுபட்டனர்.

சுமார் பத்து நிமிடங்கள் அவர்கள் இவ் வாறு எதிர்ப்புத் தெரிவித்தமையால் சபை யின் பதில் தலைவர் சபை நடவடிக்கை களை ஒத்தி வைத்தார். 10 நிமிடங்கள் நிறைவடைந்ததன் பின்னர் சபை நடவடிக் கைகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் நடராசா சண்முகநாதன்

மலர்வு 1951.04.05

உதிர்வு 2014.05.03

ஆண்டொன்று ஆனதுவோ ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால் மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம் என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே!
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.

39. இராசாவின் தோட்ட வீதி.
யாழ்ப்பாணம். (59034)(4.3.6)

மனைவி, பிள்ளைகள்.


## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.23

அராலி அகாயக்குளம் விநாயர் ஆலய வருடாந்த பெருந்திரு விழா நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் திரு விழா நடைபெறும். எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 8.45 மணிக்கு தேர்த்திருவிழா வும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த் தத் திருவிழாவும் நடைபெற வுள்ளது.(வ)

## மன்னார் மாவட்ட அரச அதிபரும் போக்குவரத்து அமைச்சரும் சந்திப்பு



மன்னார், ஏப்.23

மன்னார் மாவட்டத்தில் உள்ள பல வீதிகள் புனரமைப்பு செய் யப்பட வுள்ள நிலையில் புனர மைப்புக்களை மேற்கொள்வது தொடர்பாக மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரியவுக் கும்,வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வர னுக்கும் இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மாவட்டச் செயலகத்தில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட் டத்தில் கிரவல் மண் அளவுக்கு அதிகமாக அகழப்படுவதால் கிரவல் மண் அகழ்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மன்னார் மாவட்டத்தின் வீதிகளை அபி விருத்தி செய்ய எமது வளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பல வீதிகளை புனரமைக்க முடியும் என்றும் கலந்துரையாடப் பட்டது.

இந்தநிலையில் தற்போது வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு கிரவல் அகழ் வதற்கான விசேட அனுமதியும் அரச அதிபரால் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விசேட சந்திப்பின் போது வவுனியா மன்னார் வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் எஸ். ரகுநாதன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ-56)


**இரண்டாம் வருட நினைவலைகளும் 75 ஆவது பிறந்த தினமும்**

அன்னை மடியில்: 15 04 1940



இறைவன் அடியில்: 15 04 2013

**அமரர் இராமலிங்கம் கந்தையா**

(ஓய்வுபெற்ற தபால் அதிபர், கப்பல் வானொலி உத்தியோகத்தர் )

திதி: பூர்வபக்க பஞ்சமி 23-04-2015

அன்பான அப்பாவே!
இரண்டு வருடங்கள் கடந்தாலும்
எத்தனை வருடம் போனாலும்
என்றுமே மறையாது எங்களை என்றுமே
ஆசீர்வதித்து காத்து வருவீர்கள் - உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
மாவடியானை வேண்டுகின்றோம்.

குறிப்பு: இன்று மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையாரில் நடைபெறும் அன்னதான நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"மணியகம்"
ஐயா கடையடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (சீ/16995)(4.3.7)

குடும்பத்தினர்.



**3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

**அப்பையா சிவலிங்கம் (சந்திரன்)**

மலர்வு 03.12.1954

உதிர்வு 26.04.2012



திதி: பூர்வபக்க பஞ்சமி

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் இதயத்தை விட்டு
நீங்கவில்லை
உங்கள் நினைவுகள் என்றும்
எம்முடன் இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

குடும்பத்தினர்.

93/9,
இராசாவின் தோட்ட விதி,
யாழ்ப்பாணம். (58999)(4.3.7)


## மருத்துவருக்கான மேலதிககொடுப்பனவு சுற்றறிக்கை வெளியீடு

அரச மருத்துவர்களுக் கான மாதாந்த மேலதிக கொடுப்பனவு ஏப்ரல் மாதம் தொடக்கம் ரூபா 35 ஆயிரமாக அதிகரிக் கப் பட்டுள்ளதாக சுகா தார சுதேச வைத்திய அமைச்சு உத்தியோக பூர்வ அறிவித்தலை வெளி யிட்டுள்ளது. அமைச் சின் செயலாளர் ஆர். பி. திஸநாயக்கவி னால் ஒப் பமி டப்பட்டு வெளியிடப் பட்டுள்ள சுற்றறிக்கையி லேயே இந்தக் கொடுப் பனவுஅதி கரிப்புத் குறித்து குறிப் பிடப்பட்டுள்ளது.

புதிய சுற்றறிக்கையின் படி ஏப்ரல் மாதம் தொடக் கம்அதிகரிக்கப்பட்ட10ஆயி ரம் ரூபாவுடன் வைத்தி யர் களுக்கான மொத்த மேலதிக கொடுப்பனவு 35 ஆயிரமாக அதிகரிக் கப்படவுள் ளமை குறிப் பிடத்தக்கது. (வ)

# அத்தியடிச் சந்தியில் கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

கொழும்புத்துறை, ஏப். 23

யாழ். ஸ்ரான்லி வீதியில் ரயில் நிலையத்துக்கு பின்புறமாக உள்ள அத்தியடிச் சந்திப் பகுதியில் பெருமளவு திண்மக் கழிவுகள் பொலித்தீன் வகைகள் என்பன தினமும் கொட்டப்படுவதால் அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு காணப்படுகின்றது.

கழிவுகள், பொலித்தீன்கள் வீதியெங்கும் சிதறியிருப்பதால் போக்குவரத்துக்கும் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



இந்த வீதியோரம், கழிவுகளை களஞ்சியப்படுத்தி பின்னர் வேறிடத்துக்கு எடுத்துச் செல்லும் இடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது எனவும் இந்த நடைமுறை நிறுத்தப்பட வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக் கின்றனர். (ஒ – 135)

# சுன்னாகம் சங்க தலைவராக மீண்டும் குமரவேல் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.23

சுன்னாகம் பலநோக்குக் கூட்டு றவுச் சங்கத்தின் இயக்குநர் சபைத் தலைவராக ஒன்பதாவது தடவையாக சி.குமாரவேல் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்க கேட்போர் கூடத்தில் கூட்டப் பட்டது. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நல்லதம்பி கனகம்மா தலைமையில் இந்த பொதுச் சபைக் கூட்டம் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் 75 இக்கும் மேற்பட்ட பொதுச்சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் எவ்வித காரசார விவாதங்களும் இன்றி, ஏழு பேர் கொண்ட புதிய இயக் குநர் சபை ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டது.

இதில் சங்கத்தின் தலைவராக மீண்டும் ஒன்பதாவது தட வையாக சி.குமாரவேல் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் உப தலைவராக செ.இலகுநாதன் தெரிவானார். இவர் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங் கும் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவராகவும் சேவையாற்றி வருகின்றார்.

சங்கத்தின் புதிய இயக்குநர் களாக க.சின்னராசா, எஸ்.முருகநேசன், என்.மணி மாறன், சி.சசிலா, இ.கவிக் குமார் ஆகியோரும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். தற்போது புதிதாக பதவியேற் றுள்ள இயக்குநர் சபை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பதவியில் இருக்கும். (வ–17)

# கூட்டம்

தென்மராட்சி ஏப்.23

யாழ்.சௌக்கிய சேவைகள் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர் வரும் 26 ஆம் தகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். போதனா மருத்துவமனை மருத் துவ சிகிச்சைப் பிரிவு மண்டபத்தில் சங்கத் தலைவர் சி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (வ–9)

# அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

வவுனியா, ஏப்.23

வவுனியா மாவட்ட இந்து அற நெறிப் பாடசாலைகளின் பேரவையால் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக் கான பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட இந்து அற நெறிப் பாடசாலைகளின் பேரவைச் செயலாளர் க.ஆனந்தகணேஸ் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் இயங்கி வரும் அறநெறிப் பாடசாலை களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் சமய அறிவையும் வாண்மையையும் விருத்திசெய்யும் நோக்கில் செப்ரெம்பர் மாத பிற்பகுதியில் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளோம். எனவே இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் முழுப் பெயர், கற்பிக்கும் அற நெறிப்பாடசாலையின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு, எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் க.ஆனந்தகணேஸ், செயலாளர், இந்து அறநெறிப் பாடசாலை பேரவை, இலக்கம் 37, குடியிருப்பு, வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், மாவட்ட ரீதியில் அதிகூடியபுள்ளிகளைபெறும் 10 பேருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் அவர் தெரி வித்தார். (வ–402)

# சூசையப்பர் தேவாலயத்தின் திருவிழா நேற்று ஆரம்பம்

வவுனியா, ஏப்.23

வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் தேவலாயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான கொடியேற்றம் நேற்று மாலை பங்குத்தந்தை அருட்பணி லக்ஸ்ரன் டி சில்வா தலை மையில் ஆரம்பமானது.

தொடர்ந்து 9நாள்கள் நவநாள் வழிபாடுகள் நடைபெற்று எதிர் வரும் முதலாம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7.30மணிக்கு விருவிழாத் திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக் கப்படும். திருப்பலி முடிந்ததும் தொழில்சார் உபகரணங்கள், வாகனங்கள் தூய சூசையப்பர் நடைய பருந்துபேசுதலில் ஆசீர் வதிக்கப்படும்.(வ)


## விற்பனைக்கு

AC, Washing Machine, (15.000/=) Full Automatic Top Loading, தளபாடங்கள் விற்பனைக்கு உள்ளன.

T.P: 076 8680213

## ஒத்துமாறல்

கொழும்பில் அரச திணைக்களம் ஒன்றில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாணத்தில் அதே பதவியில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கோப்பாய், நல்லூர், கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு: 0718147206

## தேவை

தளபாட நிலையம் ஒன்றுக்கு இரவு நேர காவலாளி தேவை.

T.P: 071 0962082

## தவறிவிட்டது

தனபாலசிங்கம் கீர்த்தனராம் என்பவருடைய தே.அ.அ. (963220430 V) மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கஸ்தூரியார் வீதியில் (19.04.2015) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 076 602 8899 (69039) (45.3.7)

## தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் ஆர்.வி.ஜி. மருந்தகத்துக்கு மருந்தாளர் (PHARMACIST) தேவை.

தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

ஆர்.வி.ஜி. மருந்தகம்
இல.504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (69009) (45.3)

## ஒப்புநோக்குநர்கள் தேவை

கொழும்பிலிருந்து வெளியாகும் சுடர்ஒளி பத்திரிகையில் இணைந்து பணியாற்றுவதற்கு

- ஒப்புநோக்குநர்கள்,
- பக்க வடிவமைப்பாளர்கள்
- கணினி இயக்குநர்கள்

உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

கொழும்பில் தங்குமிடவசதி செய்துதரப்படும். உங்கள் முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக முழுமையான சுயவிவரக் கோவையை Sudarolinewspaper@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (சி.15415) (45.3)

## திட்ட இணைப்பாளர் தேவை

ACTIVE THEATRE MOVEMENT

செயல்திறன் அரங்க இயக்கம் இந்த ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கின்ற செயற்றிட்டமொன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

1. திட்ட இணைப்பாளர்
2. நிதி, நிர்வாக முகாமையாளர்

அரச சார்பற்ற நிறுவனங்களில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 35 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 26.04.2015 அன்று காலை 10.00 மணிக்கு நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள செயல் திறன் அரங்க இயக்கத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

சுயவிவரங்கள் 25.04.2015 இற்கு முன்னர் Jaffnatheatre@gmail.com என்ற ஈமெயிலுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தொடர்புகளுக்கு: 0773112692

தலைவர்,
செயல்திறன் அரங்க இயக்கம்.

## யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக நாடகத்துறையில் முழுமையான பயிற்சி

ACTIVE THEATRE MOVEMENT

சான்றிதழ் கற்கைநெறி: நடிப்பு, நெறியாள்கை மற்றும் நாடகத் தயாரிப்பு

Certificate Course on Acting Direction and Drama Production

செயல் திறன் அரங்க இயக்கம் பல்துறைசார் வளவாளர்களின் துணையுடன் ஆரம்பிக்கின்ற முற்றிலும் செயல்முறைப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட நடிப்பு நெறியாள்கை மற்றும் நாடகத் தயாரிப்பு பயிற்சிநெறிக்கு விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சிக் காலம்: 06 மாதகாலம்
ஆரம்பம்: மே 2015
வயதெல்லை: 18-35
பயிற்சி நடைபெறும் காலம்: சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்கள்

### பயிற்சி உள்ளடக்கம்

| | |
|---|---|
| நடிப்பு | நாடக எழுத்துருவாக்கம் |
| நெறியாள்கை | காட்சி விதானிப்பு |
| வேட உடை ஒப்பனை வடிவமைப்பு | ஒளி, ஒலி அமைப்பு |
| விளம்பரப்படுத்துதல் | |

பயிற்சி நிறைவில் ஒவ்வொருவரும் நாடகத் தயாரிப்பில் ஈடுபட்டு மேடையேற்றுதல் வேண்டும். ஆர்வமுள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம். சுயமாகத் தயாரித்த சுயவிவரக்கோவையை 681/2, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அல்லது jaffnatheatre@gmail.com என்ற மின் அஞ்சலுக்கு 30.04.2015 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

தலைவர்
செயல்திறன் அரங்க இயக்கம்

(சி/16997) (4.3.7)

## யாழ்.மாவட்ட பளுதூக்கும் சங்கம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான உடற்கட்டழகுப் போட்டி (Body Building Competition)

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
நேரம்: மாலை 6.00 மணி
காலம்: 25.04.2015 (சனிக்கிழமை)

பிரதம விருந்தினர்.
கௌரவ ஈ.சரவணபவன்
(நாடாளுமன்ற உறுப்பினர்)

சிறப்பு விருந்தினர்கள்.
கலாநிதி சி.சபா ஆனந்
(சிரேஷ்ட விரிவுரையாளர் விளையாட்டு விஞ்ஞானத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

கே. சத்தியபாலன்
(பிரதிப்பணிப்பாளர் - வடமாகாண கல்வித் திணைக்களம்)

கௌரவ விருந்தினர்
அ.கிருபாகரன்
(உரிமையாளர்- கிருபாலேலர்ஸ்)

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

JAFFNA DISTRICT WEIGHTLIFTING ASSOCIATION (C/16994)(4.3.7)

## கசிப்பு உற்பத்தி: ஒருவருக்கு அபராதம்

பளை, ஏப்.23

வடமராட்சிகிழக்கு ஆழியவளைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபருக்கு கிளிநொச்சி நீதிமன்றில் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.


ஆழியவளைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக மருதங்கேணி பொலிஸ் பிரிவினருக்கு தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸார் பளை பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளார்.

அதனையடுத்து பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்பின் பேரில் பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவரைக் கைது செய்தனர். அங்கிருந்து பெருமளவு கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்த வைத்திருந்த கோடா, உற்பத்தி உபகரணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

இந்த நபரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதிவான் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ற-9)

## யாழ். ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளருக்குப் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஏப்.23



யாழ்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கான முகாமை தொடர்பான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் சங்க கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

சங்கத்தின் தலைவர் மு.ஜெ. சுஜிந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் ஆரம்பித்து வைத்தார்.

மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் தி.சுந்தரலிங்கம் கூட்டுறவு தொடர்பான சிறப்புரை ஆற்றினார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வை. கைலைநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான இ.தயாபரன், கே.நிசாந்தன் மற்றும் மாவட்டக் கூட்டுறவுச் சபை யின் செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம் ஆகியோர் பயிற்சி விரிவுரையாளர்களாக செயற்பட்டனர். முகாமை மற்றும் படிவரீதியான செயற்பாடுகள் குறித்து பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட கூட்டுறவு பணியாளர் களுக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. இந்த ஒரு நாள் பயிற்சிப் பட்டறையில் சங்கப் பணியாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயிற்சியைப் பெற்றுக் கொண் டனர். (வ-17)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா அரியரத்தினம்

(இளைப்பாறிய நிர்வாகசேவை உத்தியோகஸ்தர்- இலங்கை துறைமுக அதிகார சபை)



பிறப்பு 18.09.1943 | இறப்பு 20.04.2015

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொழும்பில் வாழ்ந்தவருமான பொன்னையா அரியரத்தினம் 20.04.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா, நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற நல்லையா, தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தேவாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், குணாளன், சுதாகரன், பிரதீபா, துளசி ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகிதபாலி, சுகர்னா, பிறேமானந்தம், ரூபதாஸ் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற பாலச்சந்திரன், கனகரத்தினம், இராமச்சந்திரன், பரஞ்சோதி ஆகியோரின் சகோதரரும், கிருத்திகா, சஞ்சய், ஜஷ்மி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(58477)(4.3.7)

தகவல்: குடும்பத்தினர்.
T.P:021 226 1214



மலர்வு 19.08.1958 | உதிர்வு 21.04.2015

### திருமதி மஞ்சுளா கிருபானந்தன்

புங்குடுதீவு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 54, அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்போது கனடா ரொறன்ரோவில் வசித்தவருமாகிய திருமதி மஞ்சுளா கிருபானந்தன் 21.04.2015 செவ்வாய்க்கிழமை கனடாவில் கால மானார்.

அன்னார் கிருபானந்தனின் (அம்பிகா சில்க் - கனடா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லையா மற்றும் இலட்சுமி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், நிரோஷிதன், நிருஷாந், சிந்துஷன், ஜனனி ஆகியோரின் அன்புத் தாயும், ஷாமினி, துஷ்தி ஆகியோரின் அன்பு மாமியும், தர்மபாலன் (கனடா - முன்னாள் அதிபர்- புங்குடுதீவு மகா வித்தியாலயம்), சியாமளா, பிரேமளா, கிருஷ்ணபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மதிவதனராணி (கனடா), தியாகராசா, காலஞ்சென்ற தவராசா மற்றும் வித்யா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

54, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி.15418)
(45.3.7)

தகவல்:
சகோதரி - சியாமளா
021 222 7279

## வவுனியா நூலகத்துக்கு கணினிகள் வழங்கக் கோரிக்கை

வவுனியா, ஏப்.23

வவுனியா நூலகப் பயன்பாட்டுக்குப் போதிய அளவு கணினிகள் இல்லை. இதனால் கணினிகளைப் பயன்படுத்தும் பயனாளிகள் சிரமங்களை எதிர்கொள்வதாகவட மாகாண சபை உறுப்பினர் எம்.பி. நடராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா பொதுநூலகத்தை வாராந்தம் நூற்றுக்கணக்கான வாசகர்கள் பயன்படுத்துகிறார்கள். இதற்கு ஏற்ற தொழில்நுட்ப அறிவு விருத்தி மற்றும் வேலைகளைத் துரிதப்படுத்தி சில வேலைகளை மேற்கொள்ளவும் அலுவலகர்கள், வாசகர்கள் நலன்கருதி கணினிகள் தேவைப்படுகின்றன. எனவே அரசு அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் கணினிகளை வழங்க முன்வர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (வ-402)

## மரண அறிவித்தல்

### திருமதி நவம் செல்வநாயகம்



யாழ். மாதகலைப் பிறப்பிடமாகவும், குருநகர், நோர்வே ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவம் செல்வநாயகம் 13.04.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அலெக்சாண்டர், விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அலெக்சாண்டர் செல்வநாயகம் (J.P) அவர்களின் அன்பு மனைவியும், மதுரநாயகம் (இலங்கை), காலஞ்சென்ற யோகநாயகம் மற்றும் நவராணி (நோர்வே), ஜெகா (நோர்வே), ராஜநாதன் (ஐக்கிய அமெரிக்கா), ரஞ்சநாதன் (ஐக்கிய அமெரிக்கா), கிளி (நோர்வே), கமில்ரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், கிப்பொலிற்றா, சின்னக்கிளி, அல்போன்ஸ், சுபத்திரா, ரீனா, எமிலி, சந்துள்ளா ஆகியோரின் அன்பு மாமியும், ரெட்ணசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான செல்வம், இரத்தினம், முத்துராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிரோஷன், சுஜா, யூஜின், சுஜி, சுபோ, ஜொணத்தன், யூனாஸ், ஜொனா, ஜொணி, ஸ்கொட், றயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அத்திக்கா, அபி, ஜொஸ்னிக்கா, ஐசக், டானியல் அலெக்ஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நோர்வேயில் நாளை (24.04.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு/ St/JOHANNES KIRKE (BREDTVET KIRKE) BREDTVETVEIEN 12, 0950 OSLO இல் அமைந்துள்ள தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்நிகழ்வை முன்னிட்டு நாளை (24.04.2015) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு குருநகர் புனித/ யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதன் பின்னர் 53/1, மவுண்ட் காமல் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

077 880 6945,
021 222 2959

(59044)
(45.3)

மதுரநாயகம்
குடும்பத்தினர்.

## சடலத்தை இனங்காண கோரிக்கை


கிளிநொச்சி, ஏப்.23

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் உள்ள சடலமொன்றை இனங் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு [illegible]துவமனையின் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

48 வயதான வி.முருகையா என்பவரது சடலமே மேற்படி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது எனவும் உரித்துடையோர் அடையாளம் காட்டி சடலத்தை பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-10)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை நமசிவாயம்



இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நமசிவாயம் (20.04.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, முத்தம்மா தம்பதியரின் மருமகனும் தெய்வானைப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற பரமசாமி, மகாலட்சுமி மற்றும் தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாதேவன் (சிவம்), சிறிவாமதேவன் (கனடா), சகாதேவன், இரத்தினேஸ்வரி, வாமதேவன் (சுவிஸ்), இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜேஸ்வரி, வசந்தாதேவி (கனடா), சரோஜாதேவி, காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாதன் மற்றும் சாரதா (சுவிஸ்), சிவாஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜேந்தினி, கமலினி, பிரேமலா, சுயேந்தினி (கனடா), மயூரன், கவிசங்கர், தீபிகா, பபிசங்கர் (கனடா), சுகன்யா, யசோதரன்(கனடா), கமலதர்சன் (லண்டன்), சங்கீதா, டினேஸ் (பிரான்ஸ்), பிரசாந், சாளினி, சுகன்யா, வினோஜன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், மோனிஷா, கிஷான், கபிஷன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனும்,காலஞ்சென்றவர்களான தவமணி, அப்பாச்சாமி, நாகரெத்தினம், சீவரெத்தினம், தர்மலிங்கம், வேலாயுதம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாளி வீதி, இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. 021 226 3358

(59040)(4.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் 30 ஆண்டு

# மாணவர் கலை இலக்கியப் போட்டிகள் - 2015

மக்கள் வங்கி அனுசரணையுடன் நடத்தப்பட்ட

சிறுகதைப்போட்டியின்

# மாவட்ட மட்ட பெறுபேறுகள்

**யாழ்ப்பாண மாவட்டம்**

1 ஆம் இடம் -'நல்லதோர் வீணை செய்தே' செங்கதிர்ச் செல்வன் சேந்தன், யா/யாழ். இந்துக்கல்லூரி
2 ஆம் இடம்- 'ஒரு நியாயம் விழிக்கிறது' - தனுஷா சிறிஸ்கந்தராசா, யா/மீசாலை வீரசிங்கம் ம.வி
3 ஆம் இடம்- 'ஆன்ம திருப்தி' - டோமினிக் பர்னாந்து டெனிஸ். யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-

- நி.புளோரன்ஸ் யாழ்நிலா, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
- உ.டிலக்ஷிகா, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
- பிரபாகரன் நிதுஷன், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி. சிறுகதை
- கௌசிகா தர்மலிங்கம், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
- கலைப்பிரியா காந்தரூபன், யா/ இராமநாதன் கல்லூரி.
- பு.விதுசா, யா/ இந்துமகளிர் கல்லூரி. சிவராசா நிசாந்தன், யா/யாழ். இந்துக்கல்லூரி

**கிளிநொச்சி மாவட்டம்**

1 ஆம் இடம்-'நிழலில்லா விருட்சங்கள்' - தி.விந்துஜன்- கிளி/ பளை றோ.க.த.க.பாடசாலை
2 ஆம் இடம்-'நினைவுகளின் சிதைவுகள்'- ,சி.வால்கி, கிளி/முழங்காவில் ம.வி.
3 ஆம் இடம்- "இலட்சுமிக் கிழவி' - எஸ். ஆர். ராம்கி'- கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-

- கி.யதுஷா, கிளி/அக்கராயன் ம.வி
- ஜெ.கிஷான், கிளி/ பூநகரி ம.வி.

**முல்லைத்தீவு மாவட்டம்**

1 ஆம் இடம் -'வரதட்சணை' காந்தி மைத்திரி, முி/யோகபுரம் ம.வி.
2 ஆம் இடம் - 'இளமைக் காதலால்' விநாயகமூர்த்தி சந்தியா, மு/மல்லாவி மத்திய கல்லூரி
3 ஆம் இடம் -' பெண்ணாய் பிறந்துவிட்டால்' - பிறேமலதா பிறேமச்சந்திரன், மு/வித்தியானந்தாக் கல்லூரி.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-

- கஜேந்தினி இராசன், மு/ உடையார்கட்டு ம.வி
- சர்மிளா அற்புதராசா, மு/ மல்லாவி மத்திய கல்லூரி
- பங்கஜன் தனுஜா, மு/ விசுவமடு ம.வி
- ர.பவித்திரா, மு/ உடையார்கட்டு ம.வி
- சிங்காரவேல் சுபீட்சா, மு/ வித்தியானந்தாக் கல்லூரி.
- தெ.பிரசன்யா, மு/ வித்தியானந்தாக் கல்லூரி.

**மன்னார் மாவட்டம்**

1 ஆம் இடம் - 'அவனுக்குத் தெரியும்' -வி.தர்மிதா, மன்/ மோட்டக்கடை அ.த.க.பா.
2 ஆம் இடம் - 'உடைந்துபோன உள்ளம்' - ஜெ.றுமேஷினி, மன்/ புனித சவேரியர் பெண்கள் கல்லூரி.(தே.பா)
3 ஆம் இடம் 'மாறாத வடு' - V.லூட்ஸ் ஜெனிபர், மன்/ புனித சவேரியர் பெண்கள் கல்லூரி,(தே.பா)

**வவுனியா மாவட்டம்**

1 ஆம் இடம் - 'உயிர்ப்பு' செ.ரிஷோபிகா, வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி.
2 ஆம் இடம் - "வெற்றிப் பாதைகள்' இராசகோபால் டினோஜினி, வவு/ ஓமந்தை ம.வி.
3 ஆம் இடம் - 'அரைக்காசுக்கு விற்ற மானம்' -யோகராஜா மனோஜிகா, வவு/ சைவப்பிரகாச வித்தியாலயம்

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-

- அ.லுஜித்நாதன், வவு/கனகராயன்குளம் ம.வி.
- தயானி பரமலிங்கம், வவு/சைவப்பிரகாச வித்தியாலயம்.
- பி.வேதிகா, வவு/கனகராயன்குளம் ம.வி.
- இராசகோபால் சுதர்சினி, வவு/ ஓமந்தை ம.வி.
- டர்சிகா அருளானந்தம், வவு/ ஓமந்தை ம.வி .
- சி.கேமலதா- J.கிரிஸ்டீனா, வவு/செட்டிகுளம் ம.வி .
- பி.கோகுலன், வவு/கனகராயன்குளம் ம.வி.

இவர்களில் முதலாமிடம் ரூபா 3,000.00, இரண்டாம் இடம் ரூபா 2,000.00 மூன்றாம் இடம் ரூபா1,000.00 பரிசுபெற அல்லது மாகாண மட்டத்தில் தேர்வு செய்யப்படுமிடத்து, மாகாண மட்டப் பரிசான துமலாம் இடம் ரூபா 10,000.00 இரண்டாம் இடம் ரூபா 7,000.00, மூன்றாம் இடம் ரூபா 5,000.00 பெற உரித்துடையவர்கள். மாகாண மட்டத் தேர்வு செயலொழுங்கு இடம்பெற்று வருகின்றது. மாவட்ட மட்டத்தில் தேர்வு செய்யப்பட்டவர்களில் மாகாண மட்டப்பரிசு பெறுவோர் விபரம் பரிசளிப்பு தினத்தன்று நடுவர்களால் தெரிவிக்கப் பட்டு, அன்றைய தினமே பரிசுத் தொகை வழங்கப்படும் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனுசரணை: PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE

---


மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ..... சித்திரையில் ஆரம்பம்




/அணிக்கு 5 பேர், பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

30 அகவையில் உதயன்

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

# கொக்கோ கோலாவுக்கு தமிழக அரசு தடை

டில்லி,ஏப்.23
ஈரோடு மாவட்டத்தில் கொக்கோ கோலா நிறுவனம் தொழிற்சாலை அமைப்பதற்கு வழங்கிய அனுமதியைத் தமிழக அரசு ரத்துச் செய்ய உத்தரவிட்டுள்ளது.
ஈரோடு மாவட்டம் பெருந்துறையில், சுமார் 71.3 ஏக்கர் காணி கொக்கோ கோலா நிறுவனத்துக்கென தமிழகஅரசு இடம் ஒதுக்கியிருந்தது. அங்கு 500 கோடி இந்திய ரூபா செலவில் ஆலையை நிறுவ அந்த நிறுவனம் திட்டமிட்டிருந்தது.



ஆனால் அந்த இடத்தில் தொழிற்சாலை அமைத்தால் ஏராளமான நிலத்தடி நீரை அந்த நிறுவனம் உறிஞ்சும் என்று அந்தப் பகுதி மக்களும், விவசாயிகளும் சில அரசியல்கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தியுள்ளனர்.
கடந்த மாதத்திலிருந்து அதற்கு விளக்கம் அளித்த நிறுவனத்தினர், ஆலைக்குத் தேவையான தண்ணீரைத் தமிழக தொழில்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, தங்களுக்கு நிலத்தை ஒதுக்கிய சிப்காட் நிறுவனத்தின் மூலமாகப் பெற்றுக் கொள்வோம் என்று தெரிவித்திருந்தனர்.
இதற்கிடையே, தமிழக சட்டப்பேரவையிலும் அண்மையில் அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது.
இதனையடுத்து கொக்கோ கோலா நிறுவனம் தொழிற்சாலை அமைக்க வழங்கிய அனுமதியை தமிழக அரசு ரத்து செய்ய உத்தரவிட்டுள்ளது. (14)



# தமிழர் படுகொலைக்கு நீதி விசாரணை தேவை

## எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்

டில்லி,ஏப்.23
ஆந்திராவில் 20 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில், நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.
ஆந்திராவில் திருப்பதி வனப்பகுதியில், 20 தமிழர்களைச் செம்மர கடத்தல் தடுப்பு அதிரடிப்படையினர் கடந்த 7 ஆம் திகதி சுட்டுக்கொன்றனர்.
அந்தச் சம்பவம் தொடர்பில் நாடளுமன்றத்தில் நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டது.
அந்தப் சம்பவத்துக்கு காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சி உறுப்பினர்களும் நீதி விசாரணை நடத்த ஆதரவு தெரிவித்தனர். அவர்களைத் தொடர்ந்து உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், அந்தப் பிரச்சினைகள் தொடர்பாக மாநில அரசுகளிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது.
அறிக்கை கிடைத்த பின்னர் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும். சபாநாயகர் அனுமதி அளித்தால், சபைக்குத் தெரிவிப்பேன் எனக் கூறினார். ஆனால் அவரது பதிலில் திருப்தி அடையாத எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். (14)

# பஸ்ஸில் திடீர்த் தீ விபத்து உடல் கருகி 9 பேர் சாவு



லக்னோ,ஏப்.23
உத்தரப்பிரதேச மாநிலத்தில் அரச பஸ்ஸொன்றில் ஏற்பட்ட திடீர்த் தீ விபத்தொன்றின் போது 9 பேர் உட்ல் கருகி உயிரிழந்துள்ளனர்.
உத்தரப்பிரதேச மாநிலம் அமேதி மாவட்டம் ராம்கான் கிராமத்தில் 42 பயணிகளுடன் புறப்பட்ட அரச பஸ்ஸொன்றில் சுல்தான்பூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த பஸ் திடிரெனத் தீப்பற்றிக் கொண்டது.
அந்தத் தீ விபத்தினால் 9 பயணிகள் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.
மேலும், பலர் பஸ் ஸின் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டுவெளியேறியதால் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். (14)

## சுஷ்மா சுவராஜ் 5 நாள்கள் சுற்றுப் பயணம்



டில்லி,ஏப்.23
மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் 5 நாள் பயணமாக உயர் அதிகாரிகளுடன், இந்தோனேஷியாவுக்குப் புறப்பட்டுள்ளார்.
1955ஆம்ஆண்டுஆசியா–ஆபிரிக்கா மாநாட்டில் அணி சேரா இயக்கம் தொடங்கியதன் 60 ஆவது நினைவு நிகழ்வு தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறவுள்ளது. அந்த நிகழ்வில் பங்கேற்பதுடன், மேலும் புதிய ஆசியா– ஆபிரிக்கா கூட்டு ஒப்பந்தம் உருவான 10 ஆம் ஆண்டு விழாவிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.
சீனா, ஜப்பான், தென்ஆபிரிக்கா நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் அந்த நிகழ்வில் கலந்து கொள்ள முடியாதது குறித்து, பிரதமர் மோடி, இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விதோதோவுக்கு தகவல் அனுப்பியுள்ளார். மேலும் அவர் ஜோகோ விதோதோவை இந்தியாவுக்கு வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.(14)

# சக்கர நாற்காலி ஆணழகன்

லூதியானா,ஏப்.23
பஞ்சாபைச் சேர்ந்த ஆனந்த் அர்னால்ட் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியுடன் நடமாடினாலும் தனது விடா முயற்சியால் 3 முறை தேசிய ஆணழகனான தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
பஞ்சாப் மாநிலத்தில் உள்ள லூதியானா நகரை சேர்ந்த ஆனந்த அர்னால்ட்(வயது–28) என்பவர், தனது 13 வயதில் உடற்பயிற்சி மீது ஏற்பட்ட ஆர்வத்தால் 'மிஸ்டர் கோல்ட்' பட்டத்தைப் பெற்றுள்ளார். அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த பட்டங்களையும் வெல்லும் முனைப்போடு செயற்பட்டு வந்த ஆனந்துக்கு 15 வயதில் முதுகுப்பகுதியில் பயங்கர வலி ஏற்பட்டுள்ளது.
பின்னர் மருத்துவர்கள் சோதித்துப் பார்த்தபோது அவருக்கு முதுகெலும்புப்பகுதியில் புற்றுநோய்த் தாக்கம் உள்ளமை தெரியவந்துள்ளது. அதனையடுத்து நடந்த அறுவை சிகிச்சைகளின் விளைவாக இடுப்புக்குக் கீழே எந்த உடலுறுப்பும் செயல்படாத நிலையில் ஆனந்த் ஒரு சிறிய சக்கர நாற்காலிக்குள் முடங்கியுள்ளார். ஆனாலும் தன்னம்பிக்கையை இழக்காத ஆனந்த் அர்னால்ட், சக்கர நாற்காலியில் அமர்ந்தபடியே உடற் பயிற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளார்.
தனது பெற்றோர் மற்றும் 3 சகோதரிகளும் கொடுத்த ஊக்குவிப்பால் சக்கர நாற்காலி ஆணழகன் போட்டிகளில் மிகக் குறுகிய காலத்தில் 3 முறை தேசிய ஆணழகன் பட்டங்களையும், 12 முறை பஞ்சாப் மாநில ஆணழகன் பட்டத்தையும், மேலும் 27 இதர பட்டங்களையும் வென்றுள்ளார். மேலும் தற்போது லூதியானா நகரில் உடற்பயிற்சி மையம் ஒன்றை நடத்தி வரும் ஆனந்த் அர்னால்ட் தனது வாழ்க்கையை திரைப்படமாக எடுக்க ஆசைப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (14)





## நடமாட முடியாத நிலையில் ஐ.எஸ். தலைவர்

### சோகத்தில் தீவிரவாதிகள்

வொஷிங்டன்,ஏப்.23
ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல்பக்தாதி படுகாயமடைந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த மார்ச் மாதம் நடந்த தாக்குதலில் அல்பக்தாதி காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.
அந்தச் சம்பவத்துக்குப் பின்னர் தனது அமைப்பின் தினசரி நடவடிக்கைகளை நேரில் மேற்கொள்ள முடியாத நிலையில் அவர் உள்ளார். மேலும் அவர் குணமடைந்து வந்தாலும், நடமாட முடியாத நிலையில் உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் பக்தாதி உயிர் தப்ப மாட்டார் என்று ஐ.எஸ். உயர் மட்டத் தலைவர்கள் கருதி, புதிய தலைவரைத் தெரிவு செய்வது குறித்து ஆலோசித்து வந்தனர். ஆனால் தற்போது அந்த முடிவை கைவிட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது. (14)

# விற்கப்படும் குழந்தைகள் தெலுங்கானாவில் அவலம்



ஹைதராபாத்,ஏப்.23
தெலுங்கானாவில் உள்ள நல்கொண்டா மாவட்டத்தில் புதிதாகப் பிறந்த பெண் குழந்தைகள் பணத்துக்காக விற்கப்படும் அவலம் நடப்பது தெரியவந்துள்ளது.
தலைநகர் ஹைதராபாத்தில் இருந்து 120 கி.மீ தூரத்தில் உள்ள நல்கொண்டாவில் அந்தப் பெண் குழந்தைகள் விற்பனை நடைபெறுகிறது. நல்கொண்டாவில் உள்ள தேவாரகொண்டாவிற்கு சென்றால் அங்குள்ள ஓட்டோ சாரதிகள் அரசு நடத்தும் குழந்தைகள் மையத்துக்கு அழைத்துச் செல்கின்றனர். அந்த மையத்தில் சுமார் 8 முதல் 10 பெண் குழந்தைகளை விற்பனைக்கு தயாராக வைத்துள்ளனர். இதற்கென தனியாகச்செயற்படும் இடைத்தரகர்கள் குழந்தை வாங்க வருபவர்களிடம் குழந்தைகளை காண்பிக்கின்றனர். மேலும், ஆண் குழந்தைகள் அங்குவிற்பனைசெய்யப்படுவதில்லை என்றும் இடைத்தரகர்கள் தெரிவித்துள்ளனர்.
அந்தப் பெண்கள் குழந்தைகள் அனைத்தும், ஆண் குழந்தையின்மீது மோகம் கொண்ட குடும்பங்களால் ஒப்படைக்கப்பட்டவை என்பது தெரியவந்துள்ளது. பழங்குடியின மக்கள் வாழும் அந்த மாவட்டத்தில் பெரிதும் ஏழ்மை தொற்றியுள்ளதால் பெண் குழந்தைகளை தேவையற்றதாக நினைக்கும் பெற்றோர்கள் பணத்துக்காக பெண் குழந்தைகளை விற்கின்றனர். நல்கொண்டாவில் முறையற்ற முறையில் குழந்தைகள் வழங்கப்படுகின்றன. அந்த மையத்தில் ஆவணங்கள் முறையாக பராமரிப்பு செய்யப்படவில்லை என்பது உறுதியாகியுள்ளது. (14)

## வெடித்துச் சிதறியது வீடு கனடாவில் பயங்கரம்



ரொறான்ரோ,ஏப்.23
கனடாவின் ரொறொன்ரோவில் பூகம்பம் போன்ற அதிர்வுடன் ஏற்பட்ட வெடிப்பினால் வீடொன்று வெடித்துச் சிதறியுள்ளது. அந்தப் பயங்கர விபத்துக்கு இயற்கை வாயுக் கசிவே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
அந்த விபத்தினால் அருகில் உள்ள வீடுகளிலும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த விபத்தில் 50 வயதுடைய நபர் ஒருவர் இடிபாடுகளுக்கு இடையே உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். (14)

## ஆட்சி நிர்வாகத்தில் அரசியல் தலையீடு அவசியம்; மோடி தெரிவிப்பு

டில்லி,ஏப்.23
ஆட்சி நிர்வாகத்தில் அரசியல் தலையீடு அவசியம், குறுக்கீடு தான் கூடாது என்று குடியாட்சி பணி அதிகாரிகள் மத்தியில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
டில்லி விக்யான் பவனில் நேற்று முன்தினம் குடியாட்சிப் பணிகள் தினம் கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்வில் பங்குபற்றிய மோடி மேலும் தெரிவிக்கும் போது
நல்ல ஆட்சி நிர்வாகத்தில் அரசியல் தலையீடு அவசியம். ஆனால் அரசியல் குறுக்கீடு கூடாது. பொறுப்புடைமை, கடமை உணர்வு, வெளிப்படையான தன்மை ஆகிய மூன்றும் நல்லாட்சிக்கு அவசியம். அதிகாரிகள் பணிகளை கச்சிதமாகவும், திறம்படவும் செய்து முடிப்பதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் எனவும் தெரிவித்தார். (14)



# 89 ஆவது பிறந்தநாள் கொண்டாடும் மகாராணி

லண்டன்,ஏப்.23

பிரிட்டன் ராணி எலிசபெத்தின் 89 ஆவது பிறந்தநாள் ஆரவாரத்துடன் கொண்டாடப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத்தின் 89 ஆவது பிறந்தநாள், அவர் வசித்து வரும் வின்ட்சர் கோட்டையில் கொண்டாடப்படுகிறது. சில மாதங்களாகவே அவர். அந்தக் கோட்டையில் தான் தங்கியிருப்பதாகவும், வயது முதிர்வின் காரணமாக அவர் அலுவலக வேலை எதையும் பார்ப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

அவரது பிறந்தநாளை முன்னிட்டு பக்கிங்காம் அரண்மனையில் உள்ள அரச குடும்ப மெய்க்காப்பாளர்கள் நேற்றுக் குதிரை வண்டியில் பொருத்தப்பட்ட சிறிய வகை பீரங்கி வண்டிகளைச் செலுத்திக் கொண்டு அணி நடையில் சென்றனர்.

அங்கு அவர்கள் முதலாம் உலகப் போரில் பயன்படுத்திய துப்பாக்கியைக்கொண்டு6முறைவானத்தை நோக்கிச் சுட்டு, மரியாதை செலுத்தினர். பின்னர் அவர்கள் தேம்ஸ் நதிக்கரையில் 'டவர் அப் லண்டன்' பாலம் அருகே இருந்து கொண்டு, 62 முறை வானத்தை நோக்கிச் சுட்டு மரியாதை செலுத்தினர். அதே போன்ற மரியாதை எடின்பர்க், கார்டிப் மற்றும் ஹில்ஸ்பரோ உள்ளிட்ட கோட்டைகளிலும் நடத்தப்பட்டது. மேலும் ரோயல் சல்யூட் என்னும் வானத்தை நோக்கி 21 முறை சுடும் பாரம்பரியம், ராணிக்குச் சொந்தமான அரண்மனைகள் மற்றும் லண்டன் மாநகரத்திலும் நடத்தப்பட்டன.

# யேமனில் தாக்குதல்களை நிறுத்தியது சவூதி அரசு

## மனிதாபிமான உதவிக்கு ஈரான் வலியுறுத்தல்

சனா,ஏப்.23

உள்நாட்டுப் போர் தீவிரம் அடைந்த யேமனில் தாக்குதலை முடிவுக்குக் கொண்டு வருவதாக சவூதி அரேபியா அறிவித்துள்ளது. மனிதாபிமான உதவிக்கு ஈரான் வலியுறுத்தியுள்ளது.

அரபு நாடுகளில் ஒன்றான யேமனில் ஜனாதிபதி ஆதரவுப் படையை எதிர்த்து ஈரான் ஆதரவு பெற்ற ஷியா பிரிவு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடுமையாகப் போரிட்டு வருகின்றனர். சவூதி அரேபியா தலைமையில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், பஹ்ரைன், கட்டார், ஜோர்தான், மொராக்கோ, எகிப்து, சூடான் ஆகிய 9 நாடுகளின் கூட்டுப்படைகள் கடந்த மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் வான்தாக்குதல்களை மேற்கொண்டு வந்தன. அந்த உள்நாட்டுப் போரால் அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவியது.

சவூதி கூட்டுப்படைகளின் வலிமையான தாக்குதல்களுக்கு மத்தியிலும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் முன்னேறி வந்தனர். இரு தரப்புக்கும் இடையே சண்டை வலுத்து வருவதால் இதுவரை சுமார் 700 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன், 2 ஆயிரத்து 200 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். ஏறத்தாழ ஒரு லட்சம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. யேமனில் சவூதி கூட்டுப்படைகள் வான் தாக்குதல்நடத்துவதைநிறுத்திக்கொண்டு, அரசியல் தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என ஈரான் ஜனாதிபதி ஹசன்ரவுஹானிவலியுறுத்தியுள்ளார். இந்த நிலையில், தலைநகர் சனாவில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்துச் சவூதி அரேபிய கூட்டுப்படைகள் குண்டு மழை பொழிந்தன. அந்த வான்தாக்குதல்களில்



28 பேர் உயிரிழந்துள்ளனர். போர் தொடங்கியதில் இருந்து சவூதி அரேபியா 2 ஆயிரம் தடவை தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. யேமனில் அரசுக்கு எதிரான ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் பெரிதும் உதவி செய்து வருகிறது என்பதே அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் குற்றச்சாட்டாக உள்ளது. ஈரான் கடல்வழியாக கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம், மருத்துவம் மற்றும் பிறஉதவபடி பொருள்களை வழங்கியுள்ளன.

இந்த நிலையில் கிளர்ச்சியாளர்களுக்கு ஈரானின் உதவி கிடைப்பதைத் தடுக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது. அமெரிக்கா யேமன் கடற்பகுதிக்கு விமானம் தாங்கிய போர்க் கப்பலை அனுப்பியுள்ளது. இந்த நிலையில் யேமனில் தாக்குதலை முடிவுக்குக் கொண்டு வருவதாக சவூதிஅரேபியா அறிவித்துள்ளது. இருப்பினும் தேவைப்படும் போது தாக்குதல் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளது. இந்த நிலையில் அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவியை வழங்க ஈரான் வலியுறுத்தியுள்ளது. யேமனில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், இராணுவ நடவடிக்கையினால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நாங்கள் ஏற்கனவே வலியுறுத்தினோம் என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியா போர் நிறுத்தம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுவரை நடைபெற்று வந்த 'தீர்வுக்கான புயல்' என்ற தாக்குதல் நடவடிக்கைகள் முடிவு பெறுவதாகவும், தற்போது 'நம்பிக்கையை மீட்டெடுப்பது' என்ற புதிய நடவடிக்கை தொடங்குவதாகவும் கூறப்பட்டுள்ளது. அதன் மூலமாக யேமன் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை மக்களிடையே உருவாகியுள்ளது. (14)

# ஐ.எஸ்.அமைப்பில் பிரிட்டன் மாணவிகள்

லண்டன்,ஏப்.23

பிரிட்டனிலிருந்து தப்பிச் சென்ற ...சாலை மாணவிகள் மூன்று பேர் தற்போது சிரியாவில் ஆயுத பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

லண்டன் நகரில் பிரபல பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் 3 பேர் கடந்த பெப்ரவரி மாதம் துருக்கி வழியாக சிரியா சென்றதாக சில வாரங்களுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் தற்போது வெளியாகியுள்ள தகவலில், அந்த மூன்று மாணவிகளும் சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் பெண்கள் போராளிகள் பிரிவில் இணைந்து பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்...சேர்ந்த பெண் போராளிகள், ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் நகரங்களை கண்காணித்து தமது அமைப்பின் கொள்கைகளை மக்களுக்கு தெரியப்படுத்தும் முக்கிய பணிகளை மேற்கொள்வர்.



அது மட்டுமன்றி, பிரித்தானியாவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இணைந்துள்ளதாக கருதப்படும் அந்தப் பிரிவைச் சேர்ந்த பெண் போராளிகள் தற்காப்புக்காக ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதைச் சிறந்த பொழுது போக்காகவும், மன நிறைவாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (14)

# ஜேர்மன் நாடாளுமன்றத்தில் பெற்றோல் குண்டு தாக்குதல்

பேர்லின்,ஏப்.23

ஜேர்மன் நாடாளுமன்றத்தின் மீது பெற்றோல் நிரப்பிய போத்தல்களை வீசி மர்ம நபர்கள் தொடர்த் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

ஜேர்மனின் நாடாளுமன்றத்தின் மீது, நேற்று முன்தினம் அதிகாலை எளிதில் தீப்பிடித்து வெடிக்கும் வகையில் பெற்றோல் நிரப்பிய போத்தல்களை மர்ம நபர்கள் சிலர் வீசியுள்ளனர். ஜேர்மனின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் அலுவலகங்கள் உள்ள போல் என்ற பகுதியில் அந்தத் தாக்குதல் நடந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், சேதம் ஏற்பட்ட இடங்களில் சில துண்டுப் பிரசுரங்களும் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டுள்ளனர். (14)



# 900 பேரை பலிவாங்கிய கப்டனுக்கு நேர்ந்த கதி

ரோம்,ஏப்.23

மத்திய தரைக்கடலில் 900 பேரை பலிவாங்கிய கப்பலின் கப்டன் மற்றும் பணியாளர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

லிபியாவில் உள்நாட்டுபோர் வலுத்து வருவதால், தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ளவும், பிழைப்பு தேடிச் செல்லவும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறுகின்றனர். இவ்வாறு வெறியேறும் மக்கள் சட்டவிரோதமாகப் படகு அல்லது கப்பல் மூலமாகப் பயணித்து கீரிஸ், இத்தாலி போன்ற நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். இந்த நிலையில் கடந்த வார இறுதியில், அளவுக்கு அதிகமாக ஆயிரம் அகதிகளை ஏற்றிச் சென்ற கப்பல், நடுக்கடலில் மூழ்கியது. அதில், 900 பேர் உயிரிழந்தனர். அந்தக் கோர விபத்துக் குறித்து விசாரித்து வரும் இத்தாலிப் பொலிஸார், கப்பலின் கப்டன் மற்றும் பணியாளர்களைக் கைது செய்துள்ளனர். (14)

# பாகிஸ்தானில் ஒரே நாளில் 17 பேருக்கு தூக்குத் தண்டனை

இஸ்லாமாபாத்,ஏப்.23

பாகிஸ்தானில் கடந்த வருடம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி 132 குழந்தைகள் உட்பட 145 பேரை கொன்று குவித்த கொடூர சம்பவத்தைத் தொடர்ந்து, அங்கு சாவுத்தண்டனை கைதிகளின் தண்டனையை நிறைவேற்ற பிறப்பிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக்கொள்ளப்பட்டது. இந்த நிலையில், நேற்று முன்தினம் இத்தண்டனைநிறைவேற்றப்பட்டது. சாவுத்தண்டனையைநிறைவேற்ற விதிக்கப்பட்டிருந்த தடை அகற்றப்பட்ட பின்னர், பாகிஸ்தானில் ஒரே நாளில் 17 மரண தண்டனைக் கைதிகள் தூக்கில் போடப்பட்டது இதுவே முதல் தடவையாகும். (14)

# எகிப்தின் முன்னாள் ஜனாதிபதிக்கு 20 வருடங்கள் சிறைத் தண்டனை

கெய்ரோ,ஏப்.23

எகிப்து நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான முகமது மொர்ஸிக்கு 20 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கி அந்த நாட்டின் நீதிமன்றம் அதிரடியாகத் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு எகிப்தின் ஜனாதிபதியான முகமது மொர்ஸி பதவி வகித்தபோது, ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே நடைபெற்ற போராட்டம் ஒன்றின் போது போராட்டத்தில் ஈடுப்பட்டவர்களைத் தனது ஆதரவாளர்களைத் தூண்டிவிட்டு கொலை செய்ததாக மொர்ஸி மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.



அந்தச் சம்பவத்தில் ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே போராட்டக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றபோது, கூட்டத்தைக் கலைக்குமாறு பொலிஸாருக்கு மொர்ஸி உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவைப் பொலிஸார் ஏற்க மறுத்ததால் மொர்ஸியின் இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்தைச் சேர்ந்த ஆதரவாளர்களைத் தூண்டிவிட்டு போராட்டக்காரர்களை அடக்கியுள்ளார். அதில் ஓர் ஊடகவியலாளர் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, 2013 ஆண்டு மொர்ஸிக்கு எதிராகப் போராட்டம் வலுக்கத் தொடங்கியதால், அப்போதைய இராணுவத் தளபதி அப்துல் பக்தா அதிரடியாகச் செயற்பட்டு மொர்ஸியை பதவியிலிருந்து விலக்கி தான் ஜனாதிபதியானார். மொர்ஸி மற்றும் அவருடைய ஆதரவாளர்களைக் கைது செய்து சிறையில் அடைத்த அப்துல் பக்தா மொர்ஸின் மீது பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். மொர்ஸி மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு 20 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும், அவருக்கு ஆதரவாகச் செயற்பட்ட 22 இஸ்லாமிய நபர்களுக்கும் நீதிமன்றம் தலா 20 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்துள்ளது. (14)

இன்று உலக புத்தக தினம்

# வாசிப்பு மனிதனை பூரணப்படுத்துகின்றது

மு.ஈழத்தமிழ் மணி

உலக புத்தக தினமானது இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. செயற்பாட்டையும் நெறிப்பாட்டையும் வளமாக்குகின்ற முக்கிய நாளே உலக புத்தக தினமாகும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோவின் வேண்டுகோளின்படி 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி சர்வதேச புத்தகதினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

உலக மறிந்த நாடக மேதையான நாடக இலக்கியத்தை கவித்துவமாக உயிரோட்டம் செய்தவரான ஷேக்ஸ்பியர் 1564ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்து தனது 52 ஆவது வயதில் மரணத்தைத் தழுவிக்கொண்டார். புனைவு இலக்கியத்தில் கொடி கட்டிப்பறந்த உலக இலக்கியவாதிகளுக்கு ஊற்றுக் கண்ணாக விளங்குகின்ற'' டான் குயிக்சாட்'' நாவலைப் படைத்த செர்வாண்டைஸ் என்பவர் 1616ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் நாள் காலமானார். ஆங்கிலக் கவிஞரான வில்லியம் வோர்ட்ஸ் வொர்த் 1770ஆம் ஆண்டு ஏப்ரல் 23இல் இயற்கை எய்தினார். கவிஞரான ரூபர்ட் ப்ரூக். 1915 ஏப்ரல் மாதம் 23ஆம் நாள் மரணமடைந்தார். ராய்ஸ்டன் காம்ப் பெல் என்பவர் 1957 ஏப்ரல் மாதம் 23இல் காலமானார். 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநரான சத்யஜித்ரே மறைந்தார். இவ்வாறான படைப்புலக மேதைகளின் இறப்பு நாள்களைக் கருத்தில் கொண்டே ஏப்ரல் மாதம் 23ஆம் நாள் சர்வதேச புத்தக நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது.

1995 ஆம் ஆண்டு இதே நாளில் சர்வதேசம் முழுவதிலும் புத்தக தினம் கொண்டாப்படுகின்றதோர் ஒழுங்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஏப்ரல் மாதம் 23ஆம் நாள் உலகப் புத்தக நாளாக கடைப்பிடிப்பது என்று 1995ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பின் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ அமைப்பு அறிவித்தது.

> “
> வாசிப்பு என்பது மனிதனைப் பூரணப்படுத்துகின்றது என்ற கருத்துக்கு அமைவாக மனிதனுடைய கல்வியில் அத்திபாரமாக வாசிப்பு அமைந்துள்ளது. ஒரு நூலையே அல்லது பத்திரிகையோ நாம் வாசிப்பதால் பூரண மான அறிவை யும் பெற்றுக் கொள்கிறோம். வாசிப்பு என்பது ஒரு பேரியக்கமாகும்.

உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாசாரங்களைப் பற்றிய விழிப்புணர்வு பெறுவதற்கு புத்தகம் ஒரு சிறந்த கருவியாக விளங்குகின்றது.

அனைவருக்கும் வாசிக்கும் உரிமை, அனைத்து மக்கள் வாழ்விடங்களிலும் நூலக உரிமை, உலகில் உள்ள அனைத்து அறிவுச் செல்வங்களையும் அவரவர் தாய் மொழியில் பெறுதல், தத்தமது தாய்மொழியில் இலக்கியச் செல்வங்களைப் பாதுகாத்து ஆவணப்படுத்துதல், புத்தகங்களுக்கும் வாசகர்க ளுக்கும், இடையே ஒருங்கி ணைப்பை ஏற்படுத்துதல் என்பன உள்ளிட்ட பத்துக் கட்டளைகளை அனைத்து நாடுகளிலும் நிறைவேற்றுவதன் மூலம் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை விரிவாக்க முடியும்.

வாசித்தலின் வளர்ச்சி கல்வித் துறையில் பிரதான பங்கை வகிக்கின்றது. வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தச் செய்யவேண்டும். ஏனெனில் இது கற்பித்தலுக்கு உரிய விடயமன்று. வாசிப்பு ஒரு சமூகதேவை, சமூக நோக்கை, விழிப்பை மேலும் விரிவடையச் செய்கின்றது. காலம் என்னும் மண்ணிலே காணப்படுகின்ற அடிச் சுவடுகளான நூல்கள் எமது அறிவை பல்பரிமாணங்களில் விருத்தியடையச் செய்கின்றன. எனவேதான் புத்தகங்கள் விலை மதிக்க முடியாத புதையல்கள் எனச் சொல்லப்படுகின்றன. சட்டங்கள் மாறலாம் மடியலாம்– மறையலாம். ஆனால் நல்ல நூல்கள் என்றென்றும் சாகா வரம் பெற்றவையாகும். புத்தகமானது ஒரு மனிதனுக்கு விசுவாசமான தோழர்கள் என்பதற்கு யாராலும் எதிர்க் கருத்துக்களை முன்வைக்க முடியாது.



ஒரு நல்ல நூலை இளம் வயதிலும் முதிர்ச்சியடைந்த காலத்திலும் வயோதிப காலத்திலும் வாசிக்க வேண்டும். மற்றவருடைய மனதில் நல்ல நூல்கள் ஊடாக நாம் ஊசலாடி எங்கள் அறிவைப் பெருக்க எம்மை நெறிப்படுத்தவும், நல் வழிப்படுத்தவும், நல்ல நூல்கள் துணைபுரிகின்றன.

வாசிப்பு என்பது மனித னைப் பூரணப்படுத்துகின்றது என்ற கருத்துக்கு அமைவாக மனிதனுடைய கல்வியில் அத்திபாரமாக வாசிப்பு அமைந்துள்ளது. ஒரு நூலையோ அல்லது பத்திரிகையோ நாம் வாசிப்பதால் பூரணமான அறிவையும் பெற்றுக் கொள்கிறோம்.

வாசிப்பு என்பது ஒரு பேரியக்கமாகும். இந்த இயக்கத்தினால் தான் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். வாசிப்பற்ற சமூகம் ஊனமுற்ற சமூகமாக மாறிவிடும். வாசிப்பில்லையேல் சமூகத்தில் உயிர்ப்பைத் தரிசிக்க முடியாது. புத்தகங்களுடன் தினமும் உறவாடுகின்றவர்கள் அவரவர்கள் தம்மை புடம் போட்டுக் கொள்கின்றனர்.

விரிவுரைகள், பட்டிமன்றங்கள், விவாத அரங்கம், சொற்பொழிவுகள் போன்றவற்றில் கலந்துகொண்டு கேட்பவர்கள் மத்தியில் பயனுடையதாக இருந்தாலும், நல்ல புத்தகங்களை வாசிக்கும்போது ஆழ்ந்த, பரந்த பயனுடைய கருத்துக்களை மேலும் விவரமாகவும் விளக்கமாகவும் அறியவும் பசுமரத்தாணி போல் மனதில் பதிய வைக்கவும் புத்தகங்கள் துணை புரிகின்றன. இதனை சாமுவேல் யோன்சன் என்ற ஆங்கில அறிஞர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். நாம் புத்தகங்களை வெறுமனே வாசிக்காது விருப்புடன் நல்ல புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாசித்தால், அறிவை, மனபலத்தை, மன அமைதியை இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். நாம் புத்தகங்களாகவே மாறுகின்றோம் என்ற கருத்தை அறிஞர் அன்ரோல் பிறேயாட என்பவர் கூறியுள்ளார்.

உண்மையான வாசிப்பின் ஊடாகவே அறிவுசார் உலகை அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய சிறப்பு அவசியமும் வாய்ந்த புத்தக பத்திரிகைகள் வாசிப்புப் பண்பாடு மேலோங்கிட உலக புத்தக தினத்தை மக்களாகிய நாம் கொண்டாடுவது சிறப்புக்குரியதொன்றாகும்.

## சிறந்த விற்பனை பிரதிநிதிகளை கௌரவித்தது களனி கேபிள்ஸ்



கம்பனியின் பாரிய விற்பனை முகவர்கள் வலையமைப்புடன் நேரடியாக தொடர்பை பேணும் விற்பனைப் பிரதிநிதிகளின் சிறந்த செயற்பாடுகளை களனி கேபிள்ஸ் பிஎல்சி கௌரவித்திருந்தது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு தாஜ் சமுத்திரா ஹோட் டலில் நடைபெற்றதுடன், இந்த நிகழ்வில் களனி கேபிள்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரண பால பங்கேற்றிருந்தார்.

மேல் பிராந்தியம் – 2இன் தர்ஷன கம்லத் சிறந்த பிராந் திய விற்பனை முகாமை யாள ருக்கான விருதை பெற்றுக் கொண்டதுடன், களனி விற்பனைப் பிராந்தியத்தின் சமீர சஞ் சீவ சிறந்த விற்பனை பிரதி நிதியாக தெரிவாகி யிருந்தார்.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் களனி கேபிள்ஸ் பிஎல்சியின் பிரதம நிறை வேற்று அதிகாரி மஹிந்த சரணபால உரையாற்றுகையில், கம்பனியின் முதுகெலும்பாக விற்பனைச் செயலணியினர் அமைந்துள்ளனர். உயர்ந்த பதவி நிலைகளை பெற்றுக் கொள்ள அவர்கள் கூட்டாண்மை ஏணியில் பயணிக்க வேண்டி யுள்ளது.

எனவே இந்தச் சூழலில் அவர்களுக்கு இது ஒரு சிறந்த ஊக்குவிப்பாக அமைந்திருக்கும் என குறிப் பிட்டார்.

வழமையாக ஒவ்வொரு ஆண்டைப் போலவும், கடந்த ஆண்டிலும், எமது அர்ப்பணிப்பான விற்பனை செயலணி எமது கம்பனியின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு சிறந்த பங்களிப்பை வழங்கியிருந்தது.

அவர்கள் அனைவரின் பங்களிப்புக்கும் நான் இந்த சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், வெற்றியாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

நூற்றுக்கு நூறு வீதம் இலங்கையின் கம்பனியாக கடந்த நான்கு தசாப்த காலமாக களனி கேபிள்ஸ் திகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கம்பனி சுப்பர் பிராண்ட்ஸ் தரத்தை இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பாடல் துறையில் 2008 ஆம் ஆண் டில் எய்தியிருந்ததுடன், துறை யில் நிபுணத்துவத்தை வெளிப் படுத்தியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. 2012 இல், களனி கேபிள்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு சிறந்த வர்த்தக நாமத்துக்கான வெண்கல விருது வழங்கப்பட்டிருந்தது.

மக்கள் அபிவிருத்தி விருதுகள் வழங்கலின் போது, பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக களனி கேபிள்ஸ் பிஎல்சி 2013 ஆம் ஆண்டில் தங்க விருதையும் பெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## தலைக்கவசத்தை அணிந்து கொள்வோம்

பொலிஸாரின் கடுமையான கண்காணிப்பு இருந்தபோதிலும் சிலர் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்வதைக் காண முடிகின்றது. இதனால் விபத்துக்களில் சிக்குகின்ற இத்தகையவர்கள் அநியாயமாக உயிரிழக்கும் சம்பவங்களும் நிகழ்கின்றன.

தலைக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டமை பொது மக்களின் பாதுகாப்புக்காகவே தவிர வேறொன்றுக்குமானதல்ல. ஆனால் இதை உணர்ந்து கொள்ளாத மக்கள் பாதுகாப்புக்காக தலைக்கவசம் அணிவதை தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர். சிலர் மோட்டார் சைக்கிளின் கைப்பிடியில் தலைக் கவசத்தைக் கொழுவியவாறு செல்வதையும், பொலிஸாரைக் கண்டதும் அதை அவசரம் அவசரமாக எடுத்து தலையில் மாட்டுவதையும் காணமுடிகின்றது. மோட்டார் சைக்கிளின் கைப்பிடியில் தலைக் கவசத்தை மாட்டி வைப்பது ஆபத்தை விளைவிக்க வல்லது. இதன் காரணமாக பலர் விபத்துக்களில் சிக்கியதும் உண்டு. சிலர் உயிரையும் இழந்துள்ளனர். மேலும் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது விபத்து ஏற்படுமானால் முதலில் பாதிக்கப்படுவது தலைப்பகுதிதான். தலைப் பகுதி பாதிக்கப்படுவதன் காரணமாகவே விபத்துக்களின்போது அதிக உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன. ஆகவே தலைப் பகுதியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றால் தலைக் கவசத்தைக் கட்டாயம் அணிந்தே தீர வேண்டும். பிறருக்காக இல்லாது தமக்காக இதைக் கட்டாயம் அணிய வேண்டும்.

*து.மயூரன், வரணி.*

## பெண்களே சிந்தியுங்கள்

முன்பெல்லாம் பெண்கள் நறுமணம் வீசுகின்ற மலர்களைக் கொண்டு தொடுக்கப்பட்ட மலர்மாலைகளையே விசேஷ நிகழ்வுகளின்போது அணிந்து கொள்வார்கள். இதனால் அவர்கள் அருகில் வரும்போது நறுமணம் வீசும். ஆனால் தற்போது இந்த நறுமணத்தை நுகர முடிவதில்லை. கடைகளில் விற்கப்படும் பிளாஸ்ரிக்கிலான மாலைகளைப் பெண்கள் வாங்கித் தலையில் சூடுவதே இதற்கான காரணமாகும்.




மனிதர்களே செயற்கைத்தனம் நிறைந்தவர்களாகக் காணப்படும்போது அவர்கள் செயற்கையான மாலைகளை அணிவது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. ஆனால் இயற்கையான மலர்களைப் பயன்படுத்துவதுதான் மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆலயங்களில் மலர்களைக் கொண்டு இறைவனுக்கு மேற்கொள்ளப்படும் புஷ்பாஞ்சலிக்கு எப் போதுமே முதலிடம் உண்டு.

இயற்கையான மலர்களே இதற்கு முக்கிய காரணமாகும். இதை விடுத்து பிளாஸ்ரிக்கிலான பூக்களால் இறைவனுக்குஅஞ்சலிசெய்வதைஎவராவது ஏற்றுக்கொள்வார்களா? பெண்களே சற்றுச் சிந்தியுங்கள்.

*மா.கற்பகாம்பிகை, கொக்குவில்.*

## வேண்டாமே நொறுக்குத் தீனி

இன்று இளைஞர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை நொறுக்குத் தீனிக்கு அடிமைகளாக மாறிவிட்டார்கள். வழக்கமான உணவு வகைகளுக்கும் மேலாக நொறுக்குத் தீனியை உண்பதில் இவர்கள் அதிக ஆர்வம் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆனால் நொறுக்குத் தீனிகளை உண்பது உடல் ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்குமென மருத்துவர்கள் கூறுகின்றனர். குறிப்பாக ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட எண்ணெயில் இவை மீண்டும் மீண்டும் தயாரிக்கப்படுவதால் உடல் ஆரோக்கியம் மோசமாகப் பாதிக்கபடுமெனவும் அவர்கள் கூறுகின்றனர். ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் பயன்படுத்தக் கூடாதெனவும் இவர்கள் கூறுகின்றனர்.

மேலும் அடிக்கடி நொறுக்குத் தீனிகளை உண்பதால் உணவுச் சமநிலை பாதிக்கப்படுகின்றது. மேலும் எண்ணெயில் இவை பொரித்தெடுக்கப்படுவதால் குடல் சம்பந்தப்பட்ட கோளாறுகள் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் சிறுவர்கள் இவற்றை விரும்பி உண்டுவிட்டு தமது வழக்கமான உணவுகளைத் தவிர்த்து விடுகின்றனர். இதனால் போசனைக் குறைபாட்டால் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர். நொறுக்குத் தீனியின் பயன்பாடு இதய நோய்களுக்கும் வழிவகுப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆகவே நாம் இயன்றளவு நொறுக்குத் தீனிகளை விலக்கி வைத்து எமது உடல் ஆரோக்கியத்தைப் பேணுதல் அவசியமாகும். -

*சு.வரோதினி, குருநகர்.*

கேலிச் சித்திரம்



நன்றி: மவ்பிம

# சிறுபான்மைக் கட்சிகள் பாதிக்கப்படக் கூடாது

தேர்தல் முறை மாற்றம் குறித்து தற்போது பரவலாக பேசப்படுகின்றது. ஆனால் இந்தத் தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் வடக்கு–கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ள சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளே அதிகளவில் எச்சரிக்கையாக இருக்கவேண்டியுள்ளது.

தேர்தல் முறைமையில் மாற்றங்களைக் கொண்டுவரும் விடயத்தில் அரசோ ஏனைய கட்சிகளோ அவசரப்படக் கூடாது எனச் சிறுபான்மைக் கட்சிகள் ஒருமித்து கோரிக்கை விடுத்துள்ளன. அத்துடன் இது தொடர்பில் ஆராய்ந்து முன்மொழிவுகளை வழங்குவதற்காக சிறிய மற்றும் சிறுபான்மை இன அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்றை அமைப்பதற்கும் இந்தக் கட்சிகள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளன.

தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டு வரும் பொருட்டு 20 ஆவது திருத்தத்தை கொண்டுவர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது சிறிய மற்றும் சிறுபான்மை அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவங்களைப் பாதிப்பதாக அமைந்துள்ளது.

இதனை எதிர்கொண்டு சிறுபான்மையினரை பாதிக்காத வகையிலான திருத்தங்களை முன்மொழிவதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் நோக்கில் சிறுபான்மை மற்றும் சிறிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

தற்போதுள்ள விகிதாசார தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி அரசமைப்பில் 20 ஆவது திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது ஆலோசனையை முன்வைத்துள்ளது.

அத்துடன் விருப்பு வாக்கு முறைமையை இல்லாதொழித்து விகிதாசார, தொகுதி வாரி ஆகிய இரண்டையும் இணைத்து கலப்புமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் வெறுமனே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரண்டு பிரதான கட்சிகள் மட்டுமே நன்மையடையவுள்ளன. இதனால் சிறுபான்மை அரசியல் பிரதிநிதித்துவங்களும், சிறு அரசியல் கட்சிகளும் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாக உள்ளன. அதனைத் தடுத்து நிறுத்திச் சிறுபான்மையினம் பாதிப்படையாதவாறு தேர்தல் முறைமையில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காக பொறிமுறையொன்று அவசியம் என்பதை சிறுபான்மைக் கட்சிகள் விரைவில் அரசுக்கு வலியுறுத்த வேண்டும்.

புதிய தேர்தல் முறைமை தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களை அரசியல் அநாதைகள் ஆக்கும் மோசமான நிலைக்கு கொண்டு செல்லும் என புதிய தொழிலாளர் முன்னணி எச்சரிக்கை செய்துள்ளது. சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை விகிதாசாரத் தேர்தல் முறைமையே சாதகமானதாகவும் நியாயமானதாகவும் இருக்கும். இதனை விடுத்து, அரசு தொகுதிவாரி தேர்தல் முறையைக் கொண்டுவந்தால் அது சிறுபான்மை மக்களுக்கு பெரும் பாதிப்பாக அமையும். அவர்களை அரசியல் அநாதைகள் ஆக்கிவிடும் என்று அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. சிறுபான்மைக் கட்சிகளின் செல்வாக்கைக் குறைத்து மக்கள் மத்தியில் அவற்றுக்கு ஆதரவு பெருகாமல் தடுக்கும் நோக்குடனும் மறுபுறத்தில் பெரும்பான்மைக் கட்சிகளுக்கான ஆத்ரவையும் பலத்தையும் அதிகரிப்பதற்காகவுமே இந்தத் தேர்தல் முறைமை மாற்றம் கொண்டுவரப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தல் முறை மாற்றம் சிறுபான்மைக் கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாதவாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வருகின்றனர். விகிதாசார தேர்தல் முறை சிறப்பானது என்றாலும் அதிலும் குறைபாடுகள் பல உள்ளன. சிறுபான்மையின் எதிர்காலத்துக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாதவாறு இந்தத் தேர்தல் முறை மாற்றம் அமைய வேண்டும் என்பதையே சிறுபான்மை மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

புதிதாக ஆட்சிக்கும் வரும் அரசுகள் தமது ஆட்சிக் காலத்தில் புதிய புதிய மாற்றங்களை மேற்கொள்வது இலங்கை அரசியலில் வழமையானதொன்றாகிவிட்டது. இவ்வாறு செய்யப்படும் மாற்றங்கள் அனைத்தும் பெரும்பான்மை இன மக்களையும், பெரும் அரசியல் கட்சிகளையும் இலக்காக வைத்து, அவற்றின் நலனைக் கருத்தில் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறினால் அது தவறாகாது. இதன்போது சிறுபான்மை இனத்தின் நலன்களோ எதிர்காலமோ அரசினால் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

ஆட்சிக் கதிரையில் அமர்வதற்கு மட்டும் சிறுபான்மையினரின் ஆதரவை நாடிவரும் சிங்கள அரசுகள், ஆட்சிபீடம் ஏறியபின்னர் சிறிபான்மை மக்களின் அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும் புறந்தள்ளி அவர்களை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்கின்றன. இலங்கைஅரசியலில்இந்தநிலை பலஆண்டுகாலமாகதொடர்கின்றது. சிறுபான்மையினத்தவரின் மக்களும் வேறு வழியின்றி. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பெரும்மையினக் கட்சிகளுக்கு தமது வாக்குகளை வழங்கி வருகிறார்கள். ஆனாலும், அந்த வாக்குகளுக்கான பெறுமதியை சிறுபான்மை மக்களுக்கு வழங்க பெரும்பான்மையின அரசுகள் தவறி வருகின்றன. இதனால், ஆட்சிபீடம் ஏறும் இரு பிரதான கட்சிகளின் மீதும் சிறுபான்மையின மக்களான தமிழர்களோ, முஸ்லிம்களோ நம்பிக்கை கொள்வதில்லை. ஆட்சிக் கதிரைக்கு வந்தவுடன் அவை தம்மை உதறித் தள்ளிவிடும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

கடந்தகால வர லாறுகளும் இதுதான்.

எனவே அரசினால் முன்வைக்கப்படும் தேர்தல் முறை மாற்றம் சிறுபான்மையினருக்கு பாதிப்பை ஏற்படுத் தாத வகையில் அமைய வேண்டும் என்பதை அரசு மிகக் கவனத்துடன் உறுதிப்படுத்தி ஆக வேண்டும்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்கள் தம் நிலையை யாரிடம் சொல்லி அழுவது?

அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்துக்கு நோய் கண்டுவிட்டதோ என்று கருதும் அளவுக்குக் கண்டம் மேலெழுந்து நிற்கிறது. புதிய அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட நூறு நாள் வேலைத் திட்டத்தின் கால எல்லை இன்று -- வியாழக்கிழமை -- நிறைவுற வேண்டும். ஆனால் செயலளவில் அது புஸ்வாணமாகி விட்டது.

இதற்கிடையில், மிகப் பெரிய அளவில் முதன்மை நிலை வழங்கப்பட்ட அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் நாடாளுமன்றில் அடுத்த வாரம் (ஏப்ரல் 27 ஆம் 28 ஆம் திகதிகளிலேயே) விவாதிக்கப்படும் என்று சபாநாயகர் அறிவித்துள்ளார்.

அதுவும் செயல்வடிவம் பெறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதேவேளை, அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தம் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமே நல்ல காலத்தைக் கொண்டு வரும் என்று அரசல் புரசலாகப் பேசப்படுகிறது.

இத்தனைக்கும் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களைக் குறைக்கமுடியாது என்று பிரதான எதிர்க்கட்சி கிளர்ந்து எழுந்துள்ளது.

மறுபுறத்தில், நாடாளுமன்றம் இந்த வாரத்தில் கலைக்கப்படும் என்று ஆளுந்தரப்பினால் வழங்கப்பட்ட உறுதி மொழியும் கேள்விக்குறியாகி விட்டது!

நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் அற்ற மைத்திரிபால சிறிசேன அரசு அரசமைப்புக்கு மேற்கொள்ள இருந்த 19 ஆவது திருத்தம், நூறு நாள் திட்டத்துக்குள் நிறைவேறுவது கைநழுவி உள்ளது!

இதேவேளை -

ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரத்தைக் குறைக்க வேண்டும் என்று எழுந்த நிலையும் அனேகமாகப் பஸ்பமாகி விடும் என்ற நிலையே தோன்றி உள்ளது, மேலெழுந்து நிற்கிறது.

மறுபுறத்தில், புதிய ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட போதிலும், பழைய நாடாளுமன்றமே நாட்டை ஆள்கிறது.

மேலும், புதிய அரசின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து, ஒருவரிகூட சேர்க்கப்படவில்லை. அதற்குக் காரணம், அது குறித்துப் பிரஸ்தாபித்தால் விரைவில் நடைபெற இருக்கும் (நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள) பொதுத் தேர்தலில், ஆளும் தரப்பின் வெற்றிவாய்ப்பு அரோஹரா ஆகிவிடும் என்ற அச்சம் மனசார்ந்து இருப்பதே ஆகும் எனின் தப்பன்று..........

வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் புதிய ஜனாதிபதியை ஆதரித்ததற்கும் பிரதான காரணம், தமக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு முடிவு கிடைக்கும் என்ற நப்பாசையே.

ஆனால் இப்போது........

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே என்ற நிலையே மேலெழச் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் இதனை யாரிடம் சொல்லி அழுவது......?!



# பதவி ஆசையில் உழலும் மஹிந்த ராஜபக்ஷ

■ வந்தியத்தேவர்

ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாக பதவி வகிக்கமுடியும் என்ற சட்டம் அமெரிக்காவிலும்கூட உள்ளது. அமெரிக்காவில் ஜனாதிபதியாக பதவி வகிப்பவர்கள் அதற்கமைய இரண்டு தடவைகளுடன் திரும்ப வீட்டுக்குச் சென்று விடுகிறார்கள். இலங்கையில் மஹிந்தவுக்கு முன்னர் பதவி வகித்த ஜனாதிபதிகளும் குறிப்பிட்ட சட்டத்தை அனுசரித்து நடந்து கொண்டனர். இந்தச் சட்டத்தை மாற்றியமைத்து மேலும் ஒரு தடவையாவது ஜனாதிபதி பதவியில் தொடரவேண்டும் என்று மஹிந்தவைத் தவிர முன்னாள் ஜனாதிபதிகள் எண்ணியதில்லை. ஆசை யாரைத்தான் விட்டது என்கிற முதுமொழி என்று இருந்தாலும் கூட அவர்கள் ஆசைப்படாது குறிப்பிட்ட கால வரம்புடன் பதவிகளைத் துறந்து சென்றனர். ஆசை யாரைத்தான் விட்டது என்ற முதுமொழியை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த சட்டத்தை தனக்கு ஆதரவாகப் பயன்படுத்தி ஜனாதிபதி பதவியில் தொடர்ந்தும் ஒட்டிக்கொண்டிருப்பதற்கு மேற்கொண்ட பிரயத்தனங்கள் முறியடிக்கப்பட்டதில் தனது கனவுகள் சிதைந்து மனைமுடைந்து அலரிமாளிகையை விட்டு வெளியேறியது உலகறிந்த செய்திதான்.

தேர்தல் முடிவுகள் அவரது முயற்சியைத் தூக்கி வீசினாலும் பதவி ஆசை அவரை விடுவதாக இல்லை. மீண்டும் எப்படியாவது அதிகாரமுள்ள ஒரு பிர்தமராகவாவது வரவேண்டும் என்ற நோக்கம் அவரிடம் குடிகொண்டுள்ளது.

தங்காலையில் நடந்த கூட்டத்தில் அறுபதுக்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு பிரதமர் பதவி தொடர்பாக உசுப்பேற்றியதால் சுதந்திரக் கட்சி அல்லது புதிய கட்சி ஒன்றின் ஊடாக பிரதமர் பதவிக்குப் போட்டியிட மஹிந்த முடிவு செய்துள்ளதாகத் தெரிகின்றது. மஹிந்த ஆதரவாளர்களின் நடவடிக்கைகளால் இடிந்துபோன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைக் காப்பாற்றவும் தனது தலைமையில் கட்சி தேர்தலை எதிர்கொள்ளவும் வேண்டியவராக உள்ளார். கட்சியைக் கட்டுப்படுத்த முடியாவிடின் அவர் உடனடியாக அதன் தலைமைப் பதவியில் இருந்து விலகவேண்டும் என்பது தேசிய நிறைவேற்றுச் சபையின் உறுப்பினரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகிறார். ஒரு கட்சியைக் காப்பாற்ற மற்றொரு கட்சித் தலைவர் கருத்துக் கூறும் அளவுக்கு நிலைமை மாறி விட்டது.

மஹிந்தவின் மீள் அரசியல் பிரவேசம் இலங்கைக்கு ஓர் அபசகுணமாகவே அமையலாம். கடந்த காலத்தில் அவரது ஆட்சி இரத்தக் களரியும் புதைகுழிகளும் நிறைந்ததாகவே காணப்பட்டது. அதிகார மிக்க உயர்பதவிகளில் எல்லாம் அவரது உறவுகளின் அலங்கரிப்புகளே பெரிய அளவில் இடம்பெற்றிருந்தது. அவரது ஆட்சிக் காலத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மேலோட்டமாக இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தாலும் அவற்றில் எல்லாம் செல்வம் குவிக்கும் சுயநலமே முக்கியத்துவம் பெற்றிருந்தது. அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்ற பெரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் இதன் பின்னணியிலேயே உருவானவை என்ற கருத்தும் பரவலாக உள்ளது. தேர்தலில் போட்டியிடுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்தால் அதனைப் புறக்கணிக்க முடியாது என மஹிந்த ராஜபக்ஷ கார்டியன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார்.

பிரச்சினைக்குரிய மனிதர்களை மீண்டும் பதவிக்கு வரும்படி நாட்டை நேசிக்கும் எவனுமே அழைக்க மாட்டான் என்பதுதான் நிஜமாகும்.

எது எப்படி இருந்த போதிலும் இலங்கையின் இன்றைய நாட்டின் நிலை கடந்த ஆட்சியின்போது இருந்த பலதரப்பட்ட மோசமான படிகளையெல்லாம் கடந்து ஓரளவு ஜனநாயகப் பாதையில் சென்று கொண்டிருப்பதைக் காட்டுகின்றது. சிறுபான்மை இனங்கள் அனுபவித்து வந்த துன்பங்கள் அவலங்கள் நெருக்கடிகள் சற்று குறைந்து சிறிதளவாவது மூச்சுவிடக்கூடியதாக உள்ளது. ஆட்சி மாற்றத்துக்குக் காரணமாக இருந்த மக்கள் அந்த மாற்றம் நிகழ்ந்துள்ளதால் ஓரளவு நிம்மதியைக் காணமுடிந்தது. தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்கள் என்றில்லாமல் சிங்கள மக்கள் கூட இன்றைய காலகட்டத்தில் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்க இனவாதம் ஒன்றின் மூலம் இலங்கையை அதளபாதாளத்தில் தள்ள நாட்டை நேசிப்பவர்கள் என்று கூறிக்கொள்ளும் பலர் ஒன்று சேர்ந்துள்ளனர்.

மஹிந்தவிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கவும் அவரைச் சுதந்திரக் கட்சியில் இருந்து ஓரங்கட்டவும் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை நிறுத்தவும் அந்தக் கட்சி நடவடிக்கைகள் முன்னெடுப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை எல்லாம் எந்த வகையில் சாத்தியப்படும் என்பது குறித்து உடன் எதுவும் கூறக்கூடியதாக இல்லை. ஆனால் மஹிந்த பிரதமராகும் பட்சத்தில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இனங்கள் கடந்த காலத்தில் அவரது ஆட்சியில் அனுபவித்த இன்னல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம் என்பதை மறுப்பதற்கு இல்லை. அவரது கடந்த தேர்தல் தோல்விக்கு தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இனமே காரணமாக இருந்துள்ளனர். இதனை தேர்தலின் பின் தன்னைச் சந்திக்க வந்த சிங்கள மக்களிடம் கூறி இனவாத நெருப்பில் அவர் எண்ணெயையும் ஊற்றியுள்ளார். ஆட்சி மாற்றம் தேவை, தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் எனத் தேர்தல்காலத்தில் உறுதி மொழிகளை வழங்கி சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கட்டில் அமர்ந்த ஜனாதிபதி மைத்திரியும் தேசிய அரசின் பிரதமராக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களின் முக்கிய பிரச்சினைக்கு முக்கியத்துவம் வழங்காது அதனைத் தள்ளிப்போடுகின்றனர். இருசாராருமே தேர்தலை முன்வைத்தே காய்களை நகர்த்துவதில் அடுத்துவரும் தேர்தலும் தமிழ் மக்களுக்கு உறுதியான ஒரு முடிவை எடுக்கத் தடுமாறும் ஒன்றாகவே இருக்கப்போகின்றது.

தமிழர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின்றதோ அடுத்து வரும் அரசு எப்படிப்பட்டதாக இருக்கப்போகிறதோ என்று மக்கள் ஏக்கத்துடன் உள்ளனர். எமக்குச் சாதகமான சூழ்நிலையில் அரசும் சர்வதேசமும் உள்ளன என்று கூறிக் கொண்டே காலத்தை இழுத்தடிப்பதுதான் தமிழ்த் தலைமைகளின் பிழைப்பாகிவிட்டது. இது என்றுதான் மாறுமோ தெரியவில்லை.

● சேரலாதன்

# மஹிந்தவுக்கு ஆதரவான போராட்டங்களால்



நிதிமோசடிக் குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ள பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவிலிருந்து ஒருவாறு நாடு திரும்பியுள்ளார். ஆனால் அவர் பலத்த ஏற்பாடுகளை மேற்கொண்ட பின்னரே நாடு திரும்பியதை விமான நிலையத்தில் அவரை வரவேற்பதற்குக் கூடியிருந்த பெரும் தொகையான மக்கள் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது.

# முழு நாட்டுக்குமே கேடு



தற்போது நாட்டில் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் அசாதாரண நடவடிக்கைகள் எதிர்காலம் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

அரசையும், சட்ட திட்டங்களையும் மதிக்காத கூட்டமொன்று எந்தவித அச்சமும் இல்லாது தமது இஷ்டம் போன்று சட்டத்தைக் கையில் எடுத்து கொண்டு வெறியாட்டம் ஆடுவதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மைத்திரி அரசு உள்ளதால் நிலைமை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது.

குற்றம் இழைத்தார்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை இடம்பெறுவது ஒன்றும் புதிதான விடயமல்ல. இதில் பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடு கிடையாது. ஆனால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விசாரணைகளிலிருந்து காப்பாற்றும் பொருட்டு அவரது ஆதரவாளர்கள் நடந்து கொள்ளும் முறை நாட்டுக்குத் தலைக்குனிவை மட்டுமே ஏற்படுத்தவில்லை. மாறாக சர்வதேச ரீதியிலும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. மைத்திரி அரசு பதவியில் அமர்ந்து கொண்ட நாள் முதலே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் நிர்வாகத்தில்இடம்பெற்ற ஊழல், மோசடிகள், சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் வெளிவரத் தொடங்கி விட்டன. எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசு பக்கம் இழுப்பதில் மஹிந்த தரப்பினர் சாதனையையே நிகழ்த்திவிட்டனர். இறுதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்காவையே தம்பக்கம் வளைத்துப் போட்டு விட்டனர். இது தொடர்பான விசாரணைகளுக்கு முன்னிலையாகுமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மஹிந்தவுக்கு அழைப்பு அனுப்பியதைத் தொடர்ந்து தற்போது பூகம்பம் வெடித்துள்ளது. மஹிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் – வெளியேயும் போராட்டங்கள் இடம் பெறுவதால் அரசு ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. மிக முக்கியமான 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்ற முடியாத சங்கடத்தினுள் அரசு தள்ளப்பட்டுவிட்டது. அதைப்போன்று 20 ஆவது



திருத்தமும் நிறைவேறுவதில் பலத்த சந்தேகம் நிலவுகின்றது. ஜனாதிபதி மைத்திரியிடம் சகல அதிகாரங்களும் குவிந்துள்ளபோதிலும், அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையில் அவரது கரங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவரொரு செயற்றிறன் இல்லாத அரசுத் தலைவராகவே தற்போது காணப்படுகின்றார்.

இந்த நாட்டின் நாடாளுமன்றம் பெருமைமிக்க பாரம்பரியங்களைக் கொண்டது. நாட்டு மக்கள் அனைவராலும் மதிக்கப்பட வேண்டியது. ஆனால் மஹிந்தவுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேவலமான செயல்களால், அதன் புனிதத் தன்மை மாசடைந்துள்ளது. சபைக்கு ஒவ்வாத ஆடைகளுடன் அவர்கள் இரவிரவாக சபாபீடத்தில் அமர்ந்திருந்ததாகவும் மது பாவனை கூட அங்கு இடம்பெற்றதாகவும் வெளிவரும் செய்திகள் அருவருப்பையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளன. நாடாளுமன்றத்தை மதிக்கத் தெரியாதவர்கள் தம்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று அழைப்பதற்கே தகுதியில்லாதவர்கள் ஆகி விடுகின்றனர். இவர்களை நெறிப்படுத்தும் எண்ணம் மஹிந்தவிடம் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் என்ற வகையில் மக்களுக்கு முன்மாதிரியாக ஒரு கனவான் போன்று செயற்பட்டு துணிவுடன் தம்மீதான விசாரணைகளுக்கு முகம்கொடுத்து அவற்றை துடைத்தெறியத் துணியவேண்டும். இதை விட்டு தமது ஆதரவாளர்கள் மூலமாக போராட்டங்களைத் தூண்டி விடுவதும், நான் குற்றமற்றவன் எனப் புலம்பி அறிக்கை வெளியிடுவதும் அவரை ஒரு புனிதராக என்றுமே வெளிப்படுத்த மாட்டாது.

நாடாளுமன்றத்துக்கு வெளியே இடம்பெற்ற மஹிந்தவுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டத்தில் அவரது மூத்த புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ முக்கிய இடம் வகிப்பதை பத்திரிகைகளில் பார்க்க முடிந்தது. இதன் மூலமாக ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் யார் உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மேலும் நிதிமோசடிக் குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ள பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவிலிருந்து ஒருவாறு நாடு திரும்பியுள்ளார். ஆனால் அவர் பலத்த ஏற்பாடுகளை மேற்கொண்ட பின்னரே நாடு திரும்பியதை விமான நிலையத்தில் அவரை வரவேற்பதற்குக் கூடியிருந்த பெரும் தொகையான மக்கள் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது. இவ்வளவு பெரும் தொகையான மக்கள் விமான நிலையத்தில் கூடி இருந்ததற்கான காரணத்தையும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் ஏதாவது வீரதீரச் செயல்களைப் புரிந்து விட்டா நாடு திரும்பியுள்ளார்? அல்லது நாட்டுக்கு நேரவிருந்த அபாயம் ஒன்றை வெளிநாட்டில் தங்கியிருந்து நீங்கி விட்டாரா? ஜனாதிபதித் தேர்தல் முடிந்தகையோடு இரவோடு இரவாகச் சொல்லிக்கொள்ளாமல். வெளிநாட்டுக்குப் பறந்து சென்ற அவர் இலங்கை அரசினால் சுமத்தப்பட்ட பல்வேறு நிதிக்குற்றச் சாட்டுக்களின் பேரில் சர்வதேசப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விடுவேனோ என்ற அச்சத்தின் காரணமாகவே மனமின்றி நாடு திரும்பியுள்ளார். இந்த நிலையில் அவருக்கு விமான நிலையத்தில் வழங்கப்பட்ட மகத்தான வரவேற்பு இந்த நாட்டில் குற்றஞ் சாட்டப்பட்டவர் களுக்கு இருக்கும் நன்மதிப்பை துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

இதேவேளை– மஹிந்தமீது கைவைத்தால் நாட்டில் இரத்த ஆறு ஓடுமென முன்னாள் அமைச்சரொருவர் பகிரங்கமாகவே கூறியுள்ளார். இதைப் போன்றதொரு கருத்தை கூறும் அளவுக்கு அவருக்குத் துணிச்சலைத் தந்தவர் யார் என்பதுதான் புரியவில்லை.

மேலும், ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றும் இரகசியமாகத் தயாராகி வருவதாகவும்செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் பெரும் பான்மை இல்லாதுவிட்டால் தமக்குரிய அதிகாரங்களைக் கொண்டு அதனைக் கலைத்துவிட்டுப் புதிய தேர்தலை நடத்துவதே ஜனாதிபதிக்குரிய ஒரே தெரிவாக உள்ளது. ஆனால் நாடாளுமன்றத்தைக் கலைப்பதில் அவர் காட்டுகின்ற தாமதம் அவரது அரசியல் எதிர்காலத்துக்கு வேட்டு வைப்பதாக அமைந்துள்ளது. மேலும் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசுக்கு எதிரான தீய சக்திகளை அவர் உடனடியாகவே ஒடுக்க வேண்டும். குற்றம் புரிந்தவர்கள் எத்தகையவர்களாக இருந்த போதிலும், அவர்களைத் தப்ப விடவே கூடாது. அவரது அத்தகைய செயற்பாடுகளாலேயே இந்த நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 9 | | | | | 7 | 8 |
| 4 | | | 8 | 3 | | 2 | 6 | |
| 5 | 8 | | | | | 9 | | |
| | | | 2 | 5 | | 7 | | |
| 2 | | 7 | | | | 5 | | 1 |
| | | 5 | | 7 | 8 | | | |
| | | 2 | | | | | 3 | 7 |
| | 3 | 6 | | 9 | 4 | | | 2 |
| 7 | 5 | | | | | 1 | 4 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 6 | 8 | 9 | 1 | 7 | 2 | 3 |
| 7 | 2 | 9 | 4 | 3 | 6 | 1 | 8 | 5 |
| 1 | 8 | 3 | 5 | 7 | 2 | 9 | 6 | 4 |
| 3 | 4 | 8 | 7 | 2 | 5 | 6 | 9 | 1 |
| 2 | 9 | 7 | 6 | 1 | 3 | 5 | 4 | 8 |
| 6 | 1 | 5 | 9 | 4 | 8 | 2 | 3 | 7 |
| 8 | 7 | 3 | 3 | 6 | 9 | 4 | 5 | 2 |
| 9 | 3 | 2 | 1 | 5 | 4 | 8 | 7 | 6 |
| 5 | 6 | 4 | 2 | 8 | 7 | 3 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### பக்தியின் வேர் எது

தெய்வீகம் உன்னுள்ளே இருக்கிறது. அதை விழிப்படையச் செய்வது உன் பொறுப்பு. மனதுக்குள் மூடநம்பிக்கையை நுழைய அனுமதித்தால், சிந்திக்கும் திறன் காணாமற் போய் விடும்.

பொறுப்புணர்ச்சியுடன் செயற்படாதவன் எதையும் சாதிக்கும் திறன் அற்றவனாகிறான். அன்பு தான் பக்திக்கே ஆணிவேர். மற்றதெல்லாம் வெறும் சடங்குகளே. தன்னம்பிக்கையுடன் எழுந்து நில். குறிக்கோளில் உறுதி கொண்டு உழைத்திடு.

## பந்தம் என்னும் சொல் எதனைக் குறிக்கிறது?

எம்மை எம் உடம்புடன் பூரணமாக ஒருமைப்பாடு கொண்டிருக்கும் மாய உணர்வு பந்தம் ஆகும். உடம்பின் உணர்விலிருந்து விடுபடுதல் தேகவிரக்தி – பந்த பாச துயரங்களிலிருந்தும் எம்மை விடுவிக்கிறது.



சாயி சிந்தனை

## நாளை

### சித்திரை-11
### வெள்ளிக்கிழமை
### 24.04.2015

திதி: ஷஷ்டி மு.இ.07.45 வரை

நட்சத்திரம்: திருவாதிரை பி.ப.03.53 வரை

சுபநேரம்: 06.00-07.30வரை

இராகுகாலம்: 10.30-12.00 வரை

## கர்ப்ப காலத்தில் செய்ய வேண்டிய பரிசோதனைகள்



கர்ப்ப காலத்தில் செய்ய வேண்டிய பரிசோதனைகள் பெண்களுக்கு பொதுவாகக் கர்ப்பத்தின் அறிகுறிகள் அவர்களது முதல் தவறிய மாதவிடாய் காலத்திலிருந்தே தெரிய ஆரம்பிக்கும். உடலில் கர்ப்ப ஹார்மோன் அளவு அதிகரிப்பதால் இந்த அறிகுறிகள் தென்படுகின்றன. கர்ப்ப காலத்தில் முதல் 3 மாதங்கள் மிகவும் சிக்கலான மாதங்களாகும். இந்தக் காலத்தில் கருவின் மூளை, நரம்பு மண்டலம், இதயம் மற்றும் அனைத்து உறுப்புக்களும் உருவாகின்றன. எனவே தான், இந்தக் காலகட்டத்தில் மகப்பேற்று மருத்துவரின் அனுமதியின்றி எந்த மருந்தையும் உட்கொள்ளக் கூடாது. சில மருந்துகள் கருவை ஊனமாக்கவோ, கலையவோ செய்ய வாய்ப்பிருக்கிறது. மேலும் முதல் 3 மாதங்களில் காய்ச்சல், சளி, வயிற்றுப்போக்கு ஆகியவை நம்மை அணுகாமல் பாதுகாப்பாக இருத்தல் வேண்டும். மேலும் உடலுறவைத் தவிர்ப்பது நல்லது. கர்ப்பக் கால அறிகுறிகள் சிலருக்கு வேறு சில காரணங்களாகவும், வேறு சில வியாதிகளாகவும்கூட ஏற்படலாம். அதனால், அறிகுறிகள் வைத்து கர்ப்பத்தை கண்டறிவதைவிட நம்பகமான அறிவியல் முறை பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்தது. பெண் உறுப்பில் ஏற்படும் மாற்றங்கள், கருப்பை வளர்ச்சி, அதன் மிருதுத் தன்மை ஆகியவற்றைக் கொண்டு மருத்துவரால் 2 அல்லது 3 மாதங்களில் கருதரிப்பதை உறுதி செய்து கொள்ள முடியும் என்றாலும்– சிறுநீர்ப் பரிசோதனை, ஹார்மோன் பரிசோதனை, அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் பரிசோதனை ஆகியவற்றின் மூலமே கர்ப்பம் தரிப்பதை நிச்சயமாக உறுதி செய்ய முடியும். மேலும், கர்ப்பம் கருப்பைக்குள்ளேதான் உள்ளது என்பதையும் கட்டாயம் ஸ்கேன் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். கருப்பைக்கு வெளியே கூடியிருந்தால் அது தாயின் உயிருக்கே ஆபத்தாய் அமைந்துவிடும்.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 30 | 30 | 20–30 | 40 | 30–40 |
| கத்தரி | 60 | 50 | 60 | 40 | 40–50 | 60 | 50–60 |
| கரட் | 100 | 110 | 120 | 100 | 120 | 120 | 100–120 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 30–50 | 60 | 40–60 |
| பயிற்றை | 50 | 50 | 60–80 | 40 | 70–80 | 50 | 60–80 |
| பாகல் | 80 | 120 | 100–120 | 80 | 60–80 | 80 | 80–100 |
| கருணைக்கிழங்கு | 80 | – | – | 80 | 30–40 | 120 | 80–100 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 100 | 80 | 80–90 | 90 | 80–90 |
| சி.வெங்காயம் | 60 | 80–90 | 50–100 | 60 | 80–100 | 90 | 80–100 |
| பூசணி | 40 | 20 | 40 | 30 | 20–30 | 40 | 50–60 |
| தக்காளி | 30 | 40 | 40 | 40 | 40–50 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 50 | 40–60 | 40 | 60 |
| கீரை | 20 | 20–30 | 30 | 10 | 20–30 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | – | 30 | 30 | 20–30 | 40 | 10 |
| பச்சை மிளகாய் | 40 | 40 | 30–40 | 40 | 50 | 70 | 50–60 |
| புடோல் | 40 | 30 | 40 | 40 | 30–40 | 30 | 40–50 |
| கோவா | 30 | 40 | 40 | 30 | 20–30 | 30 | 60–80 |
| வெண்டி | 50 | 60 | 30–60 | 50 | 60–70 | 40 | 40–60 |
| போஞ்சி | 180 | 100 | 120 | 100 | 100–120 | 160 | 80–100 |
| லீக்ஸ் | 160 | 180 | 200 | 160 | 150–160 | 160 | 100–120 |
| தேங்காய் | 60 | 35–50 | 60 | 50–60 | 50–60 | 50–60 | 35–50 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 90 | 80–120 | 90 | 80–90 |
| தேசிக்காய் | 160 | 160 | 120–200 | 120 | 140–160 | 160 | 80–100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20–30 | 20 | 15–20 |
| கறிமிளகாய் | 100 | 70 | 100 | 60 | 70–80 | 100 | 120–180 |
| இராசவள்ளி | 120 | – | – | 100 | 100–120 | 140 | – |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 650 | 700 | 750 | 600 |
| நண்டு | 250 | 300 | 300 | 300 | – |
| கணவாய் | 250 | 600 | 500 | 700 | 400 |
| பாரை | 600 | 500 | 600 | 600 | 350 |
| சுறா | 550 | 500 | 700 | 600 | 500 |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 350 |
| விளை | 600 | 400 | 500 | 450 | 350 |
| முரல் | 300 | 300 | 350 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 400 | 500 | – |
| கிழாக்கன் | 500 | 600 | – | 500 | 350 |
| ஒரா | 400 | 250 | 250 | – | – |
| திரளி | 200 | 250 | 100 | 200 | – |
| நகரை | 200 | 250 | 300 | – | 60 |
| சூடை | 180 | 150 | 200 | 100 | – |
| ஒட்டி | 250 | 150 | – | – | 130 |
| திருக்கை | 150 | 350 | 300 | 200 | 250 |
| பாலை | 300 | 250 | 400 | 400 | – |
| வாளை | 100 | 100 | 300 | 200 | 250 |
| கொய் | 80 | 150 | 100 | 100 | 80 |
| மதனம் | 150 | 200 | 400 | – | – |

# மன்மத வருட பலன்கள்



## கன்னி

இந்த வருடத்தில் உங்களுக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும். இந்தக் காலகட்டத்தில் யோகா, பிராணாயாமம் போன்றவற்றில் ஈடுபட்டு மனதை உற்சாகமாக வைத்துக் கொள்வது நலம் பயக்கும். சில அன்பர்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று வரும் யோகம் உண்டாகும். பிறரின் முக பாவனைகளைக் கண்டே அவர்களின் மனதை அறிந்துகொள்வீர்கள். தெய்வ வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். ஆன்மிகப் பெரியோர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். சமுதாயத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். அதேநேரம் இக்கட்டான சூழ்நிலைகளில் உணர்ச்சி வசப்படாமல் பொறுமை காக்கவும். வேகத்துடன் விவேகத்தையும் கூட்டிக்கொண்டால் உங்கள் செயல்கள் அனைத்தும் திட்டமிட்டபடி குறிக்கோள்களை எட்டும். ஏமாற்றங்களிலிருந்து தப்பிப்பீர்கள்.

புதிய முதலீடுகளில் ஈடுபட்டு வருங்காலத்தை வளமாக்கிக் கொள்வீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் திடீரென்று பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவை தானாகவே தீரும். தீயவர்கள் உங்களை விட்டு தாமாகவே விலகி விடும் அதிசயம் நிகழும். அதே நேரம் இளைய சகோதரர்களுடனான உறவில் சில சலசலப்புகள் ஏற்படும். ஆனாலும் விட்டுக்கொடுத்து நடந்துகொண்டு அவற்றை சமாளிப்பீர்கள். சிலர் தற்போது வசிக்கும் வீட்டிலிருந்து பெரிய வீட்டுக்குக் குடிபெயர்வார்கள். இந்த ஆண்டு தொழிலில் அதிக முதலீடுகளைச் செய்வீர்கள். இதனால் வருமானம் குவியும். உங்கள் புகழும், கௌரவமும் உயரும். இது நாள் வரை தேவையற்ற வீண் பழி சுமந்த சில வாசகர்கள், அவற்றிலிருந்து விடுபடுவார்கள். உங்களின் முயற்சிகள் பல மடங்காக உயர்ந்து, அதற்கேற்ற வெற்றி கிடைக்கும். உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். திட்டமிட்ட செயல்கள் துரிதமாக நடக்கும்.

குடும்பத்தில் அரங்கேறும் சுப நிகழ்ச்சிகளால் சந்தோஷம் அடைவீர்கள். உங்கள் பேச்சில் அவ்வப்போது ஆணவம் தலை தூக்க நேரலாம். கவனத்துடன் அதைத் தவிர்த்துக் கொள்ளவும். இந்த ஆண்டு உங்களின் பேச்சாற்றல் அதிகரிக்கும்; தன்னம்பிக்கை உயரும். உங்களின் எண்ணங்களை அடுத்தவர்கள் நல்ல முறையில் புரிந்து கொள்வார்கள். புதிய பொறுப்புகள் தாமாகவே தேடி வரும். வருமானம் நல்ல முறையில் வந்தாலும், சிலருக்கு குறுக்கு வழியில் செல்ல மனம் நினைக்கும். எனவே மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு நேர் வழியில் செல்லவும். இதன்மூலம் பல பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கலாம்.

**உத்தியோகத்தர்கள்**

மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் நல்ல முறையில் இருக்கும். இதனால் மனதில் புத்துணர்ச்சி அதிகரிக்கும். உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சிலர் நெடுநாள்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வைப் பெறுவார்கள். மேலும் அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டாகும். உங்களின் வேலைகளைச் சரியாகத் திட்டமிட்டு செய்வீர்கள். மேலிடத்தின் நம்பிக்கைக்கு உரியவராக உயர்வீர்கள்.



**கலைஞர்கள்**

கலைத்துறையினருக்கு புகழும், பாராட்டும் கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும். சக கலைஞர்களிடம் உங்களின் இரகசியங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம். உங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு களைத் தக்கபடி பயன்படுத்தி, பொறுப்புடன் நடந்து கொள்வீர்கள். சில நிறுவனங்களால் முந்தைய காலகட்டத்தில் நேரிட்ட மன வருத்தங்களை ஒதுக்கி வைத்துவிட்டு உழைப்பது, முன்னேற்றத்துக்கு உதவும்.

**பெண்கள்**

பெண்மணிகளுக்குக் குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்களை அணுகிப் பயன் பெறுவார்கள். சேமிப்பில் நல்ல கவனம் செலுத்துவீர்கள். ஆலயங்களுக்குச் சென்று ஆன்மிக பலம் பெறுவீர்கள். மற்றபடி அனைவரிடமும் விட்டுக்கொடுத்து நடந்துகொண்டு குழப்பங்களைத்தவிர்க்கவும்.

**மாணவர்கள்**

நினைவாற்றல் அதிகரிக்கும். இதனால் தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். மனதுக்குப் பிடித்த கேளிக்கைகளிலும், விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு மகிழ்ச்சிக் கடலில் திளைப்பீர்கள். அதேநேரம் நண்பர்களிடம் எச்சரிக்கையுடன் நடந்துகொள் ளுங்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 2, 5, 6, 9
அதிர்ஷ்ட திசைகள்: கிழக்கு, வடக்கு
அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், செவ்வாய், வியாழன்
அதிர்ஷ்ட மாதங்கள்: வைகாசி, புரட்டாதி, தை
கவனமாக இருக்க வேண்டிய மாதங்கள்: சித்திரை, ஆவணி

# உறவுகளைத் தக்க வைத்துக் கொள்ள



நம்மில் பெரும்பாலானவர்களுக்கு 20 வயதில் மனம் எந்த அளவுக்குப் பக்குவப்படுகிறதோ அதுதான் வாழ்க்கையின் கடைசி வரை நீடிக்கும். நம் எதிர்கால உறவை வாழ்க்கையின் கடைசி வரை நாம் தக்க வைத்துக் கொள்வதற்கு இந்த 20 வயது தொடக்கம் தான் வழிவகுக்கிறது.

நீங்கள் பாடசாலைப் படிப்பையும் முடித்து விட்டதால், எந்த விடயத்தையும் புத்திசாலித்தனமாகக் கையாள வேண்டியது மிகமிக அவசியம். எதிர்கால உறவைத் தேர்ந்தெடுப்பதும் அதுபோலத்தான். உங்கள் வாழ்க்கையின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கும், உங்கள் வேலைக்கும் (அல்லது தொழிலுக்கும்), உங்கள் குடும்பத்துக்கும் அந்த உறவு உபயோகப்படும்படி இருக்க வேண்டும். அதனால், இந்த வயதில் அத்தகைய நல்ல உறவைப் புத்திசாலித்தனமாகத் தேர்ந்தெடுத்தால் உங்கள் எதிர்காலம் சிறப்பாக இருக்க அது உதவும். இந்த வயதில் நீங்கள் தேர்வு செய்துள்ள உங்கள் எதிர்காலத் துணைக்கும், உங்களுக்கும் சிறு சிறு பிரச்சினைகள் வருவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், அத்தகைய பிரச்சினைகளை பெரும் ஈகோவாக வளர விட்டால், உங்களுக்குள் விரைவில் விரிசல் ஏற்பட்டுவிடும்.




புத்திசாலித்தனமாக அத்தகைய பிரச்சினைகளைச் சமாளிக்க முயற்சி செய்யுங்கள். 'சமாதானம்' என்ற வார்த்தை மட்டுமே பெரும் தாரக மந்திரம்!



வாழ்க்கையில் நாம் எப்போதுமே பலவிதமான மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம். சில சமயம், உங்கள் எதிர்கால உறவில் கூட சில மாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம். இதற்குஎப்போதும் நீங்கள் தயாராகவே இருக்கவேண்டும். மாற்றங்களுக்குத் தயாராக இல்லையென்றால், அதற்கேற்ற விளைவுகளைக் கண்டிப்பாக எதிர்கொண்டே ஆக வேண்டும்.

## பெண்களே உங்களுக்கு....


- பெண்களே எழுதப் பழகுங்கள். கவலைகளை, எரிச்சல்களை, தோல்விகளை குறைக்க எழுத்து வடிகாலாகும்.
- குழப்பம், கவலைகளை உள்ளுக்குள் புதைக்காமல் நம்பிக்கைக்குரிய நண்பர்களிடம் பகிருங்கள்.
- தினமும் உங்கள் மனதை மகிழச்செய்யும் செயல்கள் எதையேனும் ஒன்றைச் செய்யுங்கள். அதில் பொருளாதாரப் பயன் ஏதும் இல்லாவிட்டாலும் கூடப் பரவாயில்லை.
- பிறருக்காக எதையேனும் செய்யப் பழகுங்கள். செய்யும் அனைத்து செயல்களையும் ஆத்மார்த்தமான அன்போடு செய்யுங்கள்.
- என்னை யாரும் புரிந்துகொள்ளவில்லையே எனும் முனகல்களைத் தவிர்த்து, பிறரைப் புரிந்து கொள்ள முயலுங்கள்.
- உங்கள் உடை, நடை பாவனைகளின் தன்னம்பிக்கை மிளிரட்டும். உடைகளை நன்றாக அணிவதே தன்னம்பிக்கையை அதிகரிக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.
- நிறைய வேலைகளை ஒரே நாளில் முடிக்க நினைக்காதீர்கள். ஒவ்வொரு வேலைக்கும் இடையே சரியான இடைவெளி விடுங்கள்.
- வார இறுதிகள், விடுமுறை நாள்களை மிகச் சிறப்பாகச் செலவிடுங்கள். வெளியே செல்வது, கடற்கரைக்குச் செல்வது என மனதை புத்துணர்ச்சியாக்குங்கள்.
- இன்றைய பணிகளை செவ்வனே செய்தால் நாளைய பணிகள் செவ்வனே நடைபெறும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.
- பிடிக்காத வேலை இருந்தால் அதை முதலிலேயே முடித்து விடுங்கள். அப்போது தான் தொடர்ந்து செய்யும் பிடித்தமான வேலைகள் மனதை இலகுவாக்கும்.
- மன்னிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள், அடுத்தவர்களைக் காயப்படுத்தாமல் வாழப்பழகுங்கள். அது உங்களை பக்குவப்படுத்தும்.






# ஆட்டின் புத்திசாலித்தனம்

ஒரு காட்டில் ஓநாய் ஒன்று இருந்தது. அது இரவு நேரத்தில் ஊருக்குள் புகுந்து, ஊரில் இருந்த ஆடு, மாடுகளை வீழ்த்தி உண்டு வந்தது.. அதே ஊரில் மாடசாமி என்பவன் ஒரு ஆட்டை வளர்த்து வந்தான். அந்த ஆடு புத்திசாலியாக வளர்ந்தது... ஒரு நாள் இரவு ஊருக்குள் வந்த ஓநாய் மாடசாமியின் ஆட்டைப் பார்த்துவிட்டது,அதன் மீது பாய தயாரானது...ஆடோ..உயரமான இடத் துக்கு ஓடியது.அங்கிருந்தபடியே புத்திசாலியான அந்த ஆடு..கீழே இருந்த ஓநாயிடம், 'உமக்கு உணவாக ஆக நான் தயார்...ஆனால் அதற்கு முன் எனக்கு ஒருசிறு ஆசை...இவ்வளவு அழகாக உள்ள நீங்கள் பாட...நான் ஆட வேண்டும்' என்று கூறியது. தன்னை அழகன் என்ற புகழ்ச்சியில் மகிழ்ந்த ஓநாய் பாட சம்மதித்து தன் கொடூரக் குரலால் பாட ஆரம்பித்தது. அந்த சத்தம் கேட்டு, தூங்கிக்கொண்டிருந்த ஊர்மக்கள் விழித்தெழிந்து வந்து ஓநாயை அடித்துக் கொன்றனர். புகழ்ச்சியில் மயங்கிய ஓநாய் உயிரைவிட்டது.ஊரில் இருந்த ஆடு, மாடுகள் பயமின்றி வாழ்ந்தன...மாடசாமியின் ஆட்டின் புத்திக்கூர்மையை அனைவரும் பாராட்டினர்.



# காட்டுத் தீ

உலகமெங்கும் உள்ள மொத்த காடுகளின் வில்லன் யார் தெரியுமா? காட்டுத்தீ தான். மின்னல், எரிமலை, பாறைச்சரிவால் ஏற்படும் உராய்வுகள், சிறு தீப்பொறிகள் இவை காட்டுத் தீ உருவாக காரணங்களாக இருந்தன. ஆனால், இப்போது உக்கிய குப்பைகளின் வாயுக்களும், அணைக்கப்படாத சிகரெட் துண்டுகளும் காட்டுத்தீக்கு வழிவகுக்கின்றன. எதிரிகளின் ஊடுருவலை தடுக்க அந்தக் காலத்தில் இராணுவத்தினர் காட்டுக்குத் தீ வைப்பதை பழக்கமாகக் கொண்டு இருந்துள்ளனர். மரங்கள் இருக்கும் இடங்களில் இயற்கையாகவே அதிக அளவில் சுத்தமான ஒட்சிசன் வாயு இருக்கும். அதுவே தீ எரியக் காரணமாகி விடுகிறது. காடு தீப்பற்றி எரியும் போதே அந்தப் பகுதியில் வீசும் காற்றின் வெப்பம் 800 டிகிரி செல்சியஸ் வரை கூடும். வெப்பமான இடங்களில் இருக்கும் மரங்களின் நீர் ஆவியாகி விடுவதால், மரங்கள் எல்லாம் ஈரப்பதம் இல்லாமல், காய்ந்து விறகுக்கட்டை போல் மாறிவிடும். காட்டுத்தீயின் வேகம் மணிக்கு 10 கி.மீ. என்ற அளவில் இருக்கும். அதுவே புல்வெளி என்றால் 22 கி.மீ. வேகத்தில் பரவும். புயல், பெரும் காற்று வீசும் சமயங்களில் கேட்கவே வேண்டாம். காட்டுத்தீயை



கட்டுப்படுத்த அது பரவும் திசைக்கு எதிர்த் திசையில் தீ வைப்பதுதான் தீர்வு. அப்படி தீ வைக்கும் போது அந்த இடத்தில் இருக்கும் மரம், மட்டைகள் கருகி தீய்ந்து விடும். காற்றின் போக்குக்கு வேகமாக பரவி சீறிவரும் காட்டுத்தீ அந்த இடத்தில் பரவ மரங்கள் எதுவும் மிச்சம் இருக்காது என்பதால் அதன் சீற்றம் அடங்கி விடும்.

# நம்பினால் நம்புங்கள்!

மண்புழுக்களுக்கு 5 இதயங்கள்!

மழையில் ஓடும்போது 50 சதவீதம் அதிகம் நனைவோம்!

'லேடிபக்' எனப்படும் வண்டினத்துக்கு பயம் ஏற்படுகையில், மூட்டுகளின் வழியே வாசனையுள்ள நீரை வெளியேற்றும்.

'ஜெயன்ட்' வகை ஆமைகள் வாழ்நாள் முழுக்க வளர்ந்துகொண்டே இருக்கும்.

10 ஆயிரம் 'டூத் பிக்ஸ்' குச்சிகளைக் கொண்டு 4 அடி நீளமுள்ள படகை உருவாக்கியுள்ளார் ஒரு கலைஞர். இதை ரிமோட் கொன்ட்ரோல் கொண்டு இயக்கவும் முடியும்!

நியூசிலாந்து நாட்டு மக்கள்தொகையை விட, அங்குள்ள செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை அதிகம்!

ஒரு கோடிக்கும் அதிக எண்ணிக்கையிலான லட்சாதிபதிகள், இன்று இவ்வுலகில் வாழ்கிறார்கள்.

விண்வெளி வீரர்களின் பாதத் தடங்கள் என்றும் நிலவில் நிலைத்திருக்கும். அவற்றை அழிக்க அங்கே காற்றில்லையே!

அமெரிக்காவில் நிஜ ப்ளமிங்கோ பறவைகளை விட, பிளாஸ்டிக் பறவைகளே அதிகம்.

பார்வைக்கு, மூளையின் மொத்த சக்தியில் மூன்றில் ஒரு பங்கு தேவைப்படுகிறது.

# மன அழுத்தத்தை தடுக்கும் எளிய வழிகள்

மனிதனுக்கு 'மன அழுத்தம் ' என்னும் வியாதி தான் கொடிய வியாதி. அது சப்தமில்லாமல் நம்மை கொஞ்சம் கொஞ்சமாக உயிரை எடுக்கும். அதை மனிதனை அளிக்கும் 'எமன் ' என்று கூட சொல்லலாம். அது எதனால் வருகின்றது மற்றும் அதற்கான தீர்வுகளைப் பார்ப்போம். மனதில் 'தாழ்வு மனப்பான்மை' மேலோங்கி நிற்பது. தான் மற்றவர்களைக் காட்டிலும் எல்லாவிதத்திலும் குறைந்தவன் அல்லது தனக்கு மதிப்பு ஏதுமில்லை என்பது போல் ஓர் உணர்வு. இப்போது இருக்கும் நிலைமையை மட்டும் வைத்து எண்ணிக்கொண்டு இருக் காதே! உனது வாழ்க்கையைவிட மோசமாக உள்ள, சாவின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கும் கோடி கணக்கான மக்களின் வாழ்க்கையை ஒருமுறை பார். அவர்களே நம்பிக்கையோடு காலம் தள்ளுகின்ற போது உன்னால் வாழமுடியாதா! தாழ்வு மனப்பான்மையை உன் மனதிலிருந்து அகற்றிவிடு. உன் வாழ்க்கையை உயர்த்த வரும் உழைப்பு, முயற்சி என்கிற அழகிய தங்க ரதம் உன்பக்கத்தில் நிற்கிறது. உனது தாழ்வு மனப் பன்மையை தூக்கி எறிந்துவிட்டு , அந்த ரத்தத்தில் ஏறிக்கொண்டு வீறுநடை போடு. அதில் உன்னை போன்று பாதித்தவர்களை ஏற்றிக்கொண்டு அவர்களுக்கு நல்வாழ்வு கொடு. அவர்களுக்கு புது தெம்பு கொடு. இன்றிருக்கும் நிலைமை நிரந்தரமானவை அல்ல. மாறக்கூடியவை. மன மகிழ்ச்சி கொள். அனைத்தும் சரியாகிவிடும். வாழ்வில் எவ்வித பிடிப்புமில்லாமல் வீணான கற்பனைகள், எண்ணங்களை வளர்த்து கொண்டு 'தன்னம் பிக்கை 'இல்லாமல் இருப்பது. அதற்கு காரணம் 'பயம்' தான். யாரைக்கண்டும் பயப்பட தேவையில்லை! அவர்களும் உன்னைப்போன்ற மனிதர்கள். அவர்கள் வானத்திலிருந்து குதித்தவர்கள் கிடையாது. அவர்களுக்கென்று தனிப்பட விதத்தில் 'பலம்' தனியாக இருப்பதில்லை. உன்னாலும் பலம் பெறமுடியும்.



அதற்கு 'தன்னம்பிக்கை ' கொள். உன் வாழ்வில் பிடிப்பு தானாக வரும். பிறர் சுட்டெரிக்கும் வார்த்தைகளால் பேசி அவமதிப்பது. கௌரவத்தை குலைப்பது, உண்மைக்குப் புறம்பாக பழிகளை சுமத்துவது போன்றவற்றை பெரிதாக எண்ணி மனதளவில் வருந்திக் கொண்டிருப்பது. வாழ்கையில் முன்னேறும்போது 'விமர்ச்சனங்கள்' வரத் தான் செய்யும். அதைப்பற்றி அதிகம் கவலை படாமல் , உதறிதள்ளி விட்டு உன்னுடைய குறிக்கோளை நோக்கி பயணம் செய்துகொண்டிரு. அப்போது தான் அவைகள் உன் காதில்விழாது. வெற்றி உனதே! தொழில்களில் அல்லது வேலையில் முடிவு எடுக்கமுடியாமல் திணறுவது, செய்யும் காரியத்தில் முழு ஈடுபாடு செலுத்த முடியாமல் கவனக் குறைவாக செயற்படுவது, மறதியின் காரணமாகப் பல பிரச்சினைகள் உருவாவது. முடிவு இடிப்பது, வேலையில் கவனக்குறைவு, மறதி ஆகியவற்றிக் குக் காரணம் மனம் ஒருமுகப் படுத்தமுடியாமல் இருப்பது. அதை களைவதற்கு தியானப் பயிற்சி சிறிதளவு தினமும் மேற்கொள்ளுங்கள். நாளடைவில் அனைத் திலும் தேர்ச்சி பெறுவீர்கள். சில நேரத்தில் வழக்கமாக இருக்கும் சூழ்நிலைகள் பதிலாக புதிய சூழ்நிலைக்கு மாறும் போது , அதை சமாளிக்க வழி தெரியாமல் திணறுவது, புதிய உணவு மற்றும் உறவுகளில் மாற்றங்கள், தூங்கும் நேரத்தில் பெரிய மாறுதல்களை எதிர்கொள்ள முடியாமல் திண்டாடுவது. எவருக்குமே சூழ் நிலைகள் மாறும்போது அனைத்துமே புதியதாயும், கூச்சமாகவும், யாரிடத்தில் என்ன கேட்பது என்று குழம்புவதும் , தான் மட்டும் தனியாக இருப்பது போன்ற பிரமையும் உண்டாகும். அந்த சமயங்களில், தான் மட்டுமே அதிகமாக கஷ்டப்படுவது போலவும் ஒரு உணர்வு உண்டாகும். ஆனால் பழகப் பழக அந்த சூழ்நிலைகள் உங்களுக்கு பிடிக்கத் துவங்கிவிடும். அதுவரை பொறுமையுடன் மாற்றத்திற்கேற்ப அனுசரித்து நடந்து கொண்டால் அந்த சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக மாறிவிடும். ஆத்திரப்பட்டு அப்போது சட்டுபுட்டென்று முடிவு எடுத்துவிடக்கூடாது. அப்படி எடுக்கும் முடிவு சரியாக இருக்காது. பொறுமை கொள். உனக்கேற்றவாறு சூழ்நிலைகள் மாறும். வேலை, வேலை என்று ஓய்வில்லாமல் , மனதுக்கு சிறிதளவு கூட ஓய்வு கொடுக்காமல் இருப்பதும், பிரச்சி னைகளை எதிர்கொள்ள முடியாமல் கலங்கி நிற்பது. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பது சரிதான். *(தொடரும்)*



# மைத்திரி அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் ஆக்கபூர்வமான சில செயற்பாடுகள் முன்னெடுப்பு

## அரசியல் தீர்வைப் பெறுவதற்கான பொறிமுறை முன்னெடுக்கப்படவேண்டுமென சம்பந்தன் வலியுறுத்து

"ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான தேசிய அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் ஆக்கபூர்வமான சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசின் நூறு நாள் வேலைத் திட்டம் இன்றுடன் நிறைவடைகின்றது.

இது தொடர்பில் கருத்து வெளி யிடுகையிலேயே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எம்.பி. மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் தேசிய அரசு அமையப்பெற்று நூறு நாள் வேலைத்திட் டம் முன்னெடுக்கப்பட்டது. இத்திட் டத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பொறிமுறை காணப்படவில்லை.

எனினும், நாட்டை ஜனநாயக ரீதியாக முன்னேற்றமடையச் செய்வதற்கும், மக்களின் இறைமையை மீட்டெடுப்பதற்கும், சர்வாதிகாரத்தை வலுப்படுத்தும் நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறைமையை நீக்குவதற்கும், நீதித் துறையைப் பலப்படுத்துவதற்குமான செயற்றிட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு அவை முன்னெடுக்கப்படு வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் போர் நிறைவடைந்ததன் பின்னரும் தொடர்ச்சியாக முகங்கொடுத்துவரும் பிரச்சினைகளான காணி அபகரிப்பு, காணாமற்போனார் விடயம், அரசியல் கைதிகள் விடுதலை, மீள்குடியேற்றம், விதவைப் பெண்களின் அபிவிருத்தி உள்ளிட்ட அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக முதற்கட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

அச்செயற்பாடுகள் வேகமாக முன்னெடுக்கப்படாது விட்டாலும் கடந்த அரசு தமிழ் மக்களின் இப்பிரச்சினைகள் தொடர்பாக எவ்விதமான கரிசனையையும் காட்டவில்லை.

அவ்வாறான நிலையில் தேசிய அரசு நூறு நாள் வேலைத்திட்டத்தினுள் அவ்விடயங்கள் தொடர்பில் அக்கறை செலுத்தியிருப்பதானது நல்லெண்ணத்தை வெளிப்படுத்து மொரு நடவடிக்கையாகும்.

நீண்டகாலமாக காணப்படும் தேசிய பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்கான பொறிமுறையொன்று உள்வாங்கப்பட்டு தாமதமின்றி அக்கருமம் ஊக்குவிக்கப்பட்டு முன்னெடுப்படவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். அதன் ஊடாகவே ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நியாயமான தீர்வொன்றை அடையமுடியும்" – என்றார். (த)

# லலித் வீரதுங்கவிடம் நேற்று விசாரணை

கொழும்பு, ஏப்.23

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க, பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவினால் நேற்று விசார ணைக் குட்படுத்தப்பட்டார்.

லலித் வீரதுங்க மீது நிதி மோசடிக் குற்றச்சாட்டுத் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பிலேயே அவர் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.


**மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி (ஓவர் கேம்)**

சிவா விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி
ஆரம்பமாகும் திகதி 01.05.2015
இடம்: கழக மைதானம் (யாழ்ப்பாணம்)
போட்டி விபரம்: 06பேர் கொண்ட போட்டி
04பேர் கொண்ட போட்டி
விண்ணப்ப முடிவுத் திகதி : 27.04.2015
தொடர்புகளுக்கு: S. அரவிந்தன் 0779863089
V. ஜெயப்பிரசாந் 0770723185
தலைவர்,
சிவா விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம்.



**கண்ணீர் அஞ்சலி**

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் காணிக்கிளையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
திருமதி சூரியகுமாரி யோகநாதன்
அவர்களின் அன்பு மாமி
திருமதி
இலட்சுமிப்பிள்ளை செல்லையா
அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
தென்மராட்சி


# சிறுவன் கடத்தல்; மூவருக்கு பிணை

தென்மராட்சி,ஏப்.23

மட்டுவில் பகுதியில் ஓட்டோவில் வந்த மூவர் அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் அத்துமீறி நுழைந்து அங்கிருந்தவர்களை ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தி விட்டு அங்கிருந்த சிறுவனைக் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் சாட்சிகள் அடையாளம் காட்டத் தவறியதால் மூவரையும் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றினால் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த மூவரையும் தலா 50 ஆயிரம் பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் இரண்டாம் மூன்றாம் சந்தேக நபர்களை நீதிமன்ற நன்னடத்தை உத்தியோகத்தர் மூலம் நல்வழிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார். (த-9)

# இழுவை மடி பயன்படுத்தினால் இரு வருடச் சிறைத் தண்டனை

## தனிநபர் பிரேரணை சமர்ப்பித்தது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

இழுவை மடியைப் பயன்படுத்தி இலங்கைக் கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டால், இரண்டரை வருட சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய வகையில், கடற்தொழில் நீரியல் வளச் சட்டத்தில் திருத்தம் செய்யும், தனிநபர் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனினால் இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் பிரகாரம், இழுவைமடி பயன்படுத்துவதனை தடை செய்யும் அல்லது தண்டனைக்குள்ளாக்கும் சட்ட ஏற்பாடுகள் போதியளவில் இல்லை. வடக்கு மீனவர்களுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனாவுக்கும் இடையில் இந்த மாத ஆரம்பத்தில் இடம் பெற்றகலந்துரையாடலிலும்இதுசுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையிலேயே, இழுவை மடியைப் பயன்படுத்துவதைத் தண்டனைக்குரிய குற்றமாக மாற்றியமைக்கும் வகையில் சட்டத் திருத்தம், தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பினுள் இழுவை மடியைப் பயன்படுத்தினால், அவர்களுக்கு இரண்டரை வருட சிறைத் தண்டனையும் 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கும் வகையில், கடற்தொழில் நீரியல் வளச் சட்டத்தில் திருத்தம் செய்யும், தனிநபர் பிரேரணையே நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரமளவில் இது வர்த்தமானிப்பிரசுரத்தில்வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)


**ராகம்ஸின் தலைவா**

**ஓராண்டு நினைவில்...**



ராகம்ஸ் இசைக்குழுவின்
தலைவா - எம்மை
நல்ல நிலையில் வைத்த
முதல்வா

கலைக்காக:- 22.09.1953

சோகம் எம் நெஞ்சில்
மாறவில்லை - எம்
சொந்தம் உமை அன்றி
வேறுமில்லை

கடவுளுக்காக:- 23.04.2014

அகவை ஒன்று நூறாய்
மறைந்தாலும்
ஆயிரம் இசை நிகழ்வு
தொடர்ந்தாலும்

அண்ணா உன் பணியை
தொடர்வோம் -உயர்
அன்பில் உமை என்றும்
மறவோம்.

அமரர்
தம்பிராசா சந்திரமோகன்
பிரிவுத்துயரில்
யாழ். ராகம்ஸ் குடும்பத்தினர்
0777 360590


# வேலையற்றோருக்கு தொழில் வாய்ப்புகள்

## யாழ்.வர்த்தகர் சங்கம் நடவடிக்கை இன்று தொடக்கம் விண்ணப்பியுங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்.நகரில் உள்ள பல வர்த்தக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் எனப் பலவற்றிலுமாகச் சுமார் 200 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுகின்றன. அதனால் வேலையற்று இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க யாழ்.வர்த்தர் சங்கம் வேலை வங்கி என்னும் திட்டம் மூலமாக நடவடிக்கை எடுத்துள்ளது.

வேலைக்கான வெற்றிடங்கள் அதிகம் காணப்படுகின்றமையால் வேலை·தேவையானவர்கள் மட்டும் அதற்கு விண்ணப்பிக்குமாறு யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட வேலை வங்கி என்னும் திட்டம் முன்னர் செயற்படுத்தப்பட்டது. கடந்த வருடங்களில் பலருக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்பட்டது. தற்போதும் வேலைக்கான வெற்றிடங்கள் பல உள்ளன. அதனால் வேலை வங்கி ஊடாக வேலைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விற்பனையாளர், முகாமையாளர், விற்பனை முகவர்கள், சாரதிகள், கணினி இயக்குநர்கள், சிற்றூழியர்கள், கணக்காளர் ஆகிய வேலைகளுக்கு வெற்றிடங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆண் பெண் இருபாலாரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்கள் தாம் விரும்பும் வேலைகளைக் குறிப்பிடல் வேண்டும். இன்று வியாழக்கிழமை தொடக்கம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். உண்மையில் வேலை தேவைப்படுபவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை, யாழ்.வர்த்தகர் சங்கம், இலக்கம் 165, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும். எனவே எதிர்பார்க்கும் வேலைகளைக் குறிப்பிட்டு சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

வேலையாள்கள் தேவையான, இதுவரை விண்ணப்பிக்காத வர்த்தக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களும் வேலையாள்களைக் கோரி யாழ்.வர்த்தகர் சங்கத்தின் வேலை வங்கியில் விண்ணப்பிக்க முடியும். ஓய்வுபெற்றவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று ஜெயசேகரம் மேலும் தெரிவித்தார். (த-4)

# பொலிஸ் பரிசோதகர் கொலை; மனைவி கைது

கொழும்பு, ஏப் 23

பண்டாரகம பொலிஸ் உப-பரிசோதகர் கொலை தொடர்பில் அவரது மனைவி உட்பட மூவரை நேற்றுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட பொலிஸ் உப-பரிசோதகர் ஆர். டபிள்யூ பளிஹவதன தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் அவரது மனைவி மற்றும் பாணந்துறை கோழிக்கடை உரிமையாளர் ,தெஹிவளைய்யைச் சேர்ந்த நபர் என மூவரை பொலிஸார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

குறித்த கொலையானது 10லட்சம் ரூபா குத்தகை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (த)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு ★ 07 ★ 02 ★ 1935



இறப்பு ★ 23 ★ 04 ★ 2014

அமரர்
செபமாலை சிறில்
(திருப்பண்டறைக்காப்பாளர்-
புனித யாகப்பர் ஆலயம்)

உங்களோடு வாழும் போது
உணர்ந்தோம் ஐயா
உங்கள் அன்புதனை ஆனால்
நீங்களோ தூரமாய்ப் போன பின்பு
ஏங்குகின்றோம் உங்கள் அன்பிற்காய்
நீங்கள் ஒருமுறை விழித்துக்கொண்டால்
போதும் உங்கள் சந்ததிகள் சுவாசிக்கும்
உங்கள் அன்புக் காற்றை

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# முன்னாள் போராளி தீயில் எரிந்து சாவு

யாழ்ப்பாணம், ஏப். 23

முன்னாள் போராளி ஒருவர் தீயில் எரிந்து சிகிச்சை பயனளிக்காது யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

யாழ்.சுண்டிக்குளத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உழவனூர் தம்பிராசபுரம் பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜ்குமார் லோஜினி (வயது 32) என்பவரே உயிரிழந்தார். கடந்த 3 ஆம் திகதி அவர் எரிகாயத்துக்குள்ளானார். அங்குள்ள பெட்டிக் கடை ஒன்றினுள் அவர் தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டதாக அவரது கணவன் மரண விசாரணையில் கூறியுள்ளார். தீ பிடித்த பின்னர் அவர் தானாகவே ஓட்டோவைப் பிடித்து வைத்தியசாலைக்குச் சென்றார் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், எரிகாயமடைந்து வாய் பேசமுடியாதிருந்த அவரிடம் யார் தீ மூட்டியது என்று கேட்டபோது, தலையை அசைத்துக் கணவரைக் காட்டி அவரே தீ மூட்டியதாக வைத்தியசாலையில் கூறியுள்ளார் என்று உயிரிழந்தவரின் சகோதரி மரண விசாரணையில் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளை அழைத்து வரவா என்று கேட்டபோது வேண்டாம் என்றும் தலையால் அசைத்துக் காட்டியுள்ளார் என்றும் அவர் மரண விசாரணையில் கூறினார்.

தீயில் எரிந்ததனாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.


ஆனாலும் மரண விசாரணையின் போது தான், தனது மனைவி, பிள்ளைகள் உள்ளிட்டவர்கள் மனைவியின் குடும்பத்தினருடன் சுமார் 10 வருடங்களாக உறவைப் பேணுவதில்லை என்று கூறியிருந்த நிலையில், பின்னர் அதற்கு முரணாகவும் அவர் மரண விசாரணையில் தகவல் களைக் கூறியுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைமேற்கொண்டார்.உயிரிழந்தவரது கணவனும் முன்னாள் போராளி என்று கூறப்பட்டுள்ளது. (த-4)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் துரைசிங்கம்

(முன்னாள் உற்பத்தி முகாமையாளர்- இலங்கை பாற்சபை, முன்னாள் உரிமையாளர், மல்ரி சொப் வழக்கம்பரை)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் துரைசிங்கம் நேற்று 22.04.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ர புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தங்கம்மா தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரசாத் (பிரான்ஸ்), பிரதீப் (தொழிநுட்ப உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி), காலஞ்சென்ற பிரநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரிஷாவின் அன்பு மாமனாரும், புகழ், வருண் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.04.2015 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்.
077 271 8911

(59109)(4.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சின்னப்பிள்ளை முருகேசு



யாழ். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை முருகேசு கடந்த (20.04.2015) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் பாசமிகு மனைவியும், சரவணமுத்து, விஜயலட்சுமி, இராசலட்சுமி, தவராசா, கலியுகவரதன், சோமசுந்தரம், அன்னலட்சுமி, இராசேந்திரம் ஆகியோரின் அன்புத் தாயும், தங்கமுத்து, வேலாயுதம், ஆகியோரின் சகோதரியும், இராசாத்தி, முத்துவேல், முருகவேல், செல்வரத் தினம், ராணி, செல்வி, ரஞ்சித குமாரி, ராசலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்

தகவல் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### திருமதி ராஜேஸ்வரி சரவணஉற்பவம்



யாழ். சுழிபுரம்-கிழக்கைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Amsterdam ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ்வரி சரவணஉற்பவம் 17.04. 2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-தெய்வானை பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை -நாசகம் தம்பதியரின் அன்பு மருமகளும், சரவண உற்பவத்தின் அன்பு மனைவியும், பாலசுந்தரனின் பாசமிகு தாயும், சோபனாவின் அன்பு மாமியும், சண்முகலிங்கம் (சண்-பிரான்ஸ்), விக்கினேஸ்வரி (ராசாத்தி-பிரான்ஸ்), சந்திரேஸ்வரி (மலர்-பிரான்ஸ்), கணேசலிங்கம் (கண்ணன்-பிரான்ஸ்), மகேசலிங்கம் (சிவா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புனிதவதி, காலஞ்சென்ற நரசிங்கம் மற்றும் உருத்திராட்சி, சுபத்திரா தேவி, ஆழ்வாராட்சி, காலஞ்சென்ற சந்ததியார் மற்றும் ரஞ்சிதம் ஆகி யோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2015) வியாழக் கிழமை நெதர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அத்துடன் அன்னாரின் சுழிபுர இல்லத்தில் இன்று (23.04.2015) வியாழக்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

தகவல் :
சோபனா பாலசுந்தரன் (மருமகள்)
(சுழிபுரம் கிழக்கு) 0777836287
ம.ஹரிச்சந்திரன் (இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், தலைமை அலுவலகம் கொழும்பு)

நெதர்லாந்து
+31206183345

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் கந்தையா

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசான்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், புலோலி வடகிழக்கு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும், வடமராட்சி அறிவோர் ஒன்று கூடலைச் சேர்ந்தவருமான ஆறு முகம் கந்தையா 21.04.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், அழகம்மாவின் அன்புக் கணவரும், திருமதி ஏ.சறோஜினி, இளங்கோ ஆகியோரது பாசமிகு தந்தையும், அன்ரன் போவானெர்கேஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், காணி நிர்வாகத் திணைக்களம் - வடமாகாணம்) ஜோதிப்பிரியா ஆகியோரின் அருமை மாமனும், பெனிஷன், தனீரஷன், ஹரின் ஆகியோரின் பாசமிகு பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2015) வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் ஆணைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.
தொ.பே.இல. : 0766569643

தகவல் :
குடும்பத்தினர் .

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமிப்பிள்ளை செல்லையா



வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை செல்லையா நேற்று (22.04.2015) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இலங்கையர் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் (கதிர்காமு- இ.போ.ச. முரசுமோட்டை), அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நேசநாதன் (தெ.கி.ப.நோ. கூ.சங்கம்-கொடிகாமம்), மற்றும் கைலாயநாதன், சிதம்பரநாதன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி), ஏகாம்பரநாதன் (டென்மார்க்), மங்கயர்க்கரசி (வவுனியா), யோகநாதன் (இ.மி.சபை, சாவகச்சேரி), சிவகுருநாதன் (ஜேர்மனி), சாந்தநாயகி (டென்மார்க்), அகிலேஸ்வரி (டென்மார்க்), கலாசோதி (நோர்வே),சுமதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சின்னப்பிள்ளை, இன்பராணி, காலஞ்சென்ற சரஸ்வதி (பேபி, தேர்தல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்) மற்றும் திரவியமலர் (டென்மார்க்), காலஞ்சென்ற இராசரத்தினம் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா) மற்றும் சூரியகுமாரி (பிரதேசசெயலகம், தென்மராட்சி), பிரேமாவதி (ஜேர்மனி), விநாயகமூர்த்தி (டென்மார்க்), பார்த்தீபன் (டென்மார்க்), முகிலன் (நோர்வே), ஜெகத்ஜெயன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், பிரகலாதன் (லண்டன்), பிரதீபன் (பிரதேசசெயலகம், உடுவில்), தயீபராஸ் (கனடா), துலோஜனா, அர்ச்சுனன், அனுஜா (டென்மார்க்), இராகவன் (தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா), இராகுலன் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா), இராதிகா (வீதி அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா), ரேணுகா, இந்துஜன், அபிரா, அர்ச்சுதன், அர்ச்சுனா (ஜேர்மனி), அர்ச்சனா, அஞ்சனா, அபினா (டென்மார்க்), சுகீனா, தனுஜன் (டென்மார்க்), கஜானா , காடினியா(நோர்வே), சுஜித்ஜெயன், சஜித்ஜெயன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் பாலாவித்தாழ்வு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்

தகவல் :
குடும்பத்தினர் (நே. பிரதீபன்)
0777 374925

## சொத்து விவரங்களை சமர்ப்பித்தார் துமிந்த

கொழும்பு, ஏப். 23

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்லா தன்னிடம் உள்ள சொத்து விபரங்களை இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் கையளித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த நேற்றுச் சொத்துக்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை ஆணைக்குழுவில் கையளித்துள்ளார்.

தன்னிடம் உள்ள சொத்துக்கள் தொடர்பில் பலதரப்பட்ட தகவல்கள் வெளிவந்த நிலையி லேயே இதனைக் கையளித்துள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## வவுனியா விபத்துக்களில் 6 பேர் வைத்தியசாலையில்

வவுனியா, ஏப் 23

வவுனியா நெடுங்கேணி பாடசாலைக்கு அருகாமை இடம்பெற்ற விபத்து சம்பவத்தில் மூவர் காயமடைந்த நிலையில் நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.


முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் இந்த விபத்த இடம்பெற்றுள்ளது. இதில் மூவர் படுகாயடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவன் உட்பட இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பண்டாரிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# சென்னைக்கு விசில் போடு





ரெய்னாவின் தாண்டவமும், சிமித்தின் சிறப்பான தொடக்கமும், பிளாஸிஸின் கடைசிக்கட்ட விளாசல்களும் நெக்ராவின் துல்லியமான பந்துவீச்சும் மக்கலம், பிளாஸிஸ், சிமித் ஆகியோரது அபாரக் களத்தடுப்புக்களும் கைகொடுக்க பெங்களூரை 27 ஓட்டங்களால் இலகுவாக வீழ்த்தியது சென்னை.

சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையிலான ஆட்டம் என்பதனை விட டோனிக்கும் ஹோக்லிக்கும் இடையிலான ஆட்டம் மக்கலத்துக்கும் வில்லியர்ஸிற்கும் இடையிலான ஆட்டம் என்று சொல்லிக் கொள்வது பொருத்தமானதாக இருக்கும்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க களத்தில் மக்கலத்துடன் சிமித். எதிர்கொண்ட முதல் பந்திலேயே பவுண்டரியை விளாசி தொடக்கி வைத்தார். பவுண்டரியை விட வேறு எந்தவொரு ஓட்டத்தையும் அவரால்பெற முடியவில்லை. சென்னை 12–1. சிமித்துடன் இணைந்து தாண்டவமாடினார் ரெய்னா. சென்னையின் ஓட்ட எண்ணிக்கை எக்ஸ்பிரஸ் வேகத்தில் பயணித்தது. 7ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஐம்பதை எட்டிய சென்னை பதினொராவது பந்துப் பரிமாற்றத்தில் நூறை எட்டிவிட்டது என்றால் நம்ப முடிகிறதா? அந்தளவுக்கு வேகமும் விவேகமும் இருந்தது ரெய்னாவின் ஆட்டத்தில். சிமித்தும் சளைத்தவர் இல்லை. சிக்சர்களை பறக்க விடவே செய்தார். 39 ஓட்டங்களுடன் நிறைவுக்கு வந்தது சிமித்தின் சஹால் என்ன பாவம் செய்தாரோ தெரியவில்லை அடித்து நொருக்கி விட்டார் ரெய்னா. அடுத்தடுத்து தொடர்ச்சியாக மூன்று சிக்சர்கள் பறந்தது. ஒன்று கூரையின் மேல்தளத்தில். அதே பந்துப் பரிமாற்றத்தில் அரைச்சதமும் கடந்து அதே பந்துப்பரிமாற்றத்தில் பவிலியனுக்கும் சென்றார். டோனி நேற்றும்பெரிதாக இல்லை. டோனியைப் போலவே ஜடேயாவும். கடைசிக்கட்டத்தில் ஓரிரு வானவேடிக்கைகள் மூலம் சென்னையை பிளாஸிஸ் இழுத்துச்செல்ல முடிவில் சென்னை 181–8.

பிஸ்லா, ரொஸ்சொவ், ஹோக்லி, கார்த்திக், வில்லியர்ஸ் இந்தப் பட்டாளத்துக்கு இது ஒரு இலக்கேயில்லை. அது வில்லியர்ஸ் இருக்கும்போது பயப்படவே தேவையில்லை. ஆனால் சென்னையின் களத்தடுப்பின் முன்னால் சிக்சர்கள் அடித்தால்தான் உண்டு. மற்றும் படி வீரர்களைத்தாண்டி பந்து தாண்டுவதென்பது மிகக்கடினம். களத்தில் பிஸ்லாவுடன் ரொஸ்சாவ். முதல் பந்திலேயே பவுண்டரியை விளாசினார் பிஸ்லா. அதிரடியைத் தொடங்கிய பிஸ்லாவை பிய்த்துப் போட்டார் நெக்ரா. நெக்ராவின் மற்றொரு பந்து ரொஸ்சொவ்வின் துடுப்பு மட்டைக்குள் புகுந்து சென்று விக்கெட்டை தூக்கி வீச பெங்களூர் மண்ணில் சென்னையின் ஆதிக்கம் மேலோங்கியது. வில்லன் வில்லியர்ஸின் அதிரடியை நினைத்து அச்சப்பட்டுப்போய்க் கிடந்த சென்னையை அசாத்திய ஸ்ட்ம்பிங் மூலம் அமைதிப்படுத்தினார் டோனி. வில்லியர்ஸ் அடித்தது வெறும் பதின்நான்கு ஓட்டங்கள் ஆனால் அதற்குள்ளும்இரண்டு சிக்சர்கள். வில்லியர்ஸ் ஆட்டமிழந்ததும் சென்னைக்கான வாய்ப்பு பிரகாசமானது. ஆறுதல் தருவார் என்று எண்ணிய கானும் பதின்மத்தில் பவிலியனுக்குச் செல்ல பெங்களூர் 97–5. ஒரு முனையில் தலைமை இன்னிஸிற்காக போராடிக் கொண்டிருந்த ஹோக்லி அரைச் சதம் கடந்து போர்முக்குத் திரும்பி னார். ஆனாலும் பெங்களூரின் இறுதிக் கட்டப் போராட்டங்கள் அனைத்தும் கைவிட்டுப்போக முடிவில் சென்னை 27 ஓட்டங்களால் வெற்றியீட்டியது (ரி)

# தொடரை வழித்துத் துடைத்தது பங்களாதேஷ்

# பாகிஸ்தானுக்கு மரணஅடி





பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 ஒரு நாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் 8 இலக்குகளால் பாகிஸ்தானை வீழ்த்தி தொடரை 3:0 என்ற அடிப் படையில் வழித்துத் துடைத்தது பங்களாதேஷ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து தனது தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டியது. வழக்கம்போல தலைமைத்துவ இன்னிங்ஸிற்காக அலி போராட ஆரம்பித்தார். சக ஆரம்ப வீரரான அஸ்லாமும் பாரத்தைப் பொறுப்பேற்க பாகிஸ்தான் பழைய நிலைக்கு படிப்படியாகத் திரும்பியது. இருவரும் மிகவும் சிறப்பாக சந்தர்ப்பத்துக்கேற்ப செயற்பட்டுக்கொண்டனர். இணைப்பாட்டமாக 91 ஓட்டங்கள் பகிரப்பட்ட வேளையில் இணைப்பைப் பிரித்தார் அஸ்லாம். கடந்த ஆட்டத்தைப் போலவே ஹபீஸும் கைவிட்டுச் சென்றார். சொகைல் சற்றுத் தாக்குப் பிடிக்க மறுமுனையில் அலி தனது முதல் சர்வதேச ஒருநாள் சதத்தை நிறைவு செய்தார். 38ஆவது பந்துப் பரிமாற்றத்தில் மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் பாகிஸ்தான் 200 ஓட்டங்களை எட்டியது. அலி விடை பெற்றதும் அணியே விடைபெற்றதைப்போல் பின்வரிசை வீரர்கள் பதின்மத்துக்குள் சுருண்டனர். முடிவில் பாகிஸ்தானால் வெறும் 250 ஓட்டங்களையே எட்டமுடிந்தது.

பங்களாதேஷ் நிற்கிற திறன் நிலைமைக்கு பாகிஸ்தானுக்கு மரணஅடி விழுந்தாலும் விழும் என்ற நிலைப்பாட்டில் களத்தில் இக்பாலுடன் சர்கர். இருவருமே பாகிஸ்தான் பந்துவீச்சை பிரித்து மேய்ந்தனர். பவுண்டரிகள்அடிக்கொரு தடவை எல்லைக்கோடுகளை நோக்கி எகிறிப் பாய்ந்தன. வானவேடிக்கைகளும் இல்லாமல் இல்லை. பாகிஸ்தானுக்கு வெற்றியென்பது கனவிலும் இல்லாத ஒன்றாக மாறியது. ஆரம்பம் முதலே பங்களாதேஷின் பக்கமே முழு வாய்ப்புக்களும். ஆளுக்கொரு அரைச்சதம் கடந்ததும் ஆட்டத்தின் வேகம் அதிகரித்தது. இணைப்பாட்டமாக 145 ஓட்டங்கள்பகிரப்பட்ட வேளையிலேயே பங்களாதேஷின் முதல் இலக்கு வீழ்த்தப்பட்டது. முகமதுல்லா வந்த வேகத்தில் வெளியேறினாலும் வழக்கம்போல நம்பிக்கை கொடுத்தார் ரஹீம். மறுமுனையில் சதம் கடந்தார் சர்கர். முடிவில் பங்களாதேஷ் 8இலக்குகளால் பாகிஸ்தானை வீழ்த்தி 3:0 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது. (ரி)

**விற்பனைக்கு**

1x2-manual Gas Oven, 10 kg - Cake mixer (New).

**T.P: 077 624 5114**

**தவறிவிட்டது**

நெல்லியடி, B.O.C. Bank இற்கும் கொமர்ஷல் Bank இற்கும் இடையில் செல்வராசா சாரங்கி 925083402 V இலக்கம் உடைய அடையாள அட்டை தவறிவிட்டது. **தொடர்பு: 077 9394667**

**Special General Meeting**

The Alumni faculty of medicine Jaffna is having Special General Meeting on 5th May 2015 Tuesday at 11.30 am at board room of Faculty of Medicine, University of Jaffna to discuss an urgent matter.

All the members are expected to attend the Special General Meeting.

**Honorable secretary.**

**The Alumni, Faculty of Medicine, Jaffna.**

**மைதிலி நகைமாடம்**

**அக்ஷய திருதியையை முன்னிட்டு**
**மைதிலி நகைமாடத்தினர் நடத்திய விஷேட**
**குலுக்கல் பரிசில் வெற்றியடைந்தோர் விவரம்**

★ முதலாம் பரிசு:- யோ.ராணி 25/1, மத்தியகிழக்கு வீதி, யாழ்ப்பாணம்.
★ 2ஆம் பரிசு:- பா.நவநீதா ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.
★ 3ஆம் பரிசு:- த.நயாநிதி நாவலடி மேற்கு, உடுப்பிட்டி.

குறிப்பிட்ட வெற்றியாளர்கள் அடையாள அட்டையுடன் தொடர்புகொள்ளவும்

**89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**T.P: 021 222 7902**

# லொறி உரிமையாளர்கள் மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராகப் போர்க் கொடி

## யாழ்.நகரில் நேற்றுப் பேரணி

வலி.வடக்கு, ஏப் 23
மகேஸ்வரி நிதியத்தில் வைப்பிலிட்ட பணத்தை மீள வழங்கக் கோரி யாழ். மாவட்டப் பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தினால் நேற்றுப் புதன்கிழமை யாழ்.பொஸ்கோ பாடசாலை முன்றலில் இருந்து அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.
பல்வேறு சுலோக அட்டைகளையும் தாங்கிய வண்ணம் ஊர்வலமாகச் சென்ற சங்க உறுப்பினர்கள் வட மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் அவர் இல்லாததை அடுத்து முதலமைச்சரின் செயலாளரிடம் மனுவைக் கையளித்தனர்.
இதனைத் தொடர்ந்து ஊர்வலமாக யாழ்.மாவட்ட செயலகத்துக்குச் சென்ற அவர்கள், அரச அதிபருக்கான மனுவைக் கையளித்துவிட்டு வடக்கு மாகாண ஆளுனரின் அலுவலகக்கும் சென்று ஆளுநருக்கான மனுவை வழங்கினர்.
இந்த மனுவின் பிரதிகள் ஜனாதிபதி, இலஞ்சஊழல் விசாரணை ஆணைக் குழு, வட மாகாண சபைத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.
நாங்கள் றோட்டில் அவர்கள் ஏ.சியில், அரச அதிபரே மகேஸ்வரி நிதியத்துக்குப் பதிவு உள்ளதா?, மகேஸ்வரி நிதியமே எங்கள் வாகனம் இரும்புக்கு உங்கள் வாகனம் றோட்டில், நம்பினோம் ஏமாந்தோம் எமக்கு வேண்டும் தீர்வு, தரவேண்டும் தர வேண்டும் 200 லட்சம் ரூபாவை தரவேண்டும், முன்னாள் அமைச்சரே ஒரிரு நாள்களில் தீர்வு என்றீர் எங்கே தீர்வு?,வடக்கு முதலமைச்சரே நீதியைப் பெற்றுத்தரவும் ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.





(த-86)

# பேரணியைப் புலனாய்வாளர் படம் எடுத்ததால் முரண்பாடு

வலி.வடக்கு, ஏப். 23
யாழ். மாவட்டப் பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தினால் நேற்றுப் புதன் கிழமை மேற்கொள்ளப்பட்ட அமைதிப் பேரணியின்போது இராணுவப் புலனாய்வாளர்களுக்கும் பேரணியில் கலந்துகொண்டோருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.
மகேஸ்வரி நிதியத்தில் வைப்பிட்ட பணத்தை மீள வழங்கக் கோரி பகல் யாழ். பொஸ்கோ பாடசாலை முன்றலில் இருந்து இடம்பெற்ற இந்தப் பேரணியை இராணுவப் புலனாய்வாளர்கள் படம் எடுக்க முற்பட்டபோதே இந்த முரண்பாடு தோன்றியது.
இராணுவப் புலனாய்வாளர்கள் ஊடகவியலாளர்கள் போன்று பேரணியைப் படம் எடுக்க முற்பட்டபோது பேரணியில் கலந்துகொண்டவர்கள் அது தொடர்பில் விசாரிக்க முற்பட்டவேளையிலேயே இந்த முரண்பாடு ஏற்பட்டது.
புதிய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததை அடுத்துக் கடந்த சில மாதங்களாக இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதை இராணுவத்தினர் கைவிட்டிருந்தனர்.
எனினும் நேற்று இத்தகைய முயற்சியை இராணுவப் புலனாய்வாளர்கள் மீண்டும் மேற்கொள்ள முயன்றுபோது பேரணியில் கலந்துகொண்டோருக்கும் அவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர்கள் அந்த இடத்தில் இருந்து உடனடியாக விலகிச் சென்றனர்.
(த-86)

# சட்ட விதிமுறை மீறாது வேள்வி நடத்த அனுமதி

## பிரான்பற்று வைரவர் கோயிலில்

யாழ்ப்பாணம், ஏப். 23
வேள்வி நடத்துவதாக இருந்தால் எந்தக் காரணம் கொண்டும் சட்ட விதிமுறைகளை மீறக்கூடாது. மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மல்லாகம் நீதிமன்று பொலிஸாருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் நேற்று உத்தரவிட்டுள்ளது.
பிரான்பற்று வைரவர் கோயில் வேள்வி எதிர்வரும் மே 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அந்த வேள்வி சட்டத்துக்குப் புறம்பாக, சுகாதாரச் சீர்கேடாக, வியாபார நோக்கில் நடைபெறவுள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்து கலாசாரத் திணைக்களம், சைவ மகாசபை என்பன அந்த முறைப்பாட்டைச் செய்துள்ளன. அது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து கேட்டிருந்தனர்.
அதனைப் பரிசீலனை செய்த மல்லாகம் நீதிமன்று, சட்ட விதிமுறைகளை எந்தக் காரணம் கொண்டும் மீறாது, சுகாதாரச் சீர்கேடு இல்லாது உரிய முறையில் வேள்வி நடத்த நேற்று அனுமதி வழங்கியுள்ளது.
அந்த நடைமுறைகள் மீறப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்று பொலிஸார் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.
முறைப்பாடு செய்தவர்கள் சார்பில் சட்டத்தரணிகளான வி.திருக்குமரன், கு.புரந்திரன் ஆகியோரு[illegible] கோயில் நிர்வாகம் சார்பில் சட்டத்தரணிகளான ஏ.அற்புதராஜா, சாருஜா சிவனேசன், எஸ்.கீர்த்தனா ஆகியோரும் முன்னிலையாகியிருந்தனர்.
(த-4)

# உருளைக் கிழங்குக்கான இறக்குமதி வரி உயரும்

கொழும்பு, ஏப். 23
இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குக்கு இறக்குமதி வரியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக நிதி அமைச்சருடன் நடைபெற்ற பேச்சின் பின்பு அமைச்சர் தன்னிடம் உறுதியளித்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் நேற்றுத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,
நுவரெலியா மற்றும் ஊவா பகுதிகளில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கத்திலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அந்தப் பகுதிகளில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இது தொடர்பாக எனது கவனத்துக்கு கொண்டுவந்தனர்.
தற்பொழுது நுவரெலியாவில் கிழங்கு அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இதன் விலை மிகவும் குறைவாகவே உள்ளது. கிலோ ஒன்றுக்கு 60 ரூபா மாத்திரமே கிடைக்கின்றது. இந்த விலை விவசாயிகளுக்கு எந்தளவிலும் போதுமானது அல்ல.
எனவே இந்த விடயம் தொடர்பாக நான் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடமும், உணவு பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவிடமும் நடத்திய கலந்துரையாடலை தொடர்ந்தே இந்தத் தீர்மானத்தை நிதிஅமைச்சர் மேற்கொண்டுள்ளார். புதிய இறக்குமதி வரி இன்று அல்லது நாளை அறிவிக்கப்படலாம்–என்றார்.
(த)

# கூட்டுறவாளர் மே தினம் வீரசிங்கம் மண்டபத்தில்

## சங்கிலியன்தோப்பில் இருந்து பேரணி

வலி.வடக்கு, ஏப். 23
வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைப்புக்களின் இணைந்த மேதினக் கொண்டாட்டம் இம்முறை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை மாங்குளம் நீர்ப்பாசனத் திணைக்கள மண்டபத்தில் வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைப்புக்களினால் நடத்தப்பட்டது.
இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண விவசாய சுற்றுச் சூழல் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வட மாகாணக் கூட்டுறவு ஆனையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ் மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் கே.கணேஸ் ஆகியோருடன் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினர்.
இதன் முடிவில், மேதினத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் இருந்து 10 ஊர்திகளையும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து தலா 3 ஊர்திகளையும், மன்னார் மாவட்டத்தில் இருந்து 2 ஊர்திகளையும், வவுனியா மாவட்டத்தில் இருந்து 4 ஊர்திகளையும் பேரணியில் கலந்து கொள்ளச் செய்வதாகவும், மேதினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் இருந்து ஊர்வலம் ஊர்திகளுடன் ஆரம்பமாகி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பொதுக் கூட்டத்தை நடத்துவது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.



(த-86 -17)

# மைத்திரி - மஹிந்த சந்திப்பு விரைவில்

கொழும்பு, ஏப். 23
ஐந்து மாதங்களின் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபாலவும் – முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நேருக்கு நேர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். பேச்சு நடத்துவதற்கு இருவரும் பச்சைக் கொடி காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விரைவில் இந்தப் பேச்சு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தற்போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இரண்டு அணிகள் உருவாகியுள்ள நிலையில், கட்சியின் ஒற்றுமையை பேணும் நோக்கில் இந்தச் சந்திப்புக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தச் சந்திப்பு எங்கு, எப்போது நடைபெறும் என்று இன்னமும் தீர்மானிக்கப்படாவிடினும், சந்திப்பு நடைபெறப்போவது உறுதியாகியுள்ளது.
மஹிந்த ராஜபக் ஷவையும், மைத்திரிபால சிறிசேனவையும் நேரடியாகச் சந்தித்துப் பேச வைக்கும் முயற்சியில், அரசில் அமைச்சர் பதவிகளை ஏற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர். இருதலைவர்களுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பில், தேர்தல் குறித்து முக்கியமாக ஆராயப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதேவேளை, கடந்த டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கானவேட்புமனுத்தாக்கலின்போதே, ஜனாதிபதி மைத்திரியும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் நேருக்கு நேர் இறுதியாகச் சந்தித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.
(த-5)

# மே தினத்தில் பங்கேற்கும் சிறந்த ஊர்திகளுக்குப் பரிசு

யாழ்ப்பாணம்,ஏப்.23
யாழ்.நகரில் நடைபெறும் மே தின எழுச்சிப் பேரணியின் போது பயன்படுத்தப்படும் சிறந்த ஊர்திகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
வடக்கு மாகாணக் கூட்டுறவாளர்களால் ஒன்றிணைந்து நடத்தப்படும் இந்த மே தின எழுச்சி ஊர்வலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊர்திகள் பயன்படுத்தப்படவுள்ளன.
தொழிலாளர்களின் ஒவ்வொரு துறையையும் சித்திரிக்கும் வகையில் இந்த ஊர்திப் பவனி இடம் பெறும்.
கூட்டுறவுத் துறையினரால் மே தின எழுச்சிப் பேரணியில் பங்கேற்கும் சிறந்த ஊர்திகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.
வடக்கில் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் கூட்டுறவாளர்களால் மே தினத்துக்கு பயன்படுத்தப்படும் ஊர்திகளை அமைக்கும் பணிகள் தற்போது சூடுபிடித்துள்ளன.
இந்த ஊர்திகளைச் சிறப்பான முறையில் அமைத்து பேரணிக்குப் பயன்படுத்துமாறு கூட்டுறவுத்துறை ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.
(த-17)










செயல் திறன் அரங்க இயக்கமும் யாழ்ப்பாண மாநகர சபையும் இணைந்து நடத்திய ஓராள் அரங்கத் திருவிழா யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஈழத்தின் நாடக வரலாற்றில் முதல் முறையாக நடைபெற்ற தனியன்களின் ஆற்றுகைகள் பல ஒன்றாக ஓர் இடத்தில் ஒரு திருவிழாவாக நடைபெற்று வெற்றிகரமாக நிறை வடைந்தது. இதில் பங்குபற்றிய 24 தனியன்கள் ஒவ்வொன்றும் 10 நிமிடங்கள் கொண்ட அற்புதமான நாடகங்களைத் வழங்கினர். செயல் திறன் அரங்க இயக்கத்தின் நல்லூர் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற ஓராள் அரங்கத் திருவிழாவை வடமாகாண முதலமைச்சர் முதன்மை விருந்தினராகக் கலந்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வின் தொடக்க நாளான கடந்த 11 ஆம் திகதியன்று ஈழத்தின் நவீன நாடகத்தின் தாய் என்று போற்றப்படுகின்ற குழந்தை ம. சண்முகலிங்கம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையின் முகாமையாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

செயல் திறன் அரங்க இயக்கத்தின் தலைவர் தே.தேவானந் தலைமையேற்று நடத்தியிருந்த இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் நிகழ்வின் தொடக்கவுரையை வழங்கிருந்ததுடன் முதல் நாள் நிகழ்வில் 12 குறு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இதில் சிறுவர்கள் தமது நாடகங்களை மேடையேற்றினார்கள்.போட்டியில் யாழ்.மல்லாகம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி காந்தரூபன் வைசாவின் 'தொழில்நுட்பத்தின் கையில் வாழ்க்கை' என்ற நாடகம் முதலாம் இடத்தினைப் பெற்று ரூபா 25 ஆயிரம்" பணப்பரிசினைத் தட்டிச்சென்றது.இரண்டாம் நாள் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி மாலை 7 மணிக்கு ஆரம்பமானது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மூத்த விரிவுரையாளர் மற்றும் நாடகக் கலைஞர் சிவஞானம் ஜெய்சங்கர் பங்குபற்றினர். இந்தப் போட்டியில் சி. சுமணனின் 'ராகம்' என்ற நாடகம் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. (வ-10-20)

## மாற்றுத்திறனாளிகளுக்கு நடைபெற்ற விளையாட்டு



வவுனியா வறொட் நிறுவனத்தினால் மாற்றுத்திறனாளிகளுக்காக நடத்தப்பட்ட வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி கடந்த 17 ஆம் 18 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதன்போது விளையாட்டில் ஈடுபடும் மாற்றுத்திறனாளிகளை இங்கு காணலாம். (வ-402)

## மகளிருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஏப்.23

யாழ்.மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வி அபி விருத்தித் திட்டத்தின் கீழ் மகளிருக்கான மாவட்டமட்ட கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்ட மகளிர் குழுத்தலைவி திருமதி. இ.இராஜமனி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள ஈரோடு கதிர் அவர்கள் நம் கனவுகள் சுமக்கும் சிறகுகள் என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

பெற்றோர்கள் தமது குழந்தைகளை வளர்ப்பில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இன்றைய சிறார்களை எதிர்காலத்தில் பெற்றோர்கள் எவ்வாறு உருவாக்குவது குறித்த கருத்துரையை அவர் வழங்குவார். (வ-17)





வவுனியா பொலிஸ் நிலையம், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் சிவில் பாதுகாப்புத்திணைக்களகத்துடன் இணைந்து தமிழ் சிங்கள புதுவருட விளையாட்டு நிகழ்வுகள் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தின் மைதானத்தில் அண்மையில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் வவுனியா பிரதேசசெயலாளர் க. உதயராசா, தெற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கிராமசேவையாளர்கள். சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பொலிஸார், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டதுடன் பல விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.(வ)

## தென்மராட்சிப் பாடசாலைகளின் நூலகங்களுக்கு தளபாடங்கள்



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இயங்கும் நூலகங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் வலயத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலைகளுக்கு தளபாடங்கள் நேற்று கையளிக்கப்பட்டன.

வேள்ட்விஷன் நிறுவன அனுசரணையுடன் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நூலக தளபாடங்கள் கையளிக்கப்பட்டன. மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம், இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், மிருசுவில் அ.த.க.பாடசாலை, மட்டுவில்தெற்குசரஸ்வதி வித்தியாலயம், கைதடி குருசாமி வித்தியாலயம் ஆகியவற்றுக்கு வேள்ட் விஷன் நிறுவன சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் அ.சு.றொசைறோ தளபாடங்களை அதிபர்களிடம் கையளித்தார். (வ-9)

## மட்டுவில் தெற்கு அ.மி.த.கவில் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல்

கொடிகாமம், ஏப்.23

சுறுசுறுப்பான முறையிலும் மிக அமைதியான வகையிலும் நடந்தேறிய மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் 2015 ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் 20 மாணவர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்து வேட்பாளர்களாகத் தெரிவாகினர்.

காப்பாளர்பாடசாலையின் அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற மாணவர் நாடாளுமன்றத் தேர்தலில், தென்மராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்)எஸ்.சுந்தரசிவம், மற்றும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையைச்சேர்ந்த வே.க.சந்திரகுமார் ஆகியோர் தேர்தல் கண்காணிப்பாளர்களாகக் கடமையாற்றினார்கள். நடைபெற்ற மாணவர் நாடாளுமன்றத் தேர்தலில் மாணவர்களின் அதிக வாக்குகளைப் பெற்று பிரதமராக மாணவன் ம.அங்கயன் தெரிவானார். சபாநாயகராக வ.சாரங்கன், மற்றும் அமைச்சர்களாக ஜே.கேதாரன், அ.அபிலா, ந. வாமினி, வே.மதுஷன், இ.டானியல்ராஜ் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (வ-105)

# சிவகுருநாதன் கிண்ணத்துக்கு யாழ். இந்து-ஆனந்தா மோதல்

நாளை இந்துவின் மைதானத்தில்




யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரிகளுக் கிடையே நான்காவது வருடமாக நடைபெற்றுவரும் சிவகுருநாதன் கிண்ணத்துக்கான மாபெரும் கிரிக் கெட் போட்டி நாளை வெள்ளிக் கிழமை, நாளை மறு தினம் சனிக் கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
யாழ். இந்து 125 வருட நிறைவில் அடி எடுத்து வைத்திருப்பதை முன் னிட்டு இந்தத் துடுப்பாட்ட போட்டி இம்முறை மேலும் கோலாகலமாக நடைபெறுகிறது.
கடந்த வருடம் கொழும்பு ஆனந்தா கல்லூரி வெற்றி பெற்ற நிலையில் இம்முறை நடைபெறும் போட்டியா னது மிகவும் எதிர்பார்புக்குரியதாக மாறியுள்ளது. ஏற்கனவே 2–1 என்று ஆனந்தாக் கல்லூரி முன்னி லையில் உள்ளதால் இம்முறை அதனை யாழ். இந்துக் கல்லூரி சமப்படுத்தப்படுமா? அல்லது தொடர்ந்தும் ஆனந்தாக் கல்லூ ரியே முன்னிலை பெறுமா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.(த–86)

# ஜின்னா, பீற்றர்ஸ் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 23
மன்னார் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையி லான ஆண், பெண் இருபாலாருக்கு மான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரி வில் தாராபுரம் ஜின்னா விளை யாட்டுக்கழக அணியும், பெண்கள் பிரிவில் சென்.பீற்றர்ஸ் விளையாட் டுக்கழக அணியும் வெற்றிபெற்று சம்பியன் ஆகின.
கடந்த வாரம் தழ்வுபாடு மாதோட்ட விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டங்களில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் தாராபுரம் ஜின்னா விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் தாரா புரம் ஜின்னா விளையாட்டுக் கழ கம் 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
பெண் களுக்கான இறுதியாட்டத் தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பிலிப்பு விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
(த–ரி–23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 23
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் மாபெரும் உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் இன்று வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
(த–ரி–23)

* * *

உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் மின்னொளியில் நடத்திவரும் தாச்சித் தொடரின் இன்றைய ஆட்டங்களில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புவனேஸ்வரி வி.கழகமும் இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை விநாயகர் வி.கழகத்தை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
(த–ரி–288)

# யங்கம்பன்ஸ், ரெட்றேஞ்சர்ஸ் அபாரம்



யாழ்ப்பாணம், ஏப். 23
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளை யாட்டுக்கழகம் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் மாபெரும் உதைப்பந் தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி, நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றி பெற்றன. நவஜீவன்ஸ் விளை யாட்டுக்கழக அணிக்கும் கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளை யாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் மானிப்பாய் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத் தில் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது. (த–ரி–23)

# சியாலினியின் மின்னல் வேக ஆட்டத்தில் ஹற்றிக் கிண்ணம் கைப்பற்றியது மணற்காடு



மாங்குளம், ஏப். 23
யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான பெண்களிற்கான எல்லே தொடரில் சியாலினியின் துடிப்பான ஓட்டங்களால் இவ்வரு டமும் மணற்காடு றோ.க.த. பாட சாலை பெண்கள் அணி சம்பிய னாகியது. இதனால் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் இவ்வணி யாழ். மாவட்டச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து ஹற்றிக் சாதனை புரிந் துள்ளது.
யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான பெண்களிற்கான எல்லே தொடரின் இறுதியாட்டத் தில் மணற்காடு றோ.க.த. பாட சாலையை எதிர்த்து உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி வரணி மகா வித்தியால மைதா னத்தில் மோதியது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மணற்காடு றோ.க.த. பாடசாலை அணியினர் முதலில் துடுப்பெடுத் தாட தீர்மானித்தனர். மணற்காடு றோ.க.த. பாடசாலை அணிக்கு அந்த அணியின் வீராங்கனை சியா லினியின் சிறப் பான துடுப்பாட்டம் கை கொடுக்க அவரின்ஓட்டவேகத் தைக் கட்டுப்படுத்த முடியாமல் சைவத் தமிழ் வித்தியாலய அணியினர் திண் டாடினர். இதனால் நிர்ணயிக்கப்பட்ட 35 பந்துகளில் மணற்காடு றோ.க.த. பாடசாலை அணியினர் 10 ஓட்டங்களை நிறைவு செய்தனர். இதில் அவ்வணி சார்பாக சியாலினி 5, டியூசா, வேளாயினி தலா 2ஓட்டங்களை யும், சுதர்சனா ஒரு ஓட்டத்தையும் பெற்றுக் கொடுத்தார்.
11ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி யாலய அணியினர் மணற்காடு றோ.க.த. பாடசாலை அணியின ரின் களத்தடுப்பும் கச்சிதமாக அமைந்ததால் ஓட்டங்களை குவிப் பதில் சிரமப்பட்டனர். இதனால் நிர்ணயிக்கப்பட்ட 35 பந்துகளில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி யாலய அணியினர் 5ஓட்டங்களை மாத்திரம் எடுத்தனர். அதிகபட்ச மாக மதுசா 2, மேரி, வேணுகா, நிதுனா ஆகியோர் தலா ஒவ்வொரு ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத் தனர். இந்தத்தொடரில் மூன்றாம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல் லூரி அணி பெற்றுக் கொண்டது.
(ரி–422)

# எவ்.ஏ லீக் ஆட்டத்தில் சென். ஜோசப் வெற்றி



யாழ்ப்பாணம் ஏப். 23
இலங்கை உதைபந்தாட்டச் சம் மேளனத்தினால் ஏவ்.ஏ. வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடரின் மன் னார் மாவட்ட ஆட்டம் ஒன்றில் சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை விளையாட்டுத் திடலில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் அலை ஓசை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பனங்கட்டி கொட்டு சென். யோசப் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் பனங் கட்டிக்கொட்டு சென்.யோசப் விளை யாட்டுக்கழக அணி 3:1என்ற கோல் கணக்கில்வெற்றிபெற்றது.(த–ரி–23)

# அன்ரனிஸை வீழ்த்தி முருங்கன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 23
நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதி யாட்டத்தில் முருங்கன் பொதுசன விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
கடந்த வாரம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் முருங்கன் பொது சன விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொன்தீவு கண்டல் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் முருங்கன் பொதுசன விளையாட் டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
(த–ரி–23)

## தோல்விக்கு மனைவியே காரணமாம்

ரென்னிஸ் விளையாட்டில் போதிய கவனம் செலுத்த முடியாததால் மனைவியை விவாகரத்துச் செய் யப் போவதாக பிரபல ரென் னிஸ் வீரர் ஸ்டானிஸ்லஸ் வாவ்ரிங்கா அறிவித்துள்ளார்.
ரென்னிஸ் தர வரிசையில் உல கின் 9ஆம் நிலை வீரரும், முன் னாள் ஆஸ்திரேலிய ஓபன் ரென் னிஸ் சம்பியனுமான சுவிட்சர் லாந்தின் வாவ்ரிங்கா, சுவிட்சர் லாந்தில் தொலைக்காட்சி நிகழ்ச் சித் தொகுப் பாளரும், முன்னாள் பிரபல விளம் பர நடிகையுமான இல்ஹாமை 2005 ஆம் ஆண்டி லிருந்து காதலித்து வந்தார். 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இல்ஹாம் கர்ப்ப மான நிலையில், திருமணம் செய்து கொண்டார். 2010 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இவர்களுக்கு அலெக்சியா என்ற மகள் பிறந் தார். ரென்னிஸ் விளையாட்டில் தன்னை அர்ப்பணித்துக் கொள்வ தற்காக அடுத்த ஆண்டே மனை வியைப் பிரிந்தார் வாவ்ரிங்கா.
தனித்து வாழ்ந்த வாவ்ரிங்கா ரென் னிஸ் விளையாட்டில் கிராண்ட்ஸ் லாம் பட்டத்தை வென்ற நிலை யில், மனைவியுடன் மீண்டும் சமரசம் செய்து கொண்டு சேர்ந்து வாழ்ந்தார். மனைவியுடன் மீண் டும் இணைந்த பின்னர் இவருக் குச் சில தோல்விகள் அடுத்தடுத்து ஏற்பட தனது ரென்னிஸ் வாழ்க் கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு களுக்கு குடும்ப வாழ்க்கையே காரணம் என்று கருதிய வாவ் ரிங்கா, மனைவியை விவாக ரத் துச் செய்யப்போவதாக அறிவித் துள் ளார். (த–ரி)




# கொல்கத்தாவின் கொட்டத்தை அடக்கியது ஹைதரபாத்

வோர்ணரின் அதிரடியும் தவானின் நிதானமும் கட்டுக்கோப்பான களத்தடுப்பும் கைகொடுக்க நடப்புச் சம்பியனை 16 ஓட்டங்களால் விழ்த்தியது ஹைதரபாத்.



கொல்கத்தா எதிர் ஹைதரபாத். நடப்புச் சம்பியன் அந்தஸ்து மட்டும் நின்றுவிடாது நடப்பு ஐ.பி.எல்.தொடரிலும் மிகவும் பேத்தான அணியாக இனங்காணப்பட்ட ஒரு அணி கொல்கத்தா.176 ஓட்டங்களை அடித்து விட்டு அதற்குள்ளேயே எதிரணியை திணறடித்த அணி ஹைதரபாத். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா முதலில் ஹைதரபாத்தை துடுப்பெடுத்தாடும்படி தெரிவித்து வம்பை விலைக்கு வாங்கியது. களத்தில் வோர்ணருடன் தவான். வோர்ணர் அடித்தாட தவான் நிதானிக்க ஆரம்பித்தார். வோர்ணரின் அதிரடிக்கு தவானால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஆனபோதிலும் ஓரிரு வானவேடிக்கைகளை நிகழ்த்தத் தான் செய்தார். வோர்ணர் வரிசையாக பிளந்து கட்டினார். சில பந்துகள் தரையைத் தொடுவதற்கு சில வினாடிகள் மேலதிகமாக எடுத்துக் கொண்டன. ஓட்டங்கள் குவிந்துகொண்டிருந்தன. ஆனால் இலக்குகள் மட்டும் விழுந்த பாடில்லை. திகைத்து நின்றது நடப்புச் சம்பியன் பட்டாளம். அரைச்சதம் கடந்தார் வோர்ணர். வோர்ணின் அதிரடி இரட்டிப்பானது. நடப்பு ஐ.பி.எல்.தொடரில் இரண்டாவது சதம் வோர்ணர் பெயரில் பதியப்படவுள்ளது என்றே பலரும் எதிர்பார்த்தனர். எதிர்பார்ப்புக்களைப் பொய்யாக்கி 91 ஓட்டங்களுடன் எதிர்பாராமல் விடைபெற்றார். தவானும் அரைச்சதம் கடக்க முடிவில் ஹைதரபாத் 176–4.

கொல்கத்தாவின் இன்னிங்ஸில் மழைகுறுக்கிட 12 பந்துப்பரிமாற்றங்களில் 118 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட களத்தில் உத்தப்பாவுடன் கம்பீர். உத்தப்பா சற்றுஅதிரடி காட்டினார். கம்பிரின் ஆட்டம் அறவே எடுபடாமல் போக நான்குடன் நடையைக் கட்டினார். உத்தப்பா அடித்தாட முற்பட்ட வேளையில்அவருக்கான பவிலியன் அழைப்பு தயாரானது. ரசல் வந்த வேகத்தில் இரண்டு சிக்சர்களை அடுத்தடுத்து விண்ணில் பறக்க விட 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் கொல்கத்தா 74–2. இறுதி 24 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலைமை. ரசல் ஆட்டமிழக்க களத்தில் யூசொப் பதான். பதானின் சிறந்த இன்னிங்ஸ் நேற்றைய இன்னிங்ஸாக இருந்து விட்டால்கதை அவ்வளவுதான். ஆனால் கொல்கத்தாவின் போராட்டங்கள் எதுவும் எடுபடுவதாகத் தெரியவில்லை. முடி வில் ஹைதரபாத் 16 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. (ரி)

# 2022 உலகக் கிண்ணத்தில் பிரமிக்க வைக்கும் கட்டார்



2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண உதைபந்துத் தொடர் அரபு நாடான கட்டாரில் நடைபெற உள்ளது. இதுவரை இல்லாத அளவில் இந்தத் தொடரைப் பிரமாண்டமாக நடத்த கட்டார் அரசு திட்டமிட்ட நிலையில், இந்தத் தொடர் இரண்டு உதைபந்தாட்ட மைதானங்களையும் 6 ஆயிரம் சொகுசு அறைகளையும் கொண்ட சொகுசுக் கப்பலில் நடத்த அந்த அரசு கட்டுமானங்களை ஆரம்பித்துள்ளது.

கப்பலில் உதைபந்தாட்டத்தை நடத்தப் பலரும் ஆலோசனைகளை வழங்கிய நிலையில் முதலில் அதனை மறுத்த கட்டார் பின்னர் அதற்கு இணங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து கட்டார் வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு– 'கடந்த சில ஆண்டுகளாக நாங்கள் சர்வதேச கப்பல் கட்டுமான நிறுவனங்களுடன் நல்ல வலுவான வர்த்தக உறவுகளை மேம்படுத்தி வருகிறோம். 2022ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரின் பொழுது பிரமாண்ட சொகுசுக் கப்பல்களில் ரசிகர்களைத் தங்க வைப்பதன் மூலம் கட்டார் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும். குறிப்பாக, குறைந்தது 6 ஆயிரம் அறைகள் கொண்ட சொகுசுக் கப்பல்களையே கட்டார் ஒப்பந்தம் செய்யும். அதில், 12 ஆயிரம் ரசிகர் களை தங்க வைக்க முடியும். இதற்காக, 200 பில்லியன் யூரோக்களைக் கட்டார் முதலீடு செய்ய உள்ளது. கப்பலில் சொகுசு அறைகளை அமைத்து ரசிகர்களைத் தங்கவைப்பது என்பது உறுதி. ஆனால் மைதானங்களும் கப்பலிலேயே அமையப் பெறுவது தொடர்பாக இன்னமும் முடிவெடுக்கவில்லை விரைவில் அனைத்து விடயங்களும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–ரி)

# வருகிறார் ஷீர்கான்

பெங்களூர் அணிக்கு எதிராக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்துக்கு முன்னதாக வேகப்பந்து வீச்சாளர் ஷீர்கான் காயத்திலிருந்து மீண்டு அணிக்குத் திரும்பிவிடுவார். அவரின் வருகையால் டெல்லி அணி புதிய உத்வேகம் பெறும் என்று எதிர்பார்ப்பதாக டெல்லி அணியின் உதவிப் பயிற்சியாளர் பிரவீண் ஆம்ரே தெரிவித்துள்ளார்.



டெல்லி அணியின் பயிற்சி முகாமில் இணைந்ததில் இருந்தே காயம் மற்றும் உடற்தகுதி பிரச்சினையால் போராடிக் கொண்டிருக்கிறார் ஷீர்கான். இந்த நிலையில் ஆம்ரே தெரிவித்ததாவது 'பெங்களூருக்கு எதிரான ஆட்டத்துக்கு முன்பு ஷீர்கான் உடற்தகுதி பெற்றுவிடுவார் என நம்புகிறோம். எனினும் இறுதி முடிவு உடல் பரிசோதனை நிபுணரைச் சார்ந்ததாகும். இன்று (நேற்று) வலைப் பயிற்சியில் சகீர்கான் பந்துவீசினார். அதனால் அவர் உடற்தகுதி பெற்றுவிடுவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மும்பை அணிக்கு எதிராக விளையாடவுள்ள அடுத்த ஆட்டம் (இன்று) எங்களுக்கு மிக முக்கியமானதாகும். ஆடுகளம் குறித்து நாம் முறைப்பாடு செய்ய முடியாது. எப்படிப்பட்ட ஆடுகளமாக இருந்தாலும் வெற்றிக்காக முயற்சிக்க வேண்டும்' என்றார். பெங்களூருக்கு எதிரான ஆட்டத்துக்கு முன்பு ஷீர்கான் களமிறங்க வாய்ப்புக்கள் உள்ளது என்பதனால் இன்றைய ஆட்டத்தில் சிலவேளைகளில் ஷிர்கான் களமிறங்கலாம். (த–ரி)

# இணைப்பாட்டம் வேண்டும்



டெல்லியின் துடுப்பாட்ட வரிசை மிகப்பலவீனமாக உள்ளது, அதிலும் இணைப்பாட்டம் என்பது எட்டாக் கனியாக உள்ளது. இதுவே தோல்விக்குக் காரணம் என்று டெல்லியின் இளம் வீரர் மனோஜ் திவாரி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் டெல்லி அணியின் துடுப்பாட்டம் குறித்து மனோஜ் திவாரி தெரிவித்ததாவது– 'எங்கள் அணியின் வீரர்கள் பெரிய இணைப்பாட்டத்தை ஏற்படுத்த வேண்டும். களத்தில் நிலைத்து நிற்கும் வீரர் பெரியளவிலான ஓட்டங்களைக் குவிக்க வேண்டும். அப்பொழுதுதான் தொடர் தோல்விகளில் இருந்து தப்பிக்கலாம். 'ரி–20' ஆட்டங்களில் 170 ஓட்டங்களுக்கு மேல் அடித்தால் எதிர் அணிக்கு நிச்சயமாக நெருக்கடி கொடுக்க முடியும். இல்லாவிடில்ஆட்டம் கையைவிட்டுச் சென்றுவிடும்' என்றார். (த–ரி)

# மீண்டும் முதலிடத்தில் சாய்னா



உலக பட்மின்ரன் தரவரிசையில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

சர்வதேச பட்மின்ரன் அரங்கில் சிறந்து விளங்கும் நட்சத்திரங்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச பட்மின்ரன் கூட்டமைப்பு நேற்று வெளியிட்டது. இந்தத் தரவரிசையில் பெண்கள் பிரிவில் இந்தியாவின் சாய்னா நேவால் 2ஆவது இடத்தில் இருந்து மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

சமீபத்தில் முடிந்த இந்திய பட்மின்ரன் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறிய சாய்னா முதன்முறையாக முதலிடம் பிடித்து புதிய வரலாறு படைத்தார். அடுத்து நடந்த மலேசியத் தொடரில் அரையிறுதியில் சீனாவின் லி ஜுருயிடம் தோல்வி அடைந்த சாய்னா இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். பின்னர் சிங்கப்பூர் தொடரில் இருந்து சாய்னா விலகினார். இத்தொடரில் சீன வீராங்கனை லி ஜுருயும் பங்கேற்காததால் சய்னா மீண்டும் முதலிடத்தை கைப்பற்றினார். ஸ்பெயின் வீராங்கனை மரினா கரோலினா 2ஆவது இடத்துக்கு முன்னேறினார். சீன வீராங்கனை லி ஜுருய் முதலிடத்தில் இருந்து மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். (த–ரி)



# பார்சிலோனாவே மெஸ்ஸியின் அணி

பிரபல கால்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்ஸி ஓய்வு பெறும் வரை பார்சிலோனா அணிக்காக விளையாட வேண்டும் என விரும்புவதாக அந்த அணியின் தலைவர் ஜோசப் மாரியா மார்டோமியூ தெரிவித்துள்ளார்.

13 வயதிலிருந்தே ஆர்ஜென்டீனா வீரர் மெஸ்ஸி பார்சிலோனா கிளப்பில் விளையாடி வருகிறார். வருடாவருடம் சிறந்த பெறுமதியான வீரராக இருக்கும் மெஸ்ஸி கிண்ணங்களையும் விருதுகளையும் கோடிகளையும் அள்ளத் தவறுவதில்லை. உலகின் மிகச்சிறந்த வீரரான மெஸ்ஸி போன்ற ஒருவரின் தலைமையில் விளையாடினால் எங்கள் அணி வரலாற்றில் இடம் பிடித்துவிடும். எனவே, அவர் தாமாக ஓய்வு பெறும் வரை எங்கள் அணியில் எப்போதும் தொடரலாம் என பார்சிலோனா அணி தெரிவித்துள்ளது. (ரி)

# தீவுகள் சுமாரான தொடக்கம்



சாமுவேல்ஸின் அரைச் சதமும் டுவைன் பிராவோவின் நிதானமும் கைகொடுக்க சரிவில் இருந்து மீண்டு சுமாரான தொடக்கத்தை வெளிப்படுத்தியது மேற்கிந் தியத் தீவுகள்.

மேற்கிந்தியத் தீவுகள் எதிர் இங்கிலாந்துக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்று முன்தினம் மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து களத்தடுப்பைத் தீர்மானிக்க களத்தில் பிரீத்வைட்டுடன் சிமித். மூன்றாவது பந்துப்பரிமாற்றத்திலேயே பிரித்வைட் ஒரு ஓட்டத்துடன் ஓட்டம் பிடித்தார். மேற்கிந்தியத் தீவுகளின் தடுமாற்றம் பிரீத்வைட்டில் இருந்து ஆரம்பமானது. சிமித்தும் பதின்மத்துடன் திரும்ப மேற்கிந்தியத் தீவுகள் 28–2. துவண்டிருந்த மேற்கிந்தியத் தீவுகளை டுவைன் பிராவோவின் ஒத்துழைப்புடன் தூக்கி நிறுத்தினார் சாமுவேல்ஸ். மேலதிக இலக்குகள் இழப்பின்றி 50 ஓட்டங்களை எட்டியது தீவுகள். பிராவோவு சுப்பராக இல்லாவிட்டாலும் சுமாராக 35 ஓட்டங்களுடன் பவிலியனுக்குச் சென்றார். களத்தில் வதை மன்னன் சந்தர்போல். ஆனால் ஒரு ஓட் டத்தைத் தாண்டி அவரால் பயணிக்க முடியவில்லை. ஆனால் மறுமுனையில் அரைச் சதம் கடந்தார் சாமுவேல்ஸ். முதலாம்நாள் ஆட்ட நேர முடிவில் தீவுகள் 188–5. சாமுவேல்ஸ் 94 ஓட்டங்களுடனும் ரமடின் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ஜோர்தான் இரண்டு இலக்குகளையும் ஸ்ரோக்ஸ், அண்டர்சன், புரோட் ஆகியோர் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (த–ரி)

# அஸ்வின் அற்புதமாக வீசுகிறார்

நியூஸிலாந்தின் விக்டோரி அஸ்வின் பந்து வீச்சை தனிச் சிறப்பு வாய்ந்தது என்று புகழாரம் சூட்டி யுள்ளார்.

விக்டோரி தெரிவித்ததாவது "சமீபத்தில் நடந்த உலகக் கிண்ண தொடரிலும் சரி நடப்பு ஐ.பி.எல் தொடரிலும் சரி அஸ்வினின் பந்துவீச்சு அற்புதமாகஉள்ளது. முழங்கையை மடக்கி வீசுவதில் கட்டுப்பாடுகள் வந்த பிறகு சுழல் பந்துவீச்சு சற்றே மாறியுள்ளது. மாறுதல் என்று சொல்லுவதையும் விட கடினப்பட்டு விட்டது என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் மரபான சுழல் பந்து வீச்சாளர்கள் தங்களது திறமைகளினால் நம்பமுடியாத அளவுக்கு வெற்றி பெற முடியும் என்பதை அஸ்வின் தன் பந்து வீச்சினால் நிரூபித்துள்ளார்"–என்றார். (ரி)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வேலையாள் தேவை

கொழும்பில் உள்ள பிரசித்தி பெற்ற ADVERTISING AND CONSTRUCTION நிறுவனம் ஒன்றுக்கு WELDING வேலை செய்யக்கூடிய வேலையாள் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
0779134524, 0777862409

## A/L 2017
(கலை, தொழில்நுட்பப் பிரிவுகள்)

புவியியல்
N.BABU

- ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
- அலகுப் பரீட்சைகளுடன் கூடிய வழிகாட்டல்.
- சாதாரண தரத்தில் (O/L) புவியியல் படித்திருக்க வேண்டிய அவசியமில்லை.
- புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆட்ஸ் அக்கடமி புத்தூர்
DMI யாழ்ப்பாணம்
C-C-A சுன்னாகம்
உயர்கலைக் கல்லூரி மீசாலை
பிரஸ்மன் மானிப்பாய்


## மரண அறிவித்தல்



### கிருஷ்ணபிள்ளை செல்வராசா

அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை செல்வராசா. கடந்த 19.04.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை-கனகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-நாகம்மா தம்பதியரின் மருமகனும், இலங்கை நாயகியின் கணவரும், செந்தூரன், காலஞ்சென்ற தனுஷா மற்றும் யசிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லக்ஷணாவின் அன்பு மாமனும், காலஞ்சென்ற பூங்காவனம் மற்றும் விசுவலிங்கம், ராசலிங்கம், லலிதாராணி, ஜெயராணி, சறோஜினிதேவி, சுகிர்தராணி, பாலேஸ்வரி, பத்மாவதி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற குணரட்ணம், பத்மநாதன், நடனசபேசன், காலஞ்சென்ற சிவபாலசுந்தரம் மற்றும் நகுலன், ஜெயச்சந்திரன், ரட்ணம்ரவி, காலஞ்சென்ற ராசேஸ்வரி மற்றும் அம்பிகாதேவி, கண்மணி, மங்களம், விஜயலட்சுமி, ரதிதேவி, சண்முகலிங்கம், தர்மராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2015) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் (மகன்)
T.P: 0774645870

முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.


## காணி விற்பனைக்கு

தம்பையா பண்டிதர் வீதி, அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாயில் அமைந்துள்ள கிணறு, முன்பின் இரு வழிப்பாதையுடனான 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

விவரங்களுக்கு: 078 9133183

## டுபாய் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

| | |
|---|---|
| Super market cleaner - 30 | 750 + OT + 3 Time Food |
| Press man | 1100 + OT |
| Washerman | 1100 + OT |

மூன்று வேளை உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். எதிர்வரும் 24ஆம் திகதி நேர்முகப்பரீட்சை எமது நிறுவனத்தில் நடைபெறும்.

Lanka Voice :- 0777929475
lankavoicejobir@gmail.com
Capital Recruitment International (Pvt) Ltd,
No:130, 3/1, 3rd Floor, Grand Pass Road, Colombo-14

## உதயா ஜுவெல்லர்ஸ்

அக்ஷய திருதியை தினத்தில் (21.04.2015) உதயா ஜுவெல்லரியில் நகை வாங்கியவர்களில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்ட 05 அதிஸ்டசாலிகள் விவரம்.

| | |
|---|---|
| A. நடராசா | நவக்கிரி, புத்தூர். |
| S. ராகினி | பாலஸ்தான் வீதி, ஊரெழு மேற்கு. |
| S. ஈஸ்வரி | கொக்குவில் மேற்கு. |
| T. உமாலினி | கோவிற்கடவை, துன்னாலை மத்தி. |
| S. இராஜபூபதி | 10/2, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர் மடம். |

மேல் குறிப்பிட்ட அதிஷ்டசாலிகள் தேசிய அடையாள அட்டையுடன் நேரில் வரவும்.

உதயா ஜுவெல்லர்ஸ்
இல.81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4434

## British College of Higher Studies
வழங்கும் மாபெரும் கட்டணக் கழிவு
50 % Discount

### Spoken English with Grammar
~~6500/=~~ Duration : 80 Hrs 3250/=

### Diploma in English
~~9000/=~~ Duration : 110 Hrs 4500/=

வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திறனையமாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாகவின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

### English For Higher Education
~~10'000/=~~ Duration : 90 Hrs 5000/=

பல்கலைக்கழக மாணவர்கள், A/L, O/L பரீட்சை எழுதிய மாணவர்கள், மற்றும் உயர் கற்கைநெறிகளைக் கற்கும் மாணவர்கள் போன்றவர்களின் நலன் கருதி இக் கற்கை நெறியானது ஆரம்பமாகவுள்ளது.

Batches Start on
Batch I : 25/04/2015 | 08.30am to 12.30pm | Batch III : 01/05/2015
Batch II : 27/04/2015 | 01.00pm to 05.00pm | Batch IV: 04/05/2015

BCHS
British College of Higher Studies
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913, 0777222422, 0714299935



வெளிவந்துவிட்டது ஏப்ரல் இதழ்
கம்ப்யூட்டர் ருடே
மேலதிக விவரங்களுக்கு:
021 5 677 600
சகல உதயன் முகவர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்

- Windows 10 இன் புதிய வசதி
- HTC மொபைல் புதிய அறிமுகம்
- ஆங்கிலம் கற்க இணையத்தளம்
- Dropbox பயனாளர்களே உஷார்
- கண்கள் கவனம்
- WiFi signal அதிகரிக்க
- Domain கவனம்
- கணினி வைரஸ்


இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.